
வெறுங்கூடு
BALU
BROS

# வெ று ங் கூ டு

ஆசைத்தம்பி

பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை 1.

முதற் பதிப்பு—மே, 1952.
இரண்டாம் பதிப்பு – செப்டம்பர், 1956.

விலை ரூ. 1—0—0

அச்சிட்டது : கோல்டன் பிரஸ், சென்னை—7.

# கதையின் கருத்து

மனிதன் ஒரு வேடிக்கையான பொருள். விந்தையான படைப்பு, மானிடக் கூட்டத்தில், தான் வகுத்துக் கொண்ட ஒன்றையே உயிர் என நம்பி, அதனை அடைவதற்கு தனது வழி முறையையே சிறந்ததாக நம்பி, அந்த முயற்சியில் தம் நல் உயிரையும் இழக்கும் வணங்காமுடி மன்னர்கள் துரியோதனர், இராவணர் போன்றோரும் உண்டு. நிலைமைக்கு ஏற்ப வழி முறைகளை மாற்றி அமைத்துக்கொண்டு செயலில் ஈடுபடும் மாரீசர்களும், சகுனிகளும் உண்டு.

ஆசைத்தம்பி இந்நூலில் காட்டும் மதனராஜ், இரண்டாவது கூட்டத்தைச்சேர்ந்தவன், ஒரே கொள்கையை உடைய துரியனைச் சித்தரிப்பது சுலபமாக இருக்கலாம். ஆனால், சகுனியைப் போன்று சூழ்ச்சி நிறைந்த ஒருவனைப் படம் பிடித்துக் காட்டுவது இலகுவான வேலையல்ல. ராணியின் காதலை இழந்து விடுகிறான் மதனராஜ், உடனடியாக அவனைக் கொள்ளைக்காரனாகவோ, கொலைகாரனாகவோ, அல்லது பலாத்காரம் செய்யும் பாதகனாகவோ மாற்றி இருக்கலாம். ஆனால் ஆசைத்தம்பியின் மதனராஜ் அப்படி எல்லாம் அவசரப்பட்டு ஒன்றும் செய்துவிடவில்லை. ராணியின் மணமாலை அவனுக்குக் கிடைக்கவில்லை. ஆனாலும் அவளிடம் மண வாழ்வைப் பெற்றுவிடுவது என்று முடிவு செய்கிறான்.

தன் உயிரினும் மேலான காதலனைப் பிரிந்து விடுகிறாள் ராணி. ஆனால் அவளுக்குத் தன் காதலன் நினைவே இல்லாமல் செய்துவிடுகிறான் மதன ராஜ். அது மட்டும் இல்லை; அவளை ஆடவும், பாடவும், ஆனந்தமாக வாழவும் செய்துவிடுகிறான். ராணி மட்டும் இல்லை, வேறு யாராக இருந்தாலும் அவனுடைய வல்லமை, அந்நிலைக்குத்தான் கொண்டுவரும். அவ்வளவு பொருத்தமாகச் சந்தர்ப்பங்களை அமைத்துக் கதையைப் பின்னியுள்ளார் ஆசைத்தம்பி.

வஞ்சத்தையும் சூழ்ச்சியையும் உயிரும் உணவுமாகக் கொண்டு, அதைத் தமது திறமை என்னும் போர்வையால் மறைத்து, மக்கள் மன்றத்தில் உயர்ந்தவர் என உலவிவரும் போலி மனிதர்கள் இன்று பலர் உள்ளனர். அந்த வேடிக்கை மனிதருக்கு ஒரு உருவம் கொடுத்துக் காட்டுவதுதான் வெறுங்கூடு.

எங்கள் நிலைய வாயிலாக வரும் ஆசைத்தம்பியின் நான்காவது வெளியீடு வெறுங்கூடு. அடுத்து வர இருப்பது கிழக்கும் மேற்கும். இம் முயற்சியில் எங்களை நன்கு ஊக்குவித்து வரும் தமிழ் இளைஞர் உலகிற்கும் ஆசைத்தம்பி அவர்களுக்கும் எங்கள் நன்றி.

சென்னை.
28—4—'52.

அ. செல்லப்பன்.

# வெறுங் கூடு

## 1. வாழ்க்கைச் சுழலில் சுகுமார்!

என் காதலி! எவ்வளவு நல்லவள்? எனக்காக எவ்வளவு சிரமப்பட்டாள்? என் தாய் தகப்பன்கூட அத்தனை பிரியம் காட்டியதில்லை! எனக்காக அவள் பட்ட கஷ்டம் கொஞ்சமா?

அவள் தந்தைக்குத் தெரியாமல் எனக்கனுப்பிய பலகாரத் தினுசுகளுக்கு விலைப்போட்டுப் பார்த்தால்...? பட்சண வகைகளைக் கணக்குப் போட்டுப் பார்த்தால்...? அடேயப்பா!.........விற்பனைவரி கூடக் கட்டவேண்டிய திருக்கும்!

அவள் உபசரிப்பு, வரவேற்பு இப்படி அப்படி அல்ல! இனிமையான குரல் படைத்த குயிலுக்கு மனிதர்களைப் போலப் பேசத் தெரிந்தால்.........? தேனின் இனிமையை விடக் கனிவுள்ள விழிபடைத்த மான்—மருண்டு ஓடாமல், இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டே இருந்தால்.........? பேசும் குயில், என் காதலி! மருளாத மான், என் காதலி!

காதல் பெரிதா? கடமை பெரிதா?

கடமைதான் பெரிது! இப்படிப் பல மேடைகளிலே பேசியிருக்கிறேன்! பல புத்தகங்கள் எழுதி யிருக்கிறேன், ஆனால்—? என் காதலி இந்தக் கேள்வியைக் கேட்கும் போது? "கடமை அல்ல, காதல்தான் பெரிது!" இப்படி

ஏன் சொன்னேன்? எனக்கே இன்னமும் புரியவில்லை! அறியாமையா? சேச்சே!

பெரியார் இராமசாமி, மகாத்மா காந்தி, வ உ. சிதம்பரம், ஜவகர் போன்ற தேசபக்தர்களெல்லாம் தங்கள் தங்கள் துணைவியை, காதலியைவிட்டு வருடக் கணக்கில் சிறையில் இருக்கவில்லையா? இந்தக் கஷ்டங்களை அனுபவிப்பதற்குக் காரணம் கடமைதானே?

வெளி உலகிலே இன்பமான காதல்—காதலி—களிப்பு! ஆனால் இவ்வுலகத் தொடர்பு அற்ற சிறையிலே? கம்பி – கடும் இருட்டு—கக்கூஸ் வாடை! இவைகளோடு துன்பப்பட வேண்டுமென்பது தேசபக்தர்களின் தலை எழுத்தா?

அவர்கள் நினைத்தால்......... ஆனந்தமாக அல்லல் படாமல் இருந்திருக்கலாம். மொழி — நாடு — சமூகம் ஆகியவை எக்கேடு கெட்டால் என்ன, என்று ஒவ்வொருவரும் பேசாமல் இருக்கலாம்! அப்படி இருந்தாலும்... சாப்பாட்டுக்கு இல்லாமலும், வாழ்க்கையிலே சந்தோஷம் இல்லாமலும் அந்தத் தியாகிகள் செத்துப் போய்விட மாட்டார்கள்!

பின் ஏன் சிறைக்குச் சென்றார்கள்? தடியடி பட்டார்கள்? துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஆளானார்கள்? தாளமுத்து நடராஜன் எதற்காகச் சாகவேண்டும்? குமரன் மண்டை உடைபட்டு ஏன் மாளவேண்டும்? தில்லையாடி வள்ளியம்மை வாழ்க்கையை ஏன் இழக்க வேண்டும்? மகாத்மாவின் மார்பைத் துப்பாக்கிக் குண்டுகள் ஏன் துளைக்கவேண்டும்?

கடமை! கடமை! கடமை!

ஆனால்?— என் காதலியிடத்திலே காதல்தான் பெரிது என்று ஏன் சொன்னேன்? காதல் தெய்வீகம் என்பதினாலா? காதல் தெய்வீகம் என்றால், அதைவிடச் சிறந்ததான கடமையை எதற்கு ஒப்பிடுவது? போதையில்

மனிதன் எதை எதையோ உளறிவைக்கிறான்! அதையும் உலகம் நம்புகிறது! பின் எந்த ஆதாரத்தைக்கொண்டு காதல் பெரிது என்று சொல்வது?

சிம்சனுக்காகச் சிம்மாசனமே வேண்டாமென்று சொன்ன எட்வர்ட் இளவரசருக்காகவா? அல்லது காதலி சீதைக்காக இராவணனோடு கடும்போரிட்ட இராமனுக்காகவா? எப்படியோ காதலித்து விட்டேன்; அம்பிகாபதி அரசன் மகனாயிருந்தாலும் சரி, ஆண்டியின் மகனாயிருந்தாலும் சரி, அவனோடு வாழ்வேன் அல்லது மாண்டுபோவேன், என்று காதலை உணர்ந்து கடைசிவரை உறுதியாக இருந்தாளே.........அமராவதி.........அவளுக்காகக் காதல்தான் பெரிது என்று சொல்வதா?

காதலுக்காகச் செத்தவர்கள் எத்தனைபேர்? விரலை விட்டு எண்ணிவிடலாம்! ஊருக்கு ஒருவர்கூட இருக்காது! அங்கும் இங்குமாக ஏதோ ஒன்று! இலக்கியத்திலே.........ஒரு லைலா! ஒரு கயஸ்! ஒரு ரோமியோ! ஒரு ஜூலியட்! மிகமிகச் சொற்பம்! ஆனால்—

கடமைக்காக உயிர்நீத்தவர்? கோடானுகோடி! மதவெறியையும் வகுப்பு வெறியையும் ஒழிக்கப் பாடுபட்டவர்களிலே ஒழிந்தவர்களின் கணக்கை எடுக்க முடியுமா? கழுவில் ஏற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை என்ன? பழமையை, மூடக்கொள்கையை எதிர்த்தவர்களின் முடிவு என்ன? சர்வாதிகார ஆட்சிக்கு விரோதமாக நடந்த சண்டையிலே மாண்டவர்கள் கொஞ்சமா? உயிரோடு கொளுத்தப்பட்ட ஜான்பாட்ளி, பிரான்சைக் காக்கச் சென்று எரிக்கப்பட்ட ஜோன் ஆப் ஆர்க், விஷம் கொடுத்துக் கொல்லப்பட்ட சாக்ரட்டீஸ், சிலுவையில் அறையப்பட்ட இயேசுநாதர்.. ......இப்படியே பார்த்தால்...... கொஞ்சமா?

பின் ஏன் என் காதலியிடம் காதல்தான் பெரிது என்று சொன்னேன்? காதல் பெரிதா, கடமை பெரிதா?

இது அசட்டுத்தனமான கேள்வி! காதல்தான் பெரிது! இது கண்மூடித்தனமான பதில்! ஏன்?—

தாய் சிறந்தவளா? தகப்பன் சிறந்தவனு? ஒரு நன்மகன் என்ன பதில் சொல்ல முடியும்? இருவரும் சிறந்தவர்கள்தான்! அதேபோல்தான் காதலும் கடமையும்! இரண்டும் சிறந்தவைதான்; பெரியவைதான்!

என் காதலி கேட்டபோது இந்த விளக்கம் என் மூளைக்கு எட்டவே இல்லை. நான் அவள்மீது கொண்ட மயக்கம் அதற்குக் காரணமாய் இருக்கலாம்!

நான் ஏன் அவளிடத்திலே அவ்வளவு மயங்கினேன்! என்னை எத்தனை பெண்கள் மயக்கப் பார்த்தார்கள்? அதற்கெல்லாம் மயங்காத நான் அவர்களுக்கு மட்டும் ஏன் என்னை புன்னகையால், மோகனப் பார்வையால், அலங்கார நடையால், வசப்படுத்த நினைத்த மற்ற பெண்களிடம் அழகில்லையா? ராஜசுந்தரி சாதாரணமானவளா?

ராஜசுந்தரியைப் பேரழகி என்று என் நண்பர்களே வர்ணிப்பார்கள்! ராஜா என்ருல் மனிதர்களிலேயே பெரியவன்! அதேபோல்தான் சௌந்தரியத்திலே அவள் ராஜா! அவள் தட்டைக்குச்சியுமல்ல, தடிப்பும் அல்ல! இரண்டுக்கும் இடையே உள்ள 'மீடியம் சைஸ்!' இவளுக்காகப் பலர் தவம் கிடந்தார்கள்!

தவம் செய்வதற்குத் தக்க காலமா இது? பழைய காலமாய் இருந்தால் ஆண்டவன் மூதற்கொண்டு அப்சரஸ்கள் வரை நேரில் காட்சியளிப்பார்கள்! என்ன வரம் கேட்டாலும் இல்லையென்று சொல்லாமல் கொடுப்பார்கள்! மனைவியையே தானமாகக் கொடு என்று ஒரு பரதேசி கேட்டாலும் மறுக்காமல் மனமுவந்து கொடுத்து விடுவார்கள் பக்தர்கள்! ஆனல், இந்தக் கலியுகத்தில்? கடவுளும் கல்லாகிவிட்டார்! பக்தர்களும் பகுத்தறிவு பெற்றுவிட்டார்கள்! இதனல் தவம் தம்பிடி அளவு கூடப் பிரயோஜனப் படுவதில்லை!

இது என் நண்பர்களுக்குத் தெரிந்தால்தானே! ராஜசுந்தரி விஷயத்தில் அவர்கள் குருடராகி விட்டார்கள்! அது அவர்களின் குற்றமல்ல; காதலின் குற்றம்! காதலுக்குத்தான் கண் கிடையாதே! அப்படியிருக்கக் காதலிப்பவர்கள் மட்டும் என்ன? பார்வை உள்ளவர்களா? இல்லையே! அவர்களும் குருடர்கள்தானே! அதனாலோ என்னவோ ராஜசுந்தரியை வட்டமிடுவதிலே பலகாரத்தைக் கண்டு வட்டமிடும் பருந்தைவிட மோசமாக இருந்தார்கள்!

பருந்து குறிவைத்தால் அதன் குறி அநேகமாகத் தவறுவதில்லை. ஆனால், என் நண்பர்கள்.....? வான்கோழி மயிலாக முடியுமா? காக்கை கருடனாக முடியுமா? ராஜசுந்தரியைச் சுற்றிச் சுற்றிக் கால் செருப்புத் தேய்ந்ததும் மடிப்புக் கலையாத சட்டையிலே மண் ஒட்டியதும், பவுடர் பூசிய முகத்திலே வியர்வைத் துளி அரும்பியதும், "உஸ்" என்ற பெருமூச்சும் தாம் அவர்கள் கண்ட பலன்!

"கிட்டாதாயின் வெட்டென மற!" இந்தப் பழமொழி அவர்கள் அறிவுக்கு எட்டவே இல்லை. "முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்!"; "Try and try again you'll succeed at last!"—இந்தப் பழமொழிகள்தான் அவர்கள் பகுத்தறிவிலே உதயமாயின! படிப்பிலே ரொம்பவும் பிற்போக்காக இருப்பவன், பரீட்சையிலே நிச்சயமாகத் தேர்ச்சிபெற முடியாது என்று தெரிந்துங்கூட, ரிசல்டின் போது தன் நம்பர் வந்திருக்கிறதா என்று பார்ப்பதில்லையா? அதைப்போலத்தான் ராஜசுந்தரியிடத்திலே அவர்களுக்கு நம்பிக்கை இருந்தது!

ஒரு பெண்ணுக்கு ஒருவனா, இருவரா? ஒரு கூட்டுக் கம்பெனியே முயற்சித்தது! ஒரு பெண்ணுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல ஆடவர்கள் நாயகனாக இருந்தது மகாபாரதத்தைத் தவிர, வேறு எதிலுமே காண முடிவதில்லை! இது என்ன இதிகாச காலமா ஐந்துபேர் சேர்ந்து திரௌபதியை,—இல்லை இல்லை—ராஜசுந்தரியை அடைய? இதுதான் இருபதாம் நூற்றாண்டாயிற்றே? இருதார

மணம் சட்டவிரோதம் என்ற காலமாயிற்றே? முடியுமா? இதையெல்லாம் சிந்திக்க அவர்களுக்கு நேரமேது?

சரியாகப் பகல் பன்னிரண்டு மணிக்கு நான் இருக்கும் இடத்திற்கு அவர்கள் வந்துவிடுவார்கள். அப்போது தான் அவள் பள்ளிக்கூடம் விட்டு வருவாள். கையில் சிகரெட்டுடன் காத்துக்கொண் டிருப்பார்கள். அவள் வருவாள்; ஒரு சிரிப்பைத் தூக்கி வீசுவாள்! வாயில் இருந்து வெளி வருகிற சிகரெட் புகை சில வினாடிகளில் மறைந்து விடுகிறதல்லவா? அதைப்போலவே அவளும் போய்விடுவாள்!

அவள் சிரிப்பைப் பற்றிச் சிறு ஆராய்ச்சி நடக்கும்!

"சிரிக்கும்போது அவள் கன்னத்திலே விழுந்த குழியின் எழிலைப் பார்த்தாயா?"

—இப்படி ஒருவன்!

"புருவத்தின் வளைவைப் பார்த்தாயா?"

—இப்படி மற்றொருவன்!

"கண்கள் சுழன்றதைப் பார்த்தாயா?"

—இப்படி இன்னொருவன்!

"உதட்டின்மீது நாக்குச் செய்த நர்த்தனத்தைக் கவனித்தாயா?"

—இப்படி ஒரு இன்வெண்டர்!

இந்தக் கற்பனைகளுக்குப் பிறகு, இனி மாலையில் அவளைச் சந்திக்கவேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறும். அதோடு சபையும் சாப்பாட்டுக்காகக் கலைக்கப்படும்!

பைத்தியங்கள்! இப்படியா தினமும் நிற்கும்?—இப்படி நினைத்து அவள் சிரித்திருக்கக் கூடாதா? இப்படித் தான் நான் எண்ணினேன். ஆனால்—? ராஜசுந்தரி என்னைப் பார்த்துத்தான் சிரித்தாளாம்!

"காதலரே

கண்டவுடன் காதல் என்பார்களே, அதா கத்தான் இருக்கவேண்டும்! உங்களைக் கண்ட நாளில் இருந்து என் கண்களுக்குத் தூக்கமே இல்லை, என் உணர்ச்சிக் கடலில் தங்களைப் பற்றிய சிந்தனை அலைகளுக்கு ஓய்வே இல்லை. உங்களை எப்போது பார்ப்பது? பேசுவது?— இப்படி ஒரே ஆவல்! நீங்கள் முயற்சித்தால்...... இருவரும் தம்பதிகள்! அந்த நாள் வருமா?"

தங்கள் காதலி,

சுந்தரி

—இப்படி ஒரு கடிதம் எனக்கு வந்தது. இந்தக் கடிதத்தையும், அதை எழுதவேண்டிய சாதனங்களையும் முதலில் எந்த விஞ்ஞானி கண்டுபிடித்தானோ தெரியாது. அதுமட்டும் தெரிந்தால்......அவனுக்கு வருடா வருடம் பேசும் உரிமை இல்லாத இந்தக் காலத்துக் காதலர்கள் ஒரு திருவிழாவாவது கொண்டாடுவார்கள்!

சில சமயங்களில் மனிதர்கள் எவ்வளவு தவறுகக் கணக்குப் போடுகிருர்கள்? 'கண்ணுல் பார்ப்பது பொய்!' என்ற பழமொழி என் நண்பர்கள் விஷயத்தில் எவ்வளவு உண்மையாயிற்று? இந்தக் காதல் கடித விஷயத்தை என் நண்பர்கள் உணர்ந்ததும் அவர்கள் முகம் மூன்றும் பேஸ் தாகி விட்டது.

"இவள் என்ன பெரிய ரதியோ? போயும் போயும் இவளை அடைய முயற்சித்தோமே?"—கடைசியாக என் நண்பர்கள் கக்கிய வார்த்தைகள்! 'எட்டாத பழம் புளிக்கும்' என்று சொன்னுல்தானே மனதிற்குச் சிறிது ஆறுத லாவது ஏற்படும்? அந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்தான் என் நண்பர்கள். அதற்கப்புறம் ராஜசுந்தரியைக் கண்டால் தலையைக் குனிந்து கொள்வார்கள்! ஆனல் நான்? அவள் வாடையே கூடாதென்று எட்டிப்போய் விடுவேன்.

இன்று அவள் இன்னொருவனின் மனைவியாகிவிட்டாள். என் வாழ்க்கையிலே, ராஜசுந்தரி மட்டுந்தானா?

"சுகுமார்! என்ன இருந்தாலும் நீ அதிர்ஷ்டசாலிதானப்பா. நல்ல முகராசிக்காரன் நீ! இல்லாவிட்டால் பலாப் பழத்தைக் கண்ட ஈக்களைப் போல, பெண்கள் உன்னை மொய்ப்பார்களா?"

—இப்படி என்னைப்பற்றி என் நண்பர்கள் புகழுரை கூறுவார்கள்! நான் பலாப்பழந்தான்; ஆனால்—அறுக்காத பலாப்பழம்! ஈக்கள் நிச்சயமாக என்னைச் சுவைக்க முடியாது! ஆனால் அவள்? அவளுக்கு மட்டும் நான் அறுத்த, இனிப்புள்ள பலாப்பழம்! மற்றவர்கள் என்னை விரும்பினால்......பலாப் பழத்தைப் போலவே கரடுமுரடான தோற்றத்துடனும், முட்களைப் போன்ற முரட்டுத்தனத்துடனும் இருந்துவிடுவேன்.

சிறு வயதிலே......எனக்கு இன்னும் நன்றாக நினைவிருக்கிறது, கன்னிப் பெண்களில் இருந்து கல்யாணமான குமரிப் பெண்கள்வரை என்னைக் கண்டால்..... கட்டி அணைத்து முத்தமிடுவார்கள். என் பன்னிரண்டாவது வயது வரை இப்படி எத்தனையோ முத்தங்கள் பெற்றிருக்கிறேன். "பாவம்! சுகுமாரன் தாயில்லாத பிள்ளை!"—இப்படிச் சொல்லிக்கொண்டே என்னைத் தூக்கமுடியாத பெண் கூடத் தூக்கி ஒரு 'இச்' வைப்பாள். ஆனால்—

வாழ்க்கையிலே சலிப்புத் தட்டி, ஐந்தாறு குழந்தைகளுக்குத் தாயாகி, ஆசை என்ற அமுது அடியோடு வற்றிவிட்ட பெண்கள் இருக்கிறார்களே, அவர்கள்? ஏட்டிக்குப் போட்டியாக இருப்பார்கள்! என்னைக் கண்டால் அவர்களுக்கு சுத்தமாகப் பிடிக்கிறதில்லை! அவர்களுடைய பிள்ளைகளுக்கெல்லாம் என்னோடு சேரக்கூடாது என்று உத்தரவு போடுவார்கள்!

நான் எந்த வகையிலே கெட்டவன்? ஆடுவேனும்! அடிப்பேனும்! கெடுத்துவிடுவேனும்! போக்கிரித்தனம் செய்வேனும்! அப்படி நான் என்ன செய்துவிட்டேன்?

யாருக்கு என்னால் மோசம் வந்து விட்டது? யார் வீட்டு முதல் திருடுபோயிற்று! அல்லது சிறுவயதிலே 'காலிப் பயல்' என்று பெயர் எடுத்த நான் என்ன தாழ்ந்து போய் விட்டேன்? என்னோடு அன்று சேராமல் இருந்த அந்தக் கிழடுகளின் நல்ல பிள்ளைகளெல்லாம் இன்று எந்த உச்சியிலே இருக்கிறார்கள்?

இன்று என்னை—ஆம்; போக்கிரிப் பயலை — இந்த நாடே புகழ்கிறது! அரசாங்கத்திற்கு என்னைக் கண்டால் அச்சம் இருக்கிறது! எழுதுவதிலே, பேசுவதிலே கெட்டிக்காரன் என்று எதிரிகளே பேசுகிறார்கள்! இன்னொரு உலகம் என்னைத் தியாகி என்கிறது!

இந்தக் கிழடுகள் என்ன தீர்க்கதரிசிகளா? படியாத இந்தக் கூட்டத்திற்குப் படிப்பு என்ன தெரியும்? ராபர்ட் கிளைவ் சண்டித்தனம் செய்வதிலே சிறுவயதில் பெயர் பெற்றிருந்தான்! வழியிலே போவோர் வருவோர் மீது கூடச் சாக்கடை நீரை வாரியிறைத்துப் போக்கிரித்தனம் செய்தவன்தான்! சுற்றத்தார் மட்டுமல்ல, பெற்றோர் உட்பட இவன் இந்தியாவுக்குப் போயாவது செத்துத் தொலையட்டும் என்று கருதியே அவனை அனுப்பி வைத்தார்கள்! அந்த முரடன் முடிவில் இந்தியாவையே வெள்ளைக்காரர்களுக்குப் பிடித்துக் கொடுத்தான். இன்று அறிஞர் உலகம் அவனைப் போற்றுகிறது! இந்தியாவின் பிரிட்டிஷ் சரித்திரத்திலே கிளைவ் பெயர்தான் முதலில் தீட்டப்பட்டிருக்கிறது. முரடர்கள்தான், இளமையில் சோம்பிக் கிடக்காது ஆடித் திரியும் இளங்காளைகள்தான், பெரும்பாலும் அறிவாளிகளாக முடியும்! இது சரித்திரத்தின் முடிவு!

நம் நாட்டுப் பாட்டிமார்களுக்குச் சரித்திரம் தெரியவா போகிறது? ஏன் — புராணத்திலே தேர்ச்சி பெற்றவர்களாயிற்றே? கோபால கிருஷ்ணனின் பால்ய லீலைகள் கொஞ்சமா? வெண்ணெய் திருடுவதோடு நின்றானா? பெண்கள் குளிக்கும்போது குளக்கரைக்குப் போவதும், அவர்கள் சேலையைத் தூக்கி மரத்தில் வைப்ப

தும், 'வெட்கப்படாமல் கையை மேலே தூக்கிக் கும்பிடுங்கள் ! என்று கூறுவதும், இன்னொரன்ன'...எத்தனையோ லீலைகள் செய்தான் ! அந்தக் கண்ணனை இந்தக் கிழட்டுக் கட்டைகள் காலிப் பயல் என்று சொல்கின்றனவா ? கடவுள் என்கிறதுகள் ! அவனுக்கு ஆலயம் கட்டி அர்ச்சனை செய்கிறதுகள் !

அவர்களைச் சொல்லி என்ன பயன் ? என் தந்தையே என்னைத் தறுதலைப் பயலே என்பார்! தாயில்லாப் பையனாயிற்றே என்று கொஞ்சங் கூடத் தயவு காட்ட மாட்டார்! இரக்கம் என்பது என் தந்தையிடம் மருந்துக்குக் கூட இருக்காது.

"ஏண்டா, சுகுமார் ! என் வயத்தில் பிறந்து என் உசிரை ஏண்டா வாங்குறே? எங்கேயாவது விழுந்து சாவது தானேடா?"

"என்னப்பா இப்படிப் பேசுகிறீர்கள் ? நான் என்ன செய்துவிட்டேன் ?"

"அடுத்த தெரு அம்புஜம் உன்னைப் பார்த்துச் சிரித்தாளாமேடா ?"

—இது என்ன கேள்வி? நான் வீதியிலே சென்றால் எத்தனையோ பெண்கள் என்னைப் பார்க்கிறார்கள்! சிரிக்கிறார்கள்! அதற்கு நானா பொறுப்பு ? இந்த நாகரீக நாரிமணிகளுக்காக நான் நடமாடக் கூடாதா? அம்புஜம் என்னைப் பார்த்துச் சிரித்தாள் என்றால்......'ஏண்டி அம்புஜம் ! என் மகனைப் பார்த்து ஏனடி சிரித்தாய்!' இப்படி அவளைக் கேட்பதல்லவா முறை ?

இந்தப் பெண்களும் சுத்த மோசந்தான் ! எவனாவது தங்கள் இஷ்டத்திற்கு இசையாவிட்டால் .....இல்லாத பொல்லாத பழிகளை எல்லாம் அவன்மீது சுமத்தி விடுவார்கள் ! பெண்கள் பேச்சைக் கேட்கும் பேயர்கள் வாழும் உலகத்திலே ஆண்கள் பேச்சு அம்பலம் ஏறுமா? இப்படித்தான் என் மீதும் பழிகள் வந்து கொண்டிருந்

தன. ஆனால்—இவ்வளவுக்கும் நான் நிரபராதி! அன்று முதல் இன்று வரை அவள்தான் என் காதலி!

'அப்பா! அடுத்த வீட்டு ராணிதான் என் காதலி! மற்ற பெண்களை நான் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை!' இப்படி நான் என் தந்தையிடம் சொல்ல முடியுமா? இப்படி நான் சொல்லியிருந்தால்......வெள்ளரிப் பழம் போல என் முதுகு பிளந்திருக்கும்! எல்லாவற்றிற்கும் நான் ஊமையாகத்தான் இருந்தேன்!

"ஊமை ஊரைக் கெடுக்கும் என்பார்கள்! இவன் பெரிய நெஞ்சழுத்தக்காரன்! ஆள் வாட்ட சாட்டமா இருக்கான்லே? இதுவும் செய்வான் இன்னமும் செய்வான்?" என் காதலி ராணி இருக்கிற அடுத்த வீட்டில் இருந்து, அகில உலகம் பூராவும் இப்படித்தான் எனக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தார்கள்! குடிப்பதற்குப் பச்சைத் தண்ணீர் கூடப் பக்கத்து வீட்டிலே எனக்குக் கொடுக்க மாட்டார்கள்! ஆனால்—என் காதலி ராணி?

மாடியில் இருந்து கொண்டே ஒரு பொட்டலத்தைத் தூக்கிப் போடுவாள்! பிரித்துப் பார்த்தால்.........பிரியமான பட்சணம் இருக்கும். சிறு வயதிலே நாங்கள் சேர்ந்து விளையாடுவதற்குக் கூட 144 போட்டார்கள்! 144-ஐ மீறி விளையாடினால்......அடி என்ற அடக்குமுறை இருவர் வீட்டிலும் கிடைக்கும்! ஓடி வருகிற நதியை அணை போட்டுத் தடுக்கலாம்! ஆனால், அது கடலில் சங்கமம் ஆவதைத் தடுக்க முடியுமா? எங்களை எத்தனையோ தடவை பாது காப்புக் கைதிகளாக வைத்தார்கள்! வைத்தால் என்ன? எங்கள் உணர்ச்சி 'அண்டர் கிரவுண்டு' வேலை செய்யாதா? அந்த உணர்ச்சியை இவர்களால் சிறைபடுத்த முடியுமா? முடிந்திருந்தால்......இன்று ராணி என் காதலியாக, ஏன்—என் மனைவியாக இருப்பாளா?

கண் இருந்தும் அதை இழந்த கபோதிக் கூட்டம்! இரவுக்குப்பின் பகல் வரும் என்பதை உணராத அறிவிலிகள்! அன்று எனக்குத் ஆற்றல்! இன்று போற்றல்! அன்று நான் தீயோன்! இன்று தியாகி! அன்று அயோக்

கியன்! இன்று அறிஞன்! அன்று பச்சைத் தண்ணீர் தர மறுத்தவன் இன்று பாயாசம் தரத் தயாராய் இருக்கிறான்! அன்று என்னை மடையன் என்று சொன்ன என் காதலி ராணியின் தந்தை 'என் மாப்பிள்ளை' என்று மரியாதையாக அழைக்கிறார்.

எனக்கு ஏற்பட்ட இந்த மதிப்பை என் தந்தை பார்க்கக் கொடுத்துவைக்காதவர். பாவம்! நான் நல்லபிள்ளை என்று பெயரெடுப்பதற்குமுன்பே நாலுபேரிடம் சொல்லிக் கொள்ளாமல் திடீரென்று மாரடைப்பால் மாண்டு விட்டார்.

நான் என் தந்தையிடம் பட்ட உதை கொஞ்சமா? எருமை மாட்டை அடிப்பதுபோல் என்னை அடிப்பார்! ஆனால்—நான் எருமையைப் போல இருப்பதில்லை. எருமை எத்தனை அடி அடித்தாலும் அசையாது, அதோடு திருந்தவும் செய்யாது! ஆனால்—பசு? ஒரு அடி விழுவதற்குள் ஓட்டமெடுத்துவிடும். அதைப் போலத்தான் நானும்! என் தந்தை என்னை அடிக்க வந்தால் ஒரே ஓட்டந்தான்! அப்புறம் மூன்று நாட்களுக்கு அஞ்ஞாதவாசம்!

இப்படி ஒருநாள் இரவில் என் தந்தை என்னை அடிக்க வந்தார். வழக்கம்போல 'ரேசில்' இறங்கினேன். பெரிய மனிதர்களெல்லாம் சிறு பிள்ளைகளைப்போல ஓடமாட்டார்கள் என்று நினைத்தேன். ஆனால்? என் தந்தை என்னை விரட்டி வந்ததுபோல் தெரிந்தது. சந்து பொந்துகளில் ஓடிப் பார்த்தேன்; அப்போதும் அவர் பின் தொடர்ந்தார்; வேறு வழியின்றி ஒரு வீட்டிற்குள் நுழைந்துவிட்டேன்; உள்ளே இரண்டு மூன்று பெண்கள் நின்று கொண்டிருந்தார்கள்; நான் என்ன சொல்வதென்று தெரியாமல் திகைத்து நின்றேன். "வாங்க! வாங்க!"—இப்படி என்னை வரவேற்றார்கள்! "தம்பி புதுசுபோல இருக்கு. அதான் இப்படிப் பயப்படுது!...... தம்பி! யாருக்கும் பயப்படாதீங்க! அந்த ரூமுக்குள்ளே போயிடுங்க!"—

—இப்படி ஒரு கிழவி என்னைப் பார்த்துக் கூறினாள்! அந்தக் கிழவி மகா உத்தமியாக இருக்க வேண்டும்! இல்

லாவிட்டால்...... ஆபத்துக்கு இவ்வளவு உபகாரம் செய்வாளா? நான் என் தந்தையின் கையிலே சிக்கினால்......? சட்டினிதான்! இருந்தாலும்.........புது வீடு, புது ஆட்கள் எனக்கு வெட்கமாகத்தான் இருந்தது. இதையும் அந்தக் கிழவி எப்படியோ அறிந்துவிட்டாள்.

"வெட்கப்படாதீங்க, தம்பி! சும்மா அந்த ரூமுக்குள்ளே போங்க!"

அங்கிருந்த நாலைந்து ரூம்களிலே ஒன்றைச் சுட்டிக் காட்டி, மீண்டும் அந்தக் கிழவி இப்படிக் கூறினாள். "இல்லை-நான் இங்கேயே இருந்து கொள்கிறேன்?—" இப்படி நான் தயவாகச் சொன்னேன். அந்தக் கிழவிக்கு என்மேல் எத்தனை அன்பு?

"இங்கே வேண்டாம் தம்பி! அந்த ரூமுக்குள்ளே போயிட்டா, நீங்க இங்கே இருக்கிறதே யாருக்கும் தெரியாது!"

ஆம்! இப்படிக் கிழவி சொன்னாள். ஒருவேளை...... இந்தப் பக்கந்தானே ஓடி வந்தான்? இந்த வீட்டுக்குள் ஒளிந்திருப்பானோ? என்று நினைத்து என் தந்தையும் இங்கே வந்தால்.........? ஆபத்துத்தான்! ஆனால் அந்த ரூமில் ஒளிந்து கொண்டால்? நிச்சயம் கண்டுபிடிக்க முடியாது. அதன்பின்தான் எனக்குத் தைரியம் வந்தது.

"விமலா! அந்த ஐயாவைக் கூட்டிக்கிட்டு போம்மா!"

ஆகா! கிழவிக்கு என்மேல் எவ்வளவு அக்கறை? அன்னியர்களுக்கு இருக்கும் அன்பு கூட என் தந்தைக்கு—ஊஹூம்! பாருங்களேன்! துணைக்கு ஒரு பெண்ணையே அந்தக் கிழவி அனுப்பிவைத்தாள்! நான் அந்த அறைக்குள்ளே சென்றேன். எமனுக்குப் பயந்து எவனோ ஒருவன் கடலுக்குள்ளே போய் ஒளிந்தானாம்! இப்படி நான் புராணத்திலே படித்த ஞாபகம்! அதைப்போலத் தான் பெற்றவனுக்குப் பயந்து நான் அறைக்குள்ளே ஒளிந்தேன். கடலுக்குள்ளே ஒளிந்தவனை, எமன் கண்டு

பிடித்தது மட்டுமல்ல, பழிவாங்கிவிட்டாளும்! ஆனால் என்ன? கண்டு பிடிக்கவேமுடியாது! ஏன் தெரியுமா? நானும் விமலாவும் சேர்ந்து ரூம் கதவையே பூட்டிவிட்டோம்!

அது என்ன அறையா? இல்லவே இல்லை. சொர்க்கம் என்று சொல்லுகிறார்களே அதாகத்தான் இருக்கவேண்டும்! மெல்லிய கொசுவலை ஊசலாடும் மெத்தை விரித்த கட்டில்! — அதன்மீது மல்லிகை மலர்களின் வெறியூட்டும் மணம். மூளையை மயக்கும் கதம்பவாடை! சுற்றிலும் பெல்ஜியக் கண்ணாடிகள்! அந்தக் கண்ணாடிகளுக்கு மேலே......விதவிதமான படங்கள்! அத்தனையும் ஆணும் பெண்ணும் நிர்வாணமாக......? ஒருவரை ஒருவர் கொடிபோல் பின்னிய நிலையில் இதழோடு இதழைப் பொருத்தி! இவை என்ன படங்களா? எந்த வீடுகளிலும் நான் பார்த்ததில்லையே? சொர்க்கத்திலே இப்படித்தான் இருக்குமோ? சொர்க்கத்தை அடைவது என்ன சுலபமா? நெருப்பாற்றின் மேலே மயிர்ப்பாலம் இருக்குமாம்! அதைக் கடந்து வரவேண்டுமாம்! நான் அப்படியா கஷ்டப்பட்டு வந்தேன்?

சந்தேகமில்லாமல் கஷ்டப்பட்டுத்தான் வந்தேன்! எங்கே சிக்கிவிடுகிறேனோ என்ற பதட்டம்! தலைதெறிக்க ஓட்டம்! இதைவிட வேறு என்ன கஷ்டம் வேண்டும்? நிச்சயமாக யாருக்கும் கிடைக்காத சொர்க்கந்தான் இது! இப்படி நான் நினைத்துக் கொண்டிருக்கும்போது விமலா என் கை மோதிரங்களைக் கவனித்துக்கொண்டிருந்தாள். "ஒவ்வொரு மோதிரமும் 'அழகாய் இருக்கிறதே" என்றாள். "ஆமாம்! இந்த மைனர் செயின் எத்தனை பவுன்?"—என்று கேட்டுக்கொண்டே என் கழுத்தில் கையைப் போட்டாள்!

அப்போதுதான் எனக்குப் புரிந்தது. சொர்க்கமாவது மண்ணாங்கட்டியாவது! எல்லாம் பொய்! எல்லாம் மாயை! நான் இருக்கும் இடம்—தாசி வீடு!

முதலையிடம் தப்பியவன் கரையிலே நிற்காமல் காட்டு வழியாகச் சென்று புலியின் குகைக்குள்ளேயே போய் ஒளிந்தானாம்! அந்த நிலையில்தான் நான் இருந்தேன். எனக்கு வலைவீசிய பல பெண்களிடத்திலும் தப்பிய நான் கடைசியில் ஒரு தாசியிடந்தானா சிக்கவேண்டும்? என் தலை சுழன்றது. ஆனால்?

நான் மயங்கிக் கீழே விழாமல் விமலா என்னைத் தாங்கிக்கொண்டாள்! அவள் பெண்தானா? அல்லது மின்சார மிஷினா? விமலா என்னைத் தொட்டதும் ''எலக்ட்ரிக் ஷாக்'' அடித்ததுபோல் இருந்தது எனக்கு! பெண்களின் ஸ்பரிசமே மின்சாரத் தாக்குதல்தானா? முன்பின் எனக்கு இந்த அனுபவம் ஏது? என் இருபதாவது வயதில்தான், பருவமடைந்த பெண்ணை என் காதலி ராணியை முதன் முதலாகத் தொட்டேன். ஆனால் இப்போது? எனக்கு வயது பதினைந்து.

நான் கட்டிலில் உட்கார வைக்கப்பட்டேன். நான் உட்கார்ந்தது மெத்தையின்மீதா? அல்லது விமலாவின் தொடையின்மீதா? இந்தச் சந்தேகம் எனக்கு உதித்தது. விமலா என்னை என்னென்னமோ செய்தாள்! ''வீடு''—என்று சொல்ல என் மனம் இடங்கொடுக்கவில்லை. வியர்வை தண்ணீராகச் சொட்டிக்கொண்டிருக்கும்போது ஜிலு ஜிலுவென்று தென்றல் வீசினால், சுகமாக இருக்குமல்லவா? அதைவிட இன்பமாக இருந்தது விமலாவின் செய்கை! ஆனால்—?

''அடியே! சீக்கிரம் கதவைத் திற! வெளியே போலீஸ்காரர்கள்''

—அந்தக் கிழவிதான் இப்படிச் சொல்லிக்கொண்டே கதவைத் தட்டினாள்! எனக்கு நடுக்கம் ஏற்பட்டது. போலீஸ்காரர்களா? இங்கு ஏன் வருகிறார்கள்? விபசார ஒழிப்புச் சட்டமாம்! விபசார விடுதி நடத்துவது சட்ட விரோதமாம் இங்கே! ஏதாவது விபசாரம் நடக்கிறதா, என்று சோதனைபோட வந்திருக்கிறார்களாம்! எப்படி

இருக்கிறது? ஆசையைத் தீர்த்துக்கொள்ளவா விபசார விடுதி வைக்கிறார்கள்? கையிலே பணமில்லை; வேலையில்லை; வறுமை வாட்டுகிறது; வயிறு காய்கிறது; ஆனால், வாழவேண்டும்! அதற்கு வழி? முதல்போட்டு வியாபாரம் செய்கிறார்களே, எதற்காக? பிழைப்புக்காக! பிள்ளை குட்டியைக் காப்பாற்றுவதற்காக! கஞ்சிக்கே கதியற்ற காரிகைகளிடத்தில் வியாபாரம் செய்யக் கைமுதல் ஏது? அழகை முதலாக வைத்து விபசார வியாபாரம் செய்கிறார்கள்! இதைக் குற்றமென்று கூறுகிற அரசாங்கம் வறுமையைப் போக்கத் திட்டம் தீட்டுவதுதான் நியாயம்! அல்லது விபசார விடுதிகளை ஆண்கள் பகிஷ்கரிக்கும்படி செய்யவேண்டும்! அப்படிச் செய்தால் விபசார விடுதிகளைத்தானே மூடிவிட மாட்டார்களா? ஆண்களாவது பகிஷ்கரிக்கவாவது! காதல் மணத்திற்குக் கடுகளவுகூட ஆதரவளிக்காத அக்கிரமச் சமூகத்திலே மனத்துக்குப் பிடித்தமில்லாத மனைவியைக் கட்டிக்கொண்டு எத்தனை நாளைக்கு அழுவது! பணத்திற்கு மதிப்புத்தரும் பாழும் சமுதாயத்திலே கலியாணம் செய்துகொண்டு கண்ணியமாக வாழவேண்டும் என்று கருதும் கணக்கற்ற ஆண்கள், கையிலே பணமில்லாமல் எத்தனை நாளைக்குத்தான் பிரம்மசாரியாக இருப்பது? இப்படிப்பட்ட ஆண்கள் இருக்கிற வரைக்கும் விபசார விடுதிகளை மூடமுடியுமா?

இதைத் தெரிந்துகொள்ளச் சட்டத்திற்கு என்ன யோக்கியதை இருக்கிறது? அதனால்தான் போலீஸ்காரர்கள் வந்து முற்றுகையிட்டார்கள்! போலீஸ்காரர்களிடம் சிக்கினால்? எனக்கு இருக்கிற பட்டங்கள் போதாது என்று ஊர் மக்கள் "தாசிலோலன்" என்ற பட்டத்தையும் எனக்குச் சூட்டுவார்கள்! தப்பிச் செல்லவழி? அந்தக் கிழவிக்கு அனுபவமில்லாமல் இருக்குமா? விளக்கை எல்லாம் அணைத்தாள்!

எதிரியின் படையெடுப்பின்போது "பிளாக் அவுட்" (Black-out) அவசியம் என்பதை அந்தக் கிழவிகூட உணர்ந்திருந்தாள்.

"கொல்லைப்புறமாகச் செல்லுங்கள்! பின் வாசல் பக்கம் ஒரு வாய்க்கால் இருக்கிறது. அதைத் தாண்டினால் ரோடு உம்! சீக்கிரம் செல்லுங்கள்!"

—கிழவியின் இந்தக் கட்டளையை மீற முடியுமா? இன்னொரு அறையில் இருந்து ஒரு பெரியவரும் என்கூட வந்தார்! இருட்டில் அவர் யாரென்று எனக்குத் தெரியவில்லை! உள்ளத்தில் பயம் குடிகொண்டிருக்கும்போது உருவத்தைப் பார்க்கத்தானா நேரம் இருக்கிறது? விரைவாக நானும் அந்தப் பெரியவரும் பின்வாசலை அடைந்தோம். வாய்க்காலில் இடுப்புவரை தண்ணீர் சென்று கொண்டிருந்தது. தப்பித்தால் போதுமென்று இருவரும் வாய்க்காலில் இறங்கினோம்!

அப்போதுதான் எனக்குச் சுய உணர்வு வந்தது. எதையோ இழந்துவிட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது; கழுத்தைத் தடவிப் பார்த்தேன். என் மைனர் சங்கிலி எங்கே? உம்! வெளியே சொன்னால் வெட்கம்? கரையேறினோம்; விளக்கொளி எங்கள்மீது விழுந்தது. என் கூடவந்த பெரியவர் யார் தெரியுமா?—என் தந்தை!

அவர் பாவம்! என் தாய் இருந்தால், தாசி வீட்டின் நிலைப்பாவது என் தகப்பனுக்கு ஏற்படுமா? பெரிய பணக்கார வீடுகளில் எல்லாம் தகப்பனும் மகனும் ஒரே தாசி வீட்டுக்குச் செல்வதாக என் நண்பர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அப்போதெல்லாம் அது கதையாகத் தான் இருக்குமென்று நினைத்தேன். ஆனால் என் வாழ்க்கையில்? எதிர்பாராத விதமாக அது நிருபணமாகிவிட்டது.

"இங்கே ஏண்டா வந்தாய்"—என்று சொல்லிக் கொண்டே இறுக என்னைப் பிடித்துக்கொண்டார் என் தந்தை. "நீங்கள் ஏனப்பா வந்தீர்கள்?"—என்று நான் கேட்க முடியுமா? அப்படிக்கேட்டாலும் என்னைத் தேடி வந்ததாக ஏன் சொல்லமாட்டார்?

"ஏண்டா! தேவடியாள் வீட்டுக்கும் செல்ல ஆரம்பித்து விட்டாயா?"—என்று என் தந்தை என்னைக் கேட்ட

தோடு நில்லாமல், நான் பதில் பேசாதபடி என்னை உதைக்கவும் ஆரம்பித்தார். பெரியவர்களை எதிர்த்து நியாயமாக ஒருவார்த்தை பேசினாலும் மரியாதை இல்லாத சின்னப் பயல் என்கிறார்கள்! அந்தப் பட்டமும் நான் பெறவேண்டுமா? மௌனமாகவே இருந்தேன். ஆனால்—

என் மனம் கேட்கவில்லை. தேவடியாள் வீட்டுக்குச் செல்வது விபசார ஒழிப்புச் சட்டத்திற்கு விரோதமாம்! தண்டனைக்குரியதாம்! கண்டனத்துக்குரியதாம்! மதுரையிலே வருடா வருடம் சித்திரை மாதம் ஆற்றைக் கடந்து அழகர், தேவடியாள் வீடு செல்கிறாரே, இது குற்றமில்லையா? அழகருக்கு ஒரு சட்டம், அமைச்சருக்கு வேறு சட்டம், அடிமைக்கு இன்னொரு சட்டமா?

மது குடிக்கும் பழக்கத்தை ஒழிக்க, சினிமா, நாடகங்களிலே மது குடிப்பதுபோன்ற காட்சிகள் இருக்கக் கூடாது என்று தடை விதிக்கிற அரசாங்கம், அழகர், தேவடியாள் வீடு செல்வதை விபசார ஒழிப்புச் சட்டத்தின்படி தடுக்கவேண்டாமா? இதை அரசாங்கம் செய்யாமல் இருந்தால்.........அழகரே தேவடியாள் வீடு செல்கிறார், நாம் போனால் என்ன, என்ற எண்ணம் மக்களுக்கு வந்தால்.........விபசார ஒழிப்புச் சட்டத்தின் கதி?

எக்கேடு கெட்டால் என்ன? சாதாரண ஜனங்கள் தேவடியாள் வீடு சென்றால்......உதை, அபராதம் சிறை! அழகர் சென்றால்..... ஊர்வலம், அர்ச்சனை, திருவிழா! இதுதான் இன்றைய உலகம்! இதைச் சொல்லப்போனால் எனக்கு 'நாஸ்திகன்' என்ற பட்டத்தை சூட்டுவார்கள்.

பட்டத்துக்கு நான் பயந்தவனா? பள்ளிக்கூடத்திலே நான் படிக்கும்போது எனக்குக் கிடைத்த பட்டம் 'மண்டு'! மண்டூகம் என்ற வார்த்தையில் இருந்துதான் 'மண்டு' வந்திருக்கவேண்டும். 'கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் தெரியாதாம்!' 'மாமாங்க'க் குளத்தில் நீராடும் குட்டித் தேவதைகளுக்கு நாகரிகம் தெரியுமா?

ஒருவாறாக நாங்கள் வீடுவந்து சேர்ந்தோம். நான் படிப்பதைப் பற்றியே கவலைப்பட்டதில்லை—ஏன் படித்தவன்தான் அறிவாளியாக வரமுடியுமா? இயேசு நாதர், முகம்மதுநபி இவர்கள் எல்லாம் எந்தப் பள்ளிக் கூடத்திலே படித்தவர்கள்? அவர்களாவது ஆண்டவன் பரம்பரை! அறிவியக்கத் தலைவர் பெரியார் இராமசாமி திண்ணைப் பள்ளிக்கூடத்தோடு சரி. இன்று திராவிட நாட்டு அரசியலையே பெரியார் உருவாக்கவில்லையா?

ஏட்டுச் சுரைக்காய் எதற்குப் பயன்படும்? L. C. M. என்றால் என்ன? G. C. M. என்றால் என்ன? இப்படிக் கேள்விகள் உள்ள படிப்பு எந்த வாழ்க்கைப் பிரச்சினையைத் தீர்க்கும்? இதைக் கேட்டால் பரீட்சைக்காகப் படி என்கிறார்கள். இன்றைய பள்ளிக்கூடங்கள் பரீட்சைக்காகத்தானே தவிர, பகுத்தறிவுக்காக அல்ல!

இந்த எண்ணம் என் மனத்திலே வேரூன்றி இருந்தது. இதனால் படிப்புக்கும் எனக்கும் இடையே, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே ஒரு 'மன்னார் வளைகுடா' இருப்பதைப்போல் அகண்ட வெளி இருந்தது. நான் பரீட்சையில் தேறமாட்டேன் என்று என் ஆசிரியர்கள் 'ஆருடம்' சொன்னார்கள். ஆருடம் அவநம்பிக்கை பெற்றெடுத்த அவமானச் சின்னம்! தன்னம்பிக்கை வளர்ந்திருக்கிற இந்தக் காலத்திலே அதை யார் மதிக்கிறார்கள்? இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள மன்னார் வளைகுடாவைக் கப்பலில் செல்லாமல் கள்ளத்தனமாகச் சிலர் கடப்பதில்லையா? அந்த வழி தானோ என்னவோ, நான் எஸ். எஸ். எல். சி. தேறி விட்டேன்.

என் தந்தை என்னைக் காலேஜில் கொண்டுபோய்ச் சேர்த்தார். காலேஜில்தான் என் புது வாழ்க்கை ஆரம்பமாகியது. ஏன்—நான் ஒரு புது மனிதனாக மாறிவர ஆரம்பித்தேன். நடப்பதெல்லாம் நன்மைக்கே!—என்ற பழமொழிமீது எனக்கு முன்பெல்லாம் நம்பிக்கையே கிடையாது. மூடக்கொள்கையின் அடிப்படையிலே

உதித்த உபதேசம் என்றே எண்ணினேன். ஆனால் இப்போது?

நான் ஹைஸ்கூலில் ஒவ்வொரு வகுப்பிலும் தங்கித் தங்கித் தேறிவந்ததால் காலேஜில்..... என் காதலியை, ஆம் என் ராணியைச் சந்திக்க முடிந்தது! அந்தப் பழமொழியை உண்டாக்கிய பேர்வழியின் அட்ரஸ் மட்டும் தெரிந்தால்......நானும் என் காதலியும் சேர்ந்து ஒரு 'தேங்ஸ்' ஆவது சொல்லியிருப்போம்!

ஊரில்தான் என்னையும் என் காதலியையும் பிரித்தார்கள். காலேஜிலே முடியுமா? எத்தனையோ பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் காலேஜில் ஒழுங்காகப் படிப்பதாக நினைக்கிறார்கள். ஆனால்.........வகுப்பில் கண்ணால் பேசி, அப்புறம் கடிதங்களை வீசி, மாலைநேரக் கடற்கரைச் சந்திப்பிலே சங்கமம் ஆகிக் கடைத் தெருவிலே கைகோர்த்த காதலர்களாக ஜொலித்து, சினிமாவிலே சிரித்து விளையாடும் தம்பதிகளாக மாறி, சிங்கார ஓட்டல் அறைகளிலே சிருங்கார சொரூபங்களாக முன்னேறி, சின்னாபின்னமடைகிறார்கள் மாணவ மாணவி களில், சிலர். அதைப் போலல்ல, நானும் என் ராணியும்! நாங்கள் காதலர்கள் தான்—கௌரவமான முறையில்.

நான் கல்லூரியில் கற்ற காலத்திலேயே பொது வாழ்க்கையில் புக ஆரம்பித்தேன். ஓய்வு கிடைத்த நேரமெல்லாம் வெளியூர் சென்று சீர்திருத்தப் பிரச்சாரம் செய்துவந்தேன். என் கல்லூரிப் பட்டிமன்றம் முதல் தமிழ்நாட்டின் பட்டி தொட்டியில் இருந்து பட்டணம் வரை என் பிரச்சாரம் பரவியது. பல அரசியல் தலைவர்கள் எனக்கு அறிமுகமானார்கள். அரசியல் சதுரங்கத்திலே நானும் ஒரு 'சொக்கட்டான்' ஆக்கப்பட்டேன்.

என் பேச்சுக்கு நாட்டிலே நல்ல மதிப்பு ஏற்பட்டது. பல பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் தலைப்பு கொடுக்கப்பட்டு என் சொற்பொழிவுகள் பிரசுரமாயின, மக்களும் மற்றவர்களும் என்னைப் புகழ்ந்தார்கள்;

மேலும் மேலும் அரசியலில் ஈடுபட எனக்கு ஆர்வம் அதிகரித்தது. நான் உழைக்க உழைக்க ஊரார் என்னை வாழ்த்தினர். இதைக் கண்ட என் காதலி ராணி மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தாள். "உங்களைக் காதலனாக அடைய என்ன புண்ணியம் செய்தேனோ"—என்று கூறுவாள்.

ஆனால்—என் தந்தை?

பொதுக்கூட்டங்களுக்குப் போகக்கூடாது என்று 144 போட்டார்! பொதுவாகப் பெற்றோர்களுக்கே முற்போக்கு எண்ணம் இருப்பதில்லை! குழந்தைகளை அவரவர்கள் போக்கில் விட்டால்தான் விருத்தி ஏற்படும். இது மேல்நாட்டார் அனுபவ ரீதியாகக் கண்டறிந்த உண்மை. பையன்களுக்குத் தக்க வயது வந்ததும், அவர்களுக்குரிய பங்கைக் கொடுத்து அவர்கள் இஷ்டப்படி நடந்து கொள்ள அனுமதிக்கிறார்கள் மேல்நாட்டில்! இதனால் ஒவ்வொரு வாலிபனும் வாழப் பிறந்தவனாக மாறி விடுகிறான். ஆனால் இங்கு? "வாழத் தெரிந்தவர்கள்" மிகமிகக் குறைவு. இதற்குக் காரணம் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு எந்தக் காலத்திலும் 'சுதந்திரம்' தருவதே இல்லை! அடிமை நாட்டு வாழ்க்கையைப்போலவே இந்தியாவின் இளைஞர்கள் நிலைமை இருக்கிறது.

அடிமை நாட்டிலும் சுதந்திர இயக்கம் இருக்கிறதல்லவா? அதைப்போலவே என் தந்தையின் ஏகாதிபத்திய ஆட்சியை எதிர்ப்பவனானேன். அடக்குமுறையை அஸ்திவாரமாகக் கொண்ட எந்த ஆட்சியும் நிலைக்காது. அடக்குமுறை ரப்பர் பலூனைப்போன்றது. விரிந்து கொண்டே வந்தால் தானாக வெடித்து சின்னபின்னமாகி விடும். அல்லது அடக்குமுறைப் பலூன்மீது மக்களின் ஆவேசம் மோதினால்போதும், அடுத்த விநாடி அடக்கு முறைக்கு மரியாதையே இருக்காது. இவைகளில் ஏதேனும் ஒன்று நடப்பதற்கு முன்பே என் தந்தை என்னை விட்டுவிட்டு "எமனுலகம்" போய்விட்டார், மாரடைப்பால்!

அதன் பின் நான் கடிவாளம் இல்லாத குதிரை யானேன். என் ஓட்டத்தைத் தடுக்க ஆள் பஞ்சம் ஏற்பட்டது. என் இஷ்டத்திற்கு நான் எங்கும் போவேன்; வருவேன். என்னைக் கேள்வி கேட்க என் காதலியைத் தவிர வேறு யாருமே இருந்ததில்லை. என் உள்ளத்திலே ஒரு பக்கம் தேசிய உணர்ச்சியும் ஒரு பக்கம் காதல் உணர்ச்சியும் சேர்ந்து வளர்ந்தன.

ஒருநாள் வெளியூரில் ஏற்பாடு செய்திருந்த பொதுக் கூட்டத்திற்கு சென்றேன். கூட்டம் நடப்பதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பு 144 தடைவிதித்தார்கள். அதை மீறவேண்டிய நிலைக்குச் சூழ்நிலை வந்தது. மீறினேன்; உடனே, என்னைச் சிறைப்படுத்தினார்கள்.

நான் சிறை சென்ற செய்தி நாடு பூராவும் கொந்தளிப்பைக் கிளப்பியது. என் காதலியும், கவலைப்பட்டுக் கண்ணீர்விட்டாளாம். ஆனால் பத்து நாட்களுக்குள் என் வழக்கைச் சர்க்கார் வாபஸ் வாங்கி என்னை விடுதலை செய்தனர். இந்த நிகழ்ச்சியில் இருந்து என்னை நாட்டு மக்கள் பெரிதும் பாராட்டினர்.

இப்படிப்பட்ட சமயத்திலே என் வாழ்க்கையிலே ஒரு பெரிய புயல் அடிக்க ஆரம்பித்தது. என் ராணிக்கு கலியாணப் பேச்சை ஆரம்பித்தார்கள். அவள் பெற்றோர்கள் எனக்கு இன்று நேற்று அல்ல, பிறவியிலேயே என்னை வைரியாகக் கருதியவர்கள். அப்படிப்பட்டவர்கள் மனதார எனக்கு ராணியைக் கொடுப்பார்களா? அதிலும் மன்மதனோ என்று வியக்கத்தக்க அழகுள்ள ராணியின் தாய் மாமன், ராணிக்கு வரனாக போட்டியிடும்போது எனக்கு 'ஓட்' கிடைக்குமா?

ராணியின் தாய் மாமன் பெயர் மதனராஜ். ஒரு பெரிய நாடகக் கம்பெனியின் உரிமையாளன். சர்க்காருக்குத் தாசன். பச்சோந்தியைப்போல இடத்திற் கேற்ற படி வேஷம் போடத் தெரிந்தவன். வட்சாதிபதி என்று பலரால் அழைக்கப்படுபவன்; அக்காள் மகள் என்று

உரிமை கொண்டாடத் தகுதியுள்ளவன்; இப்படிப் பட்ட மதனராஜ் என வாழ்க்கையிலே 'வில்லனாக' காட்சியளித்தான். மதனராஜுக்கே வாழ்க்கைப் படவேண்டு மென்று ராணியைக் கட்டாயப்படுத்தினார்கள். அதோடு விடவில்லை. என்னைப் பற்றிப் பலவாறாக ராணியிடம், அவள் வீட்டார் ஏதேதோ கூறி, அவள் மனத்தை மாற்ற முயன்றார்கள். ராணி என்னிடம் வந்து அழுதாள், காரணம் கேட்டேன்.

"நீங்கள் நாடோடியாம்! அரசியலே கதி என்று கிடப்பவராம்! உங்களைக் கல்யாணம் செய்துகொண்டால் வாழ்க்கையிலே இன்பம் இருக்காதாம்!"

இதைத்தான் என் ராணி சொன்னாள். ஆம்! ராணியின் பெற்றோர்கள் சொல்லிய அனைத்தும் நூற்றுக்கு நூறு உண்மை. பிரச்சாரமே தன் பிறவிப் பயன் என்று கருதி அங்கும் இங்கும் அலையும் நாடோடியைக் கட்டிக் கொண்ட எந்த நங்கைதான் இனிது வாழமுடியும்? அரசியல்வாதி, பிறந்த நாட்டுக்குச் சேவை செய்ய முடியுமே தவிர, வளர்ந்த வீட்டுக்குச் சேவை செய்ய முடியாது. விக்கிரமாதித்தியன் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் தான் அரசியல்வாதிகள்! காடாறு மாதம், வீடாறு மாதம் போல், வெளியிலும் சிறையிலும் வேதனைப்படவேண்டிய வர்கள் தான் அரசியல்வாதிகள்! இப்படிப்பட்டவர்களை மணந்துகொண்ட மனைவிமார்கள் மகிழ்ச்சியடைய முடியுமா? 'அரசியல்வாதிகள் அசல் துறவிகளாய் இருக்க வேண்டும்!'— இப்படிக் கூறினான் அறிஞன் பிளாட்டோ. இந்த நிலையில் ராணி என்னை மணந்தால் இன்பமடைவாளா?

"ராணி! உன் நன்மையைக் கருதியே உன் பெற்றோர்கள் அவ்விதம் கூறுகின்றனர்; காதலை மறந்துவிடு அல்லது கொன்றுவிடு! மதனராஜை மணந்து சுகமாக வாழ்க்கை நடத்து!........."என்றேன்.

ஆனால்—

''காதல் என்பது அற்புதமான தாஜ்மஹால்! அந்தக் காதல் மஹாலே உலக அதிசயங்களில் ஒன்ருகச் சிருஷ்டிக்க எவ்வளவோ சிரமம் இருந்திருக்கும். அதற்காக ஷாஜஹான் அயர்ந்துவிடவில்லை!''

—இப்படி என்னவெல்லாமோ சொல்லி காதல் மாளிகை ஜொலிக்க கல்யாணத்திற்கு அவசரப்பட்டாள் ராணி!

அவள் பெற்ருேர்களிடமும், பிடிவாதமாக மதன ராஜை மணக்க மறுத்துவிட்டாள்.

ஆசைக்கு ஒரு பிள்ளை! அதுவும் பகவானுக்கு விரத மிருந்து, பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று வந்து, பெற்றெடுத்த ஒரே பிள்ளை ராணி! முடிவாக அவள் தீர்மானத்திற்கு இணங்கினர். ராணி அளவு கடந்த சந்தோஷம் கொண்டாள். கல்யாண நாள் வந்தது. உற்ருர் உறவினர் என் நண்பர்கள் புடைசூழ, நான் ஊர்வலமாக என் ராணி வீட்டுக்கு, மேள தாளத்தோடு சென்றேன். மணவறையில் உட்காரவைக்கப்பட்டோம். மணமாலையை எடுத்து ராணி கழுத்தில் சூடப் போனேன்; ஒரு பெருமூச்சு விட்டு ராணி சிரித்தாள்; பல வருடங்களாக நாம் கண்ட கனு இன்றுதான் நிறைவேறுகிறது என்று அவள் நினைத்தாள் என்பதை அந்தக் காட்சி நிரூபித்தது, மணம் முடிந்தது. காதல் ராணி மனைவி யானுள்.

ராணியின் தந்தை, ஆம் ஒரு காலத்தில் என்னை 'மடையன்' என்று சொன்ன மகாமனிதர், இன்று எனக்கு மதிப்புக்குரிய மாமனுராகிவிட்டார். மடையன் என்று சொன்ன அதே வாயால் மாப்பிள்ளைக்குப் பாலும் பழமும் கொடுங்கள் என்று அவர் சொல்லும்போது, காலத்தின் கோலத்தை நினைத்து நான் சிரித்துவிட்டேன்.

அன்று நாளும் நட்சத்திரமும் நன்ருக இருப்பதாக ஐயர் சொன்னுராம்! அதனுல் சாந்தி முகூர்த்தத்தை அன்றே வைத்துவிட வேண்டும் என்று என் மாமா

கட்டளையிட்டார். முதல் இரவு முக்கியத்துவம் வாய்ந்த தல்லவா? அதற்குரிய முஸ்தீப்பில் இறங்கினேன்.

எப்பொழுதாவது ஒருதடவை ரயில் பிரயாணம் செய்யும் பிரயாணிதான் ரயில் எத்தனை மணிக்கு வருகிறது, புறப்படுகிறது, என்று யாரையாவது கேட்பான் அல்லது அட்டவணையைப் பார்ப்பான். சதா ரயிலில் பிரயாணம் செய்பவனுக்கு ரயிலின் கால நேரமெல்லாம் மனப்பாடமாக இருக்கும். அதேபோலத்தான் முதல் இரவுக்குப் புதிதாகச் செல்கிற தம்பதிகள் எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று முன் கூட்டியே திட்டம்போடுவார்கள், ஆனால் நானும் ராணியும் இன்று நேற்றுப் பரிச்சியம் ஆனவர்களல்ல. பால்யம் முதல் பழகியவர்கள். அதனால் கற்பனை செய்யவேண்டிய வேலையே எனக்கு இல்லாமல் போய்விட்டது.

சரியாக எட்டு மணிக்கெல்லாம் ராணியின் வீட்டுக்குச் சென்றேன். நான் சாப்பிட உட்காரும்போது சரியாக மணி 9. ராணிதான் எனக்குப் பரிமாறினாள். இத்தனை நாளும் என்னோடு பழகிய ராணி போல அவள் தோன்றவில்லை. நாணமிகுந்த மணப் பெண்ணாகவே காட்சியளித்தாள்.

மணி 10 அடித்தது. பழவர்க்கமும் பட்சணமும் நிறைந்த ஒரு தட்டை ஏந்தி, என் ராணி மாடிப்படிகளிலே ஏறினாள். அவள் சென்ற சில நிமிடங்களில் என் மாமனார் என் அருகில் வந்து......''மாப்ளே! நீங்களும் மாடியில் போய் படுங்க......'' என்று சொன்னார். நானும் எழுந்து மாடியில் முதல் படியிலே காலை வைத்தேன்.

''மிஸ்டர்......! கொஞ்சம் நில்லுங்கள்!''

—அதிகாரத்தில் அள்ளி வீசப்பட்ட வார்த்தைகளைக் கேட்டு, திரும்பிப் பார்த்தேன், போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் நான்கு ஜவான்களோடு நின்றார். என் கையிலே 'வாரண்ட்'டைக் கொடுத்தார். மாடிப்படிக்குச் செல்ல வேண்டிய நான் போலீஸ் லாரிக்குச் சென்றேன். வீட்டுக்கு

வெளியே துப்பாக்கி ஏந்திய போலீஸ் படைகள் சூழ்ந் திருந்தன. என் ஒருவனைப் பிடிக்க இத்தனை பேரா? துப் பாக்கி தேவையா? சிரித்தபடி லாரிக்குள் ஏறினேன்.

என் மாமானுர் வீட்டினுள் இருந்து 'டப டப டப' என்ற சப்தம் கேட்டது. அதை அடுத்து... ... 'ராணி! ராணி! கண்ணைத் திறந்துப்பார்! ஐயோ டாக்டரைக் கூப் பிடுங்கள்''...... என்ற சப்தமும் கேட்டது! போலீஸ் லாரியும் புறப்பட்டது.

'ராணி! துறவிதான் அரசியல்வாதியாக இருக்க முடியும். நாட்டுக்குழைப்பவன் வீட்டுக்காக அழ முடி யாது. இதோ போகிறேன், காடாறு மாதம்!'

—ராணியின் வீட்டைப் பார்த்து என் வாய் முணு முணுத்த கடைசி வார்த்தைகள் இவைதாம்!

## 2. துன்பக் கேணியில்—ராணி

சுகுமார் கைது செய்யப்பட்டு போலீஸ் லாரியில் போகும்போது, ராணியின் வீட்டில் 'டப டபா' என்ற சப்தம் கேட்டதல்லவா?

அது—சுகுமார் ராணியின் கல்யாணத்திற்காகப் போடப்பட்ட வாண வேடிக்கையல்ல! வேதனையால் உள்ளம் உடைந்த ராணி மாடிப்படியிலே உருளும்போது அந்தச் சப்தம் கேட்டது. ராணியின் மண்டை உடைந்து இரத்தம் பீறிட்டு வந்தது.

அந்த ரத்தத்தைப் போலத்தான் ராணி தந்தையின் கண்களும் சிவந்தன. அவர் மனதிலே வித வித மான எண்ணங்கள் ஊசலாடின. உள்ளம் கொதித்தது. கொதிக்கிற எந்த வஸ்துவும் பொங்கி வருமல்லவா? அவர் வாயிலே இருந்து வார்த்தைகள் பொங்கி வழிந்தன.

''ராணி! உனக்கு இதுவும் வேண்டும்; இன்னமும் வேண்டும்! பெற்றோரை மதியாத பிள்ளைகளுக்கு இந்தக்

கதிதான் ஏற்படும்—ஏன், ஏற்படவேண்டும்! அவனை மணக்க வேண்டாம் என்று ஆயிரம் தடவை சொன்னேன். மதி கெட்டவளே, கேட்டாயா? இன்று அழு! நன்றாக அழு! வாழ்நாள் பூராவும் 'வாழாவெட்டி'யாக இருந்து அழு!"

இதற்கு மேல் ராணியின் தந்தையால் பேச முடியவில்லை. சோடா குடிக்கும்போது குண்டு வந்து பாட்டில் வாயை அடைத்துக் கொள்கிறதல்லவா? அதைப்போலவே அவர் தொண்டையை 'மரணக் குண்டு' அடைத்தது; மறு விநாடி மௌனமாகிவிட்டார்; அடுத்த கணம் கீழே விழுந்ததும் பிணமாகிவிட்டார்.

பாவம், மண வீடு பிண வீடாகியது. ஆனந்த கீதம் உலவ வேண்டிய அந்த இரவில், மரண அலறல் கேட்டது. பயங்கரக் குரலில்.

ராணி தந்தையின் பிணத்தைச் சுற்றிப் பெண்கள் கூட்டம் ஒப்பாரி வைத்தது. ராணியின் தாய், தலையிலும் மார்பிலும் அடித்து அடித்து அழுதாள்.

இந்தக் கூட்டத்திலே ராணி எங்கே என்று சுற்றிச் சுற்றிப் பார்த்தார்கள். இரத்தக் காயம் பட்ட ராணி இங்கே இருக்க முடியுமா?

சுகுமார், அடியெடுத்து வைக்க முடியாத சுவர்க்கபூமியிலே படுத்திருந்தாள்! சுகுமாரை அனுமதிக்காத அந்தப் பள்ளியறையா சுவர்க்கம்? இல்லவே இல்லை! பாழடைந்த மண்டபம்! படுக்க முடியாத பஞ்சணை—பருக முடியாத பால்—உண்ண முடியாத பழம்—சுவைக்க முடியாத வெற்றிலை—சூட முடியாத மலர் இத்தனையும் அங்கே இருந்தன.

இவைகளோடு ராணியும் கிடந்தாள், மயக்கம் தெளிந்து கண்விழித்துப் பார்த்தாள்; எதிரே தன் தந்தையின் படம் எக்களிப்போடு சிரித்தது; பின்னர் சீறியது!

"அப்பா! அப்பா!"

ராணி அலறினாள்! திரும்பிப் பார்த்தாள். மேஜை யில் சிரித்த முகத்தோடு சுகுமாரின் போட்டோ இருந்தது. போட்டோவைக் கையில் எடுத்தாள்.

"அன்பரே! என்னை விட்டுச் சென்றுவிட்டீரே? எப்போது வருவீர்?"

—இப்படி அழுகுரலில் சொல்லிக்கொண்டே, சுகுமா ரின் முகத்தைத் தடவக் கையை நீட்டினாள். சுகுமாரைத் தொடவிடாதபடி போட்டோ 'பிரேமில்' உள்ள கண்ணாடி தடுத்தது.

"கண்ணாடியே! நீயுமா என் கையைத் தடுக்கிறாய்?"

'படார்' என்ற சப்தம் கேட்டது. சுகுமாரின் படம் கீழே கிடந்தது; அதில் இருந்த கண்ணாடி சுக்கல் சுக்கலாக உடைந்து சிதறியது.

"மகளே! கண்ணாடியை உடைத்துவிடலாம்; ஆனால் உன் காதலைப் பிரித்துவைத்திருக்கிற அந்தச் சிறைக் கம்பிகளை......? முடியாதம்மா முடியாது! இரும்பினால் இழுத்து மூடப்பட்ட இருட்டறைதான் சிறைச்சாலை."

—மீண்டும் தந்தையின் படத்தைப் பார்த்து அழுதாள் ராணி. செத்துப்போன தந்தை ஆறுதல் சொல்வாரா?

தந்தையின் பிணம் சுடுகாட்டில் தகனம் செய்யப்படும் வரை ராணி தனியாகத்தான் விடப்பட்டிருந் தாள்.

சிறை சென்ற காதலனுக்காக அழுவதா? செத்த தந்தைக்காக அழுவதா? தன் நிலை குறித்து அழுவதா? ராணிக்கு ஒன்றுமே புரியவில்லை!

அப்பொழுது யாரோ வரும் சப்தம் கேட்டது. கண்ணைத் திருப்பிப் பார்த்தாள். அவள் தாய் மாமன் மதன ராஜ்! இவனும் திட்டுவானோ?

"ராணி! நீ எதற்கும் கவலைப்படாதே. சுகுமார் சீக்கிரமே விடுதலை செய்யப்படுவான்!"

ராணிக்கு ஒரே ஆச்சரியம்! சுகுமாரை மணந்து கொண்டால் கஷ்டப்படுவாயென்று முன்பு ஆலோசனை சொன்ன மதனராஜ், தந்தையைப்போல்—மற்றவர்களைப் போல் திட்டாமல் ஆறுதல் சொல்லுகிறனே, என்று எண்ணினாள் பேதைப் பெண் ராணி!

நாடகத்திலே ராஜா வேஷம் போடுகிறவன், வாழ்க்கையிலே பிச்சைக்காரனாக இருந்தாலும் நடிப்புக்காகக் கம்பீரமாகப் பேசுவதில்லையா? அதைப்போலத்தான் நாடகக் கம்பெனி நடத்திவரும் மதனராஜும் என்பதை ராணி அறியவில்லை!

மதனராஜ் ஒரு ஷோக் பேர்வழி. சிறு வயதிலேயே தாய் தந்தையை இழந்தவன். அந்த வட்டாரத்திலேயே பெரிய 'மைனர்' என்று பட்டம் பெற்றவன்.

பெயருக்கேற்ற குணம் கொண்டவன் மதனராஜ்! தினசரி சட்டை மாற்றுவதுபோல மனத்துக்குப் பிடித்த மோகனாங்கிகளோடு மகிழவேண்டும் என்பதே அவன் கொள்கை.

வாழ்நாள் முழுவதும் ஒரே பெண்ணோடு ஆண் இருக்க முடியுமா? ஆண்டுதோறும் ஒரே பஞ்சாங்கம் பயன் தருமா? பெண் கர்ப்பமாக இருக்கும்போது ஆணின் கதி என்ன? அடக்கும் சக்தி வேண்டும் என்று அறிவுப் போதனை செய்வோர், பசிக்கப் புசி என்கின்றனர். ஆனால் மனப்பசி ஏற்படும்போது மனைவி இல்லாதிருந்தால்? சிலர் வீட்டிலும் ஓட்டலிலும் சாப்பிடுவதில்லையா? இப்படிக் கேள்விகளைப்போட்டுக் குதர்க்கம் பேசுவான் மதனராஜ்.

மதனராஜ் நாடகக் கம்பெனி வைத்ததற்குக் காரணமே கண்கண்ட பெண்களை ருசி பார்க்கவேண்டும் என்ற எண்ணத்தில்தான். நாடகத்திலே எந்தப் பெண்

கள் சேர்வந்தாலும் சரி முதல் ஒத்திகை மதனராஜ்தான் பார்ப்பான். இப்படி எத்தனையோ பெண்களைக் கெடுத்திருக்கிறான் மதனராஜ். ஆனால் இவனால் கெடுக்கப்பட்ட சில பெண்கள்........இவனாலேயே முன்னுக்கு வந்து 'ஸ்டார்'களாக இருக்கத்தான் செய்கிறார்கள்.

குமாரி பத்மா விஷயத்தில்தான் மதனராஜ் கொஞ்சம் அதிகக் கஷ்டப்பட்டான். முதலில் பத்மாவைத் தன் வலையில் விழவைக்க மதனராஜ் பகீரதப் பிரயத்தனங்கள் செய்தும் இயலவில்லை. முடிவில் ஆசை வார்த்தைகளை அள்ளி வீசிக் கலியாணம் செய்துகொள்வதாக உறுதியளித்த பின்பே குமாரி பத்மா மதனராஜின் இஷ்டத்துக்கு இணங்கினாள். மதனராஜின் கம்பெனியிலேயே பிரதான நடிகையாக இருந்து வந்தாள் குமாரி பத்மா.

பத்மாவுக்காக ஒரு தனி 'கலெக்ஷன்' இருந்தது என்னவோ உண்மைதான்! பத்மா 'சரி' என்று சொன்னால் ஆயிரமாயிரம் வீசி எறிய லட்சக்கணக்கான 'டம்பாச்சாரி'கள் தயாராக இருந்தனர். அப்படிப்பட்ட பத்மா 'என் காதலி' என்று சொல்லிக்கொள்ள மதனராஜுக்கு ஒரே பெருமை! குமாரி பத்மா தன்னை விட்டு வேறு எந்தக் கம்பெனிக்கும் மாறிவிடக்கூடாது என்பதற்குத்தான்......''சீக்கிரம் விவாகம் செய்துகொள்ளலாம்''...... என்று ஆசையாக அடிக்கடி கூறுவான் மதனராஜ். இதை நம்பிக்கொண்டுதான்......பல நல்ல 'சான்ஸ்'களையும் குமாரி பத்மா உதறிவிட்டாள்.

இந்த நிலையில்தான் மதனராஜ் ராணி மீது கண்ணோட்டம் செலுத்தினான். ராணியின் அழகும், அக்காள் மகள் என்ற உரிமையும், அவன் உள்ளத்தை உலுக்கின. ராணியை மனைவியாக்கிக்கொள்ள வேண்டும் என்று அக்காளிடமும் அத்தானிடமும் நயமாகப் பேசினான் மதனராஜ். ராணியிடத்திலும் தன் ஆசையை வெளியிட்டிருந்தான். ஆனால், சுகுமாரையும் என்னையும் அசைக்க முடியாது என்று ராணி ஆணித்தரமாகப் பதில் சொல்லிவிட்டாள்.

''எனக்கு ராணி மனைவியாகாவிட்டாலும் பரவாயில்லை. அந்தச் சுகுமாரை அவள் மணக்க வேண்டாம். அந்தச் சுகுமார் இன்றோ நாளையோ துப்பாக்கிக் குண்டுக்காவது தூக்குக் கயிறுக்காவது இரையாகப் போகிறான்! அவன் பயங்கர அரசியல்வாதி.'

—மதனராஜ் இப்படி எல்லோரிடமும் கண்ணீர் விட்டுப் பேசுபவனைப் போலக் கூறினன்; இதை வைத்தே ராணியின் பெற்றோர்கள், சுகுமாரை மணக்க வேண்டாம் என்று சொன்னார்கள். காதல் எதையும் பொருட்படுத்துமா? ராணியின் கழுத்திலே சுகுமார் மண மாலை சூட்டிவிட்டான்: இனி ராணியை மனைவியாக்க முடியுமா? முடியாது என்பதை மதனராஜ் நன்கு உணர்ந்திருந்தான். அதனால் மதனராஜ் அயர்ந்தானா?

ராணியின் கணவன் ஜெயிலிலே இருக்கிறான். இந்தச் சமயத்திலே ராணிக்கு ஆறுதல் சொல்பவனாக இருந்தால் ...ஒரு வேளை அந்தரங்கத்திலே ராணி ஆசைநாயகியாக மாட்டாளா.........என்ற எண்ணந்தான் மதனராஜ் மனத்திலே புகைந்து கொண்டிருந்தது.

மனிதன் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் சூழ்நிலைதான் காரணம் என்பதை நன்கு உணர்ந்தவன் மதனராஜ். குறிப்பறிந்து ராணியிடம் பேசினான். இது ஓரளவு ராணிக்கு ஆறுதலாக இருந்தது.

" ராணி! இன்று ஜெயிலுக்குப் போய்ச் சுகுமாரைப் பார்த்து வரலாம்.''

இதைக் கேட்டதும் ராணிக்கு ஒரே மகிழ்ச்சி. துள்ளிக் குதித்து எழுந்தாள். அவனோடு ஜெயிலை நோக்கிப் புறப்பட்டாள்.

ஜெயிலின் வாசலிலே எண்ணற்ற தாய்மார்களும், குழந்தைகளும் ஆண்களும் நின்றிருந்தார்கள்.

" மாமா இவர்கள் எல்லாம் ஏன் இங்கே நிற்கிறார்கள்?''

"நம்மைப் போல வந்திருக்கிறார்கள், கைதிகளைப் பார்க்க."

பரிதாபமான காட்சிதான்! ஏழு மாதங்களுக்கு முன் கணவனைப் பிரிந்த எட்டுமாத கர்ப்பிணி; கையிலே குழந்தை ஏந்திக் கவலையோடு நின்று கொண்டிருந்தாள்.

இன்றோ நாளையோ சாகப் போகிற கிழவன் ஒருவன், கொலைக் குற்றம் சாட்டப்பட்டு, ஆயுள் தண்டனை அனுபவித்து வரும், இளம் பேரனைக் காணவந்திருந்தான்.

மற்றொரு குமரிப் பெண் பத்து வருடங்களாக ஜெயிலுக்குத் தன் தந்தையைப் பார்க்க வந்து கொண்டிருக்கிறாளாம்! அவள் ஐந்து வருடக் குழந்தையாக இருக்கும் போது அவன் ஜெயிலுக்குப் போனானாம்! அவனுக்குப் பத்து வருடம் சிறையிலே கடந்து விட்டதாம்! குழந்தை குமரியான பருவகால வளர்ச்சியைப் பார்க்கக் கொடுத்து வைக்காதவனாய்ச் சிறையில் கிடக்கிறானாம்! விடுதலையாக இன்னும் இரண்டு வருடம் ஆகுமாம்!

இதையெல்லாம் கேட்ட ராணிக்கு மயக்கம் வரும் போல் இருந்தது. என் சுகுமார் எவ்வளவு நாள் சிறையில் இருக்க வேண்டிய திருக்கும்?......பதிலைக் கற்பனை செய்து பார்த்தால் பயங்கரமாக இருந்தது.

"உலகத்திலே சிறைச்சாலை இருக்க வேண்டுமா? அவசியந்தானா?"

"அவசியந்தான்! மக்கள் வாழ சட்டம்! சட்டம் வாழத் தண்டனை! தண்டனை வாழச் சிறை! இவை இல்லாவிட்டால் உலகிலே அமைதி இருக்குமா? சாந்தி இருக்குமா?"

"நல்ல சாந்தி! நல்ல அமைதி! காட்டிலே கூட்டம் கூட்டமாக வாழும் யானை, புலி, கரடி, மான் ஆகியவைகளுக்குச் சட்டம் உண்டா? சிறை உண்டா? இவையில்லாத அந்தக் கூட்டத்திலே, அமைதி இல்லையா?"

"பெண்ணே! ஒன்றை ஒன்று கொன்று தின்று வாழுகிறதே, அங்கேயா அமைதி?"

"ஏன் மனிதக் கூட்டத்திலும் அந்தக் கோரம் இருக்கத்தான் செய்கிறது. மானைப் புலி அடிப்பதற்கும், புலியை யானை அடிப்பதற்கும், ஆடு கோழிகளை மனிதன் கொல்வதற்கும் என்ன வித்தியாசம்? பகுத்தறிவு இல்லாத மான் கூட்டம், புலிக் கூட்டம், யானைக் கூட்டம், பறவைக் கூட்டம்—ஆகியவை எல்லாம் தனித் தனியே தங்கமான வாழ்வு நடத்துகின்றன, சாந்தியோடு. சட்டமோ சிறையோ இன்றி!

ஆனால்—

பகுத்தறிவு படைத்த மனிதக் கூட்டம் வாழச் சட்டம், தண்டனை, சிறை தேவையாம்! மனிதனுக்கு மட்டும் ஆறறிவு இருப்பதால் மனிதன் உயர்ந்தவனும்! இப்படிச் சொன்னவன்—எழுதி வைத்தவன் யார்! தேவதூதனு? இல்லவே இல்லை! அவனும் ஒரு மனிதன் தான்! தன்னைத் தானே புகழ்கிறவன் தற்குறியாகத்தான் இருக்க வேண்டும்! பகுத்தறிவு இருக்கிறது என்று செருக்கில் மனிதன் எதையெல்லாமோ செய்கிறுன்!

இந்தப் பகுத்தறிவு மட்டும் மனிதக் கூட்டத்திற்கு இல்லாமல் இருந்தால்............? சட்டமும் சிறையும் இருக்குமா? என் சுகுமார் என்னை விட்டுப் பிரிந்து இருப்பாரா? என்னைப் போல் எண்ணற்ற பெண்கள், மகனை இழந்து, கணவனை இழந்து கண்ணீர் விடுவார்களா?

புத்தருக்கு 'ஞானோதயம்' எப்போது ஏற்பட்டது? பொதுவாக வாழ்க்கையில் 'விரக்தி' ஏற்படும்போது மனிதன் வேதாந்தியாக மாறிவிடுகிறுன்! ராணியின் நிலையும் அதுதானே? ராணியின் மனத்திலே தத்துவ ரீதியாக தர்க்கம் நடந்தது.

கைதிகளைப் பார்க்க எல்லாரும் மனுக் கொடுத்தார்கள். ராணியும் மதனராஜும் சுகுமாரைக் காண மனு எழுதிக் கொடுத்தார்கள்.

பத்து நிமிடங்கள் கழித்து மனுப் போட்டவர்களை எல்லாம், ஜெயில் அதிகாரி கூப்பிட்டான். எல்லோரும் சென்றனர்.

முதலில் ஒரு கம்பி வேலி ; மூன்றடி தள்ளி ஜன்னல் ; ஜன்னலுக்குப் பின்னால் கைதிகள், கைதிகளைப் பார்க்கவும் பேசவும் முடியுமே தவிர, தொடமுடியாது.

கூண்டிலடைப்பட்ட மிருகங்களைச் சர்க்கஸில் பார்க்கச் சென்றால் ஐந்தடி எட்டி நின்றே பார்க்கச் சொல்வான். சட்டத்தின் அகராதிப்படி கைதிகளும் மிருகமோ என்னவோ ! எல்லோரும் எட்டியே நின்றார்கள்.

பேச அனுமதிக்கப்படும் நேரம் ஐந்தே நிமிஷந்தான். அதன் பின் கைதிகளை உள்ளே போகச் சொல்லிவிடுவார்கள். இதையறிந்தே சிலர் 'மட மட' வென்று பேசினார்கள். இந்நிலையில் ஒரு நிமிஷம் கழிந்தது !

அப்படி இருந்தும் ராணி இன்னும் சுகுமாரைப் பார்க்கவே இல்லை. அந்தக் கைதிக் கூட்டங்களிடையே சுகுமார் தென்படவே இல்லை. ராணி அங்கும் இங்கும் விழித்தாள்.

ஏன் சுகுமார் வரவில்லையா? வந்திருந்தான் ; ராணியின் எதிரேதான் நின்று கொண்டிருந்தான் ! பின் ஏன் ராணிக்குக் கண் தெரியவில்லை? பகலிலே பூனைக்குக் கண் தெரியாததைப் போல் சிலருக்குச் சிறையிலே கண் தெரியாதா? அதுவும் உண்மையாக இருக்கலாம்.

ஆனால்—எதிரே நின்றது ராணியின் பழைய சுகுமாரல்ல, அதிகார வர்க்கத்தால் அலங்கோலப்படுத்தப்பட்ட புதுச் சுகுமார் ! அதனால்தான் ராணிக்குக் கண் தெரியவில்லை.

மூன்று நிமிடங்கள் கழிந்தன.

"எங்கே என் சுகுமார்? எங்கே ?"

"இதோ இருக்கிறேன், ராணி"

கட்டங் கட்டமாகப் போட்ட உடையணிந்து, தலை மொட்டையடிக்கப்பட்ட ஒரு உருவம் பேசிற்று!

"ஆ......நீங்களா? என் சுகுமாரா? ஐயோ சுகுமார்! உங்களை இந்தக் கோலத்திலா பார்க்க வேண்டும்?"

"ராணி! இந்தத் தேசத்திற்காக எத்தனையோ தியாகிகள் உயிரைக் கொடுத்திருக்கிறார்கள். மயிர் என்ன பிரமாதமா?"

ஐந்து நிமிடம் ஆகியது. "போ போ" என்று எல்லோரையும் விரட்டினார்கள். கைதிகள் உள்ளே சென்றனர். இனி மற்றவர்களுக்கு அங்கே என்ன வேலை?

வீட்டுக்கு வந்தும் ராணி அழுகையை நிறுத்தவில்லை. சுகுமாரின் விதவிதமான போட்டோக்களைப் பார்த்தாள்.

"சுகுமார்! உங்கள் அழகு எங்கே ஓடி மறைந்தது? உங்கள் முகத்திலே இருந்த சாந்தக் கவர்ச்சி எங்கே? காதல் ததும்பும் உங்கள் கண்கள் ஒளி இழந்துவிட்டனவே! அம்மா! என் காதல் சித்திரத்தைச் சிறை அதிகாரிகள் சின்னாபின்னப் படுத்திவிட்டார்களே!"

"அழுடி அழு! அப்பனைத் தொலைத்து என்னை விதவையாக்கினாய் அல்லவா? நீயும் என்னைப்போல் 'வாழாவெட்டியாதவள்'தான்! என் தம்பி மதனராஜை மணந்திருந்தால் இந்தக் கதி வருமா?"

ராணியின் தாய் இப்படிச் சொல்லாவிட்டாலும், சொல்வதுபோல் தோன்றியது ராணிக்கு. ராணியின் சிந்தனைச் சுழலிலே பழைய சுகுமாரும், மொட்டையடிக்கப்பட்ட சுகுமாரும் வந்து வந்து போனார்கள்.

பழைய காதல் கடிதங்களை எடுத்து ஒவ்வொன்றாகப் படிப்பாள். இருவரும் இன்பமாகக் கூடித் திரிந்த கல்லூரிக் காட்சிகள் கண்முன் தோன்றும், திடீரென்று. சிறை என்ற திரை விழுந்து அந்த ஆனந்தக் காட்சிகளை மறைத்துவிடும்.

மாடிப்படியிலே நின்றுகொண்டு, சுகுமார் குடியிருந்த அடுத்த வீட்டைப் பார்ப்பாள். ஜன்னலோரத்திலே சுகுமார் நின்று புன்னகை புரிவதும், கையை நீட்டி ராணி முத்தம் பெறுவதும், நினைக்க நினைக்க இன்பமாக இருந்தது.

ஆனால் — அத்தனையும் கனவாகிவிட்டது. காதல் வாழ்வுபற்றி அவள் செய்திருந்த கற்பனையெல்லாம், வாழ்க்கைக்கு உதவாத 'வர்ணனை'யாகிவிட்டது.

அடுத்த வாரமும் ராணி சிறைக்குச் சென்றாள். சுகுமாரைக் கண்டாள். கடந்த தடவையைப்போல அவ்வளவு அழுகை ராணிக்கு வரவில்லை. அழுது அழுது அயர்ந்து போனவள்.—அழுது பயனில்லையென்று அறிந்து கொண்டவள்—மீண்டும் மீண்டும் அழுவாளா?

ஆற்றிலும் கிணற்றிலுங்கூட ஊற்று வற்றி விடுகிறது! கண்ணீரென்ன வற்றாத ஜீவநதியா, கசிந்து கொண்டிருக்க? அழுது அழுதுதான் ராணியின் கண் இமை கனத்துவிட்டதே! இன்னுமா அழவேண்டும்?

"ராணி! அரசியல்வாதி ஆபத்தானவன் என்று அன்றே சொன்னேன். எனக்குப் பதில் மதனராஜை மணந்திருந்தால் எவ்வளவோ சுகமடைந்திருப்பாய்!"

சுகுமாரின் வாயை மூடக் கையை நீட்டினாள், ராணி! ஆனால்—கம்பிவேலி கையை அனுமதிக்கவில்லை.

மணந்துகொண்ட கணவனா இப்படிச் சொல்வது? ஒரு நீலிகூட இதைக் கேட்கச் சகிக்கமாட்டாளே!

"சுகுமார்! உற்றாரும் பெற்றோருந்தான் இப்படிச் சொல்கிறார்கள் என்றால் நீங்களுமா சொல்கிறீர்கள்?"

"ஆம்! உண்மையைச் சொல்கிறேன், ராணி! என்னிடத்தில் நீ இன்பத்தை எதிர்பார்க்க முடியாது. அடுத்த வாரம் என்னை அலிபுரம் ஜெயிலுக்குக் கொண்டு போகப் போகிறார்கள்."

இதற்குள் நேரமாகிவிட்டது. மேற்கொண்டு ஒரு வார்த்தைகூடப் பேச முடியவில்லை. வீடுவந்து சேர்ந்தாள் ராணி.

அப்போது ராணியின் அறையிலே மதனராஜ் சோதனையிட்டு, சுகுமார் எழுதிய காதல் கடிதங்களைக் கண்டெடுத்து, வாசித்துக்கொண்டிருந்தான். அங்கு வந்த ராணி இதைக் கண்டுவிட்டாள்.

"மாமா! அதை நீங்கள் படிக்கக்கூடாது-"

"படித்து முடித்துவிட்டேன், ராணி! நான் எத்தனையோ காம சாஸ்திரங்கள் படித்திருக்கிறேன்; ஆனால் இந்தக் கடிதத்திலே உள்ள 'சரக்கு'களைப்போல் எந்தச் சாஸ்திரத்திலும் கண்டதில்லை. காவியத்திலே இல்லாத கற்பனை—ஓவியத்திலே இல்லாத சிருங்கார ரசனை, இன்னோரன்ன எல்லாம் இருக்கின்றன இந்தக் கடிதங்களில்! இவை கடிதங்களல்ல, ராணி! எவருக்கும் கிடைக்காத உன் காதலைப்பெற வீசப்பட்ட அஸ்திரங்கள். விலைபேசப் பயன்பட்ட பொக்கிஷங்கள்!"

"இருக்கலாம்! அதனால் என்ன?"

"அதனால் எனக்கொன்றுமில்லை. ஆனால் ... உனக்கொன்று சொல்லுகிறேன்—அக்காள் மகள், ஏக்கத்தை விட்டு எக்களிப்போடு வாழவேண்டுமே என்ற நல்லெண்ணத்தோடு சொல்கிறேன்; முதலில் இந்தக் கடிதங்களை தீயிலிட்டுக் கொளுத்து."

"மாமா!......இவை எங்கள் நினைவுச் சின்னங்கள்!"

"இல்லை! வேதனைச் சின்னங்கள்! வெந்த புண்ணிலே மேலும் மேலும் குத்தும் கோல்கள்! வேல்கள்! இவை யிருந்தால்......கவலையும் கண்ணீரும் உன்னை உருக்கும். ராணி! நீ சுகமாக இருந்தால்தானே சுகுமாருக்காக வாழ முடியும்?"

"அதுவும் உண்மைதான்;"

"அப்படிச் சொல்லு! பகுத்தறிவு என்பது இதுதான் ராணி! இன்னும் சொல்கிறேன், சுகுமாரின் படங்களே இங்கு இருக்கக்கூடாது!"

"மாமா! அவர் என் தெய்வம்!"

"அந்தத் தெய்வம் உன் உள்ளக் கோயிலிலே குடியிருக்கட்டும். எனக்கு ஆட்சேபணையில்லை."

"மாமா! ஆலயத்திலே ஆண்டவன் இல்லையா?"

"இருக்கிறதென்று எந்த முட்டாள் சொன்னான் ராணி! உலகத்திலே ஆலயமே இல்லாதிருக்கும்போது ஆண்டவன் இருக்க முடியுமா?"

"மாமா! உங்களுக்கு மூளைக்கோளாறு?"

"ஏன் ராணி?"

"நம் நகரில் இருக்கும் கிருஷ்ணன் கோயில் ஆலயமில்லையா?"

"இல்லவே இல்லை. ஆலயம் என்பது சோம்பேறிகள் உழைக்காமல் உண்டு கொழுக்க ஏற்பட்ட ஆலையம்மா ஆலை!"

"எப்படியோ இருக்கட்டும். கடிதங்களை வேண்டுமானால் அப்புறப்படுத்தி விடுங்கள். போட்டோக்கள் இருக்கட்டும்!"

"வேண்டாம் ராணி, வேண்டாம்! உன் அன்புக்குப் பாத்திரமான சுகுமார் உன் சுவாசத்தோடு கலந்திருக்கட்டும். உன் சுகத்தை முன்னிட்டே இந்த முன்னேற்பாடு. படங்களையெல்லாம் பத்திரமான இடத்தில் வைக்கட்டுமா?"

ராணி பதில் பேசவில்லை. கடுகையே துளைத்துத் திருட நினைக்கும் கள்ளனுக்குக் கதவே திறந்திருந்தால்...—? காதல் கடிதங்களையும், காதலன் படங்களையும் எடுத்துச் சென்றான் மதனராஜ்.

பெண்களின் மனம்போல் பேசி, அவர்களை வசியப் படுத்துவதிலே அவன் கைதேர்ந்தவன். ராணியின் மனத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக மாற்றவேண்டும் என்பதுதான் அவன் திட்டம். சுகுமார் விடுதலை அடைந்து வருவதற்குள் ராணியை அந்தரங்கக் காதலி யாக்கிக் கொள்ளவேண்டும் என்றுதான் அரும்பாடு பட்டான். படங்களையும் கடிதத்தையும் மறைத்துவைக்க இன்று அனுமதித்த ராணி...—நாளை அணைப்புக்கு...?

முடியாதென்று சொல்ல முடியுமா? பாடாத தேனீ— பசியாத நல்வயிறு - விரகதாபம் இல்லாத விதவை உலகிலே உண்டா? ஒரு வகையில் கணவனைப் பிரிந்த ராணியும் விதவைதானே? அவள் ஆசைக் கனவில் என் அன்புச் சுழல் என்ற புயல் மோதும்போது, 'மையல்' என்ற மதுவெறி உண்டாகிவிட்டால்......? காமப் போதையில் கணவனை நினைக்க முடியுமா? அப்புறம் நானும் அவளும் காதல் ஜோடிகள்!

வெற்றி வெறி தலைக்கேறிய மதனராஜ் கடிதங்களை ஆயிரந் துண்டுகளாகக் கிழித்தான். சுகுமார் படத்தைச் சுக்கல் சுக்கலாக உடைத்தான்; எரியும் நெருப்பிலே எல்லாவற்றையும் போட்டான். அவன் உள்ளத்திலே இருந்த கோபத்தீ, கொஞ்சம் அணைந்தது.

ஆனால்—ராணி?

தன் இரு குழந்தைகளையும் எமனுக்குப் பறிகொடுத்த தாயைப்போல் இருந்தாள் ராணி. சுகுமாரை ஞாபகப் படுத்திக்கொள்ள, ராணியின் நெஞ்சத்திலே உள்ள நினைப்பைத் தவிர, வேறு எந்தச் சின்னமும் இருக்க முடியாதபடி செய்துவிட்டான் மதனராஜ்.

நெஞ்சத்தின் நினைப்பை மாற்ற......?

"ராணி கார் கொண்டுவந்திருக்கிறேன், ஊருக்கு வெளியே உல்லாசமாக...ம்...உன் நன்மைக்குத்தான்!"

மதனராஜ் பின்னால் ராணி நடந்தாள். வீட்டுக்கு வெளியே கார் நின்றது. பின் சீட்டில் உட்கார நினைத்

தாள் ராணி. ஆனால், முன்சீட் கதவைத் திறந்தான் மதனராஜ். ராணி உட்கார்ந்தாள். அவன் காரை ஓட்டினான்.

ஊருக்கு வெளியே ஓரமாக அமைந்திருந்த மாந்தோப் பின் வெளியே கார் நின்றது. இருவரும் இறங்கி தோப்பினுள் சென்றனர். பழம் ஒன்று பறித்து ராணி யின் கையிலே கொடுத்தான் மதனராஜ். ஆனால், ராணி சாப்பிடவில்லை.

"ராணி! எல்லையில்லாத கவலை எமன் அனுப்பும் சாவோலை! நீ படித்த பெண். உனக்கு எல்லாம் தெரியும். உன்னைவிடக் கஷ்டப்பட்ட பெண்கள் இல்லையா?"

"யார் இருக்கிறார்கள்?"

"ஏன் நூர்ஜஹான்? அவள் கணவன் ஷெர்கானை ஜஹாங்கீர் கொலை செய்தான். அதற்காக நூர்ஜஹான் வாழ்நாள் பூராவும் உன்னைப்போல் அழுதழுது கவலைப் படவில்லை; உண்ணாவிரதம் இருக்கவில்லை. கணவனைக் கொலை செய்த ஜஹாங்கீரையே மணந்து, அவனையே ஆட்டிப் படைத்தாள். அதுவல்லவா பெண்மை."

"போதும் உங்கள் சரித்திர உபதேசம்! நான் நூர் ஜஹானல்ல, கணவன் வரவுக்காக காத்துக் கிடந்த கண்ணகி!"

இவ்வளவு சூடாக ராணி பதில் சொல்வாள் என்று மதனராஜ் எதிர்பார்க்கவில்லை. பின்னர் இருவரும் வீடு திரும்பினர். இப்படி அடிக்கடி ராணியை மாலை வேளையில் எங்காவது அழைத்துச் செல்வான் மதனராஜ்.

அன்று பகல் பத்து மணியிருக்கும், ராணி வீட்டை விட்டு வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தாள். அப் போது எதிரே மதனராஜ் வந்தான்.

"மாமா! வாருங்கள் ஜெயிலுக்குப் போய் வரலாம்."

"ஜெயிலுக்கா?"

"அதற்குள் மறந்து விட்டீர்களா? இன்றுதானே சுகுமாரை அலிபுரம் ஜெயிலுக்குக் கொண்டு போகப் போகிறார்கள்?"

"எனக்கு எல்லாம் தெரியும் ராணி! ஜெயிலுக்குப் புறப்படத் தயாராகத்தான் வந்திருக்கிறேன். உன்னிடம் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன்."

"என்னிடமா? தங்கள் கூட வருகிற என்னிடமா?"

"ராணி! அலிபுரம் ஜெயிலுக்குப் போகிற சுகுமார் உன்னைக் கண்டு அழுதுகொண்டே போகவேண்டுமா?"

"ராணி! இன்று நீ சுகுமாரைப் பார்த்தால் அவன் நிம்மதி கெட்டுவிடும்; அப்புறம் அவன் பைத்தியமாக மாறிவிடுவான். நான் சொல்வதைக்கேள். நீ இங்கேயே இரு. நான் போய் ஆறுதல் சொல்லி, வருகிறேன்."

இதைக் கேட்ட ராணி, கண்ணீர் விட்டபடி கல்லைப் போல் அசையாமல், நின்றாள்; வாய் திறந்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. கூறப்பட்ட காரணங்களை ஏற்றுக் கொண்டாள் என்பதின் அறிகுறிதானே மௌனம்? காரில் மதனராஜ் புறப்பட்டான்.

கட்டிலில் படுத்து ராணி அழுதாள். ஆழமான அந்த அழுகைக் கடலிலே அன்ன ஆகாரமின்றி மாலைவரை நீந்திக் கொண்டிருந்தாள். இடைக்காலத்திலே ஆறுதல் பெற ஒரு துரும்பு கூட அவள் கைக்குச் சிக்கவில்லை. அப்புறம் மதனராஜ் வந்து சேர்ந்தான்.

"கண்டேன் சீதையை!" என்று அனுமான் ஆனந்தத்தோடு ராமனிடம் செய்தியை ஆரம்பித்ததுபோல, மதனராஜ் ராணியிடம் பேச்சை ஆரம்பித்தான்:

"சுகுமார் என்ன சொன்னான் தெரியுமா? நீ அவனை நினைக்கக் கூடாதாம்! அப்படிச் செய்தால் அவனுக்கு அமைதியே இருக்காதாம்! நீ கடிதங்கூட எழுதக் கூடாதாம்! எப்போதும் சந்தோஷமாய் இருக்க வேண்டுமாம்!

நீ முன்யோசனையுடன் சிறைக்கு வராமலிருந்ததைப்பற்றி அவன் உன்னைப் பாராட்டினான்; உனக்கு நன்றி செலுத்தினான்.''

இப்படியே அடுக்கிக்கொண்டே போனான் மதனராஜ் அனுமாரைப்போல, சீதையைக் கண்டதற்கு அடையாளமாக அனுமார் மோதிரம் கொண்டுவந்தான்! ஆனால் மதனராஜ்? சுகுமாரைக் கண்டிருந்தால்தானே! கண்டதாகக் கற்பனை செய்து, வாய்ப் பந்தல் போட்டான் மதனராஜ். ராமனைப்போல ராணியும் அடையாளம் கேட்டிருந்தால்......நமது நாட்டு ஜெயில், சீதை சிறை இருந்த அசோகவனமல்ல. அடையாளம் கொடுக்க...... என்று ஆணித்தரமாகப் பதிலளிப்பாள். ஆனால் பேதைப் பெண் ராணி எதையும் கேட்கவில்லை. மதனராஜ் சொன்னதை அப்படியே நம்பினாள்.

அதன்பின் தினசரி ராணியும் மதனராஜும் மாலையில் உலாவச் செல்லாமல் இருப்பதில்லை. கணவன் சொல்லுக்காக, ராணி கொஞ்சம் கவலையை விட்டாள். இருக்கிற கவலையை மறக்க, கிளப்புக்குச் சென்று விளையாடுவாள்; சினிமாவுக்குச் செல்வாள்; இப்படியே ஆறு மாதங்கள் கடந்தன.

''ராணி! புறப்படு புறப்படு! குற்றாலம் போகலாம். அம்மா உத்தரவு கொடுத்து விட்டார்கள்.''

ராணி சற்று தயங்கினாள்.

''என்ன ராணி யோசிக்கிறாய்? சீசனுக்கு எப்போதும் ஜீவன் இருப்பதில்லை. இருக்கிறபோது 'கருமி'யாக இருந்து, இல்லாதபோது கர்ணனை நினைத்தால் தானம் செய்ய முடியாது! இயற்கைக் காட்சிகள் இதயத்திலே மகிழ்ச்சியை ஊட்டும்!''

''குற்றாலத்திலே எவ்வளவுநாள் இருக்கவேண்டும்?''

''ஒரு மாதம்!''

"அப்புறம்?"

"திருநெல்வேலியில் இரண்டொரு நாள்! அதுவும் அடுத்த மாதத்திலிருந்து அங்கு முகாம் போடுகிற என் கம்பெனி நாடகத்தை நீ பார்க்க."

ராணி மறுப்பொன்றும் சொல்லவில்லை. ராணியும் மதனராஜூம் குற்றாலம் புறப்பட்டார்கள். குற்றாலத்தில் தன் நினைவு கைகூடும் என்று மதனராஜ் திட்டம் போட்டிருந்தான்.

அந்த வருடம் குற்றாலத்தில் சீசன் மிகவும் நன்றாக இருந்தது. கூட்டமும் சொல்லி முடியாது. பிரபல சினிமாஸ்டார்களெல்லாம் வந்திருந்தனர். அவர்களில் சிலர் மதனராஜூக்குப் பழக்கமானவர்கள். மதனராஜை கண்டு பேசிச் செல்ல வந்தனர். ராணியும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டாள்.

சில ஸ்டார்கள் ராணியை விருந்துக்கு அழைத்துச் சென்றனர். சினிமாஸ்டார்களை ராணிக்கு மிகவும் பிடித்திருந்தது. "பெண்ணாகப் பிறந்தாலே எந்நாளும் துன்பந் தானே" என்று யாரோ பாடக் கேட்டிருக்கிறாள் ராணி. அதை உண்மை என்றும் நம்பி இருந்தாள். ஆனால்—பெற்றோர்களுக்கும் உற்றார்களுக்கும், கணவனுக்கும், குழந்தைக்கும் கவலைப்படாமல், கலையின் பேரால் சிங்கார வாழ்வு நடத்தும் சினிமாஸ்டார்களைக் கண்டபிறகு அந்த எண்ணத்தை ராணி மாற்றிக் கொண்டாள். எல்லோருக்கும் இந்த வாழ்வு கிடைத்தால் எவ்வளவோ இன்பமாக இருக்கும் என்று எண்ணினாள். நடிகைகள் கூடத் திரிந்த ராணியையும் ஒரு 'ஸ்டார்' என்றுதான் ரசிகர்கள் தீர்மானித்திருந்தனர்.

இந்த ஸ்டார்கள் அருவியிலே குளிக்கும்போது ஆண்கள் கூட்டத்துக்கு அளவே இருப்பதில்லை. குளிப்பது போல் மதனராஜூம் கூடவே இருப்பான்.

அருவியின் நீர்த்துளிகள், ராணியின் அங்கங்களிலே பட்டு, முத்து முத்தாகத் தெறித்துச் சிதறிச் செல்லும் காட்சியைக் காணக்காண மதனராஜ் உள்ளம் பூரித்தது. தான் அந்தத் தண்ணீராக இருந்தால்......? ராணியின் தங்க உடலிலே தவழ்ந்து விளையாடலாமல்லவா?

ஆனால், கௌதமனாக மாறி, அகல்யாவை அணைத்திடநினைக்கும் இந்திரன் காலமா இது? பெண்ணைப் பார்த்தால் கண்ணைக் குத்திவிடும் முன்னேற்றக் காலமல்லவா இது? மதனராஜ் பெருமூச்சுவிட்டான்.

நாட்களும் நீரோட்டத்தைப்போல ஓடிக்கொண்டே இருந்தன. ராணியிடம் தன் அந்தரங்க எண்ணத்தை வெளியிட மதனராஜுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவே இல்லை. ராணி ஸ்டார்களின் ஜாகையிலும், தன் சினேகிதைகளின் சேர்க்கையிலும் சதா உல்லாசமாகப் பொழுதைக் கழித்துவந்தாள்.

இரண்டொரு நாட்கள் சென்றதும் ராணி, மதனராஜ், சினிமாஸ்டார்கள் ஆகிய எல்லோருமே திருநெல்வேலிக்குப் புறப்பட்டனர். திருநெல்வேலியில் நாடகக் கம்பெனி மறுநாள் ஆரம்பமாக இருந்தது. கம்பெனியின் பிரதான நடிகையான குமாரி பத்மா எல்லோருக்கும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டாள்.

உலகப் புகழ்பெற்ற பேராசிரியர் டால்ஸ்டாயின் 'அன்னகரினா' என்ற கதைதான் கம்பெனியின் முதல் நாடகமாக இருந்தது. அன்று பகலில் கதை ஒத்திகை நடைபெற்றது. அதை எல்லோரும் பார்த்தனர். கதை விறுவிறுப்புடன் சென்றுகொண்டிருந்தது.

அன்னா ஓர் அழகி. கல்யாணமானவள். செரிஜா என்ற ஆண் குழந்தைக்குத் தாய். கணவன் பெரிய ராஜதந்திரி. பெயர் கரீன். இந்த நிலையில் அன்னாவும் விரான்ஸ்கி என்ற வாலிபனும் எதிர்பாராத விதமாக ரயிலில் சந்திக்கின்றனர். ஒருவரை ஒருவர் பார்த்துக் காதல் கொள்கின்றனர்.

ஒரு பக்கம் கணவனும் ஆசைமகனும்! மறுபக்கம் மகத்தான காதல்! அன்னாவின் மனதிலே போராட்டம்! காதல் வெற்றிபெறுகிறது. அன்னா எதையும் லட்சியம் செய்யவில்லை. விரான்ஸ்கியின் அணைப்பில் ஆனந்தமாக இருந்தாள்.

கணவன் என்ற உரிமையில் கரீன் கண்டித்தான். தன் வீட்டுக்கு விரான்ஸ்கி உறவிலே ஒரு 'உரு' அன்னா வயிற்றிலே வளர்ந்துவந்தது. அன்னா கர்ப்பவதியாகக் காட்சியளித்தாள். பிரசவ காலம் நெருங்கியது. அன்னாவுக்கு ஜன்னி வந்துவிட்டது. அன்னா பிழைக்கமாட்டாள் என்று டாக்டர்கள் சொன்னார்கள். கோபமுற்ற கரீன் பச்சாத்தாபம் கொண்டு, ஓடி வந்து அன்னாவைக் கேட்டான்.

அன்னா, கரீனின் மன்னிப்பைக் கேட்டாள். சாகப் போகும் இந்தச் சமயத்திலாவது விரான்ஸ்கியை உள்ளே வர அனுமதியுங்கள் என்று தன் கணவனைக் கெஞ்சினாள். விரான்ஸ்கி உள்ளே வந்தான். அன்னாவைக் கண்டதும் 'ஓ' வென அழுதான்'

"அழாதே விரான்ஸ்கி! உன் அழகான முகத்தை அழுகையால் அலங்கோலமாக்காதே! சாகப் போகிற நான் உன் சந்தோஷ சந்திரவதன முகத்தைப் பார்க்க வேண்டும்! கண்ணீரை நீக்கி விடு! கவர்ச்சி நிறைந்த உன் கண்களை எனக்குக் காட்டு!"

இப்படி அன்னா சொல்லச் சொல்ல விரான்ஸ்கி சிறு பிள்ளை போல் மேலும் மேலும் அழுதான்.

"கரீன்! விரான்ஸ்கியை அழவிடாதீர்கள்! அவனை முதலில் மன்னியுங்கள்! குற்றமெல்லாம் என்னுடையது தான்! அவனை நான் சாவதற்கு முன்பு மன்னியுங்கள்!"

மரணப் படுக்கையில் இருக்கும் தன் மனைவி அன்னாவின் வார்த்தைகளைக்கேட்டு, கரீனும் அழுதான். தன்

மனைவியின் அந்தரங்கக் காதலனான விரான்ஸ்கியை மன்னித்தான்.

கரீனின் பெருந்தன்மையைக் கண்டு விரான்ஸ்கி வெட்கினான்; வேதனைப் பட்டான். இனித் தானும் உயிர் வாழ்வதில் பயனில்லை என்று முடிவு கட்டி தற் கொலை செய்துகொள்ளச் சென்றான்.

ஆனால் — விரான்ஸ்கியும் தப்பினான் — அன்னாவும் சுகப் பிரசவத்துடன் தப்பினாள். அதோடு காதல் அறுந்து விட்டதா? தன் கணவன் கரீனோடு அன்னா வாழ்ந்தாளா?

தன் மகன் செரிஜாவையும், கணவன் கரீனையும் விட்டு விரான்ஸ்கியுடன் உல்லாசப் பிரயாணம் சென்றாள். காதல் வாழ்க்கை நடத்தினாள்!

ஆனால்...

அர்த்தமில்லாதபடி அடிக்கடி விரான்ஸ்கியுடன் சண்டை போட்டாள்; சந்தேகமும் கொள்ள ஆரம்பித்தாள்; விரான்ஸ்கிக்குத் தன் மீது முன்பு போலக் காதல் இல்லை என்று கற்பனை செய்து கொண்டாள்; தன்னை அலட்சியப் படுத்திய விரான்ஸ்கியை வேதனைப் படுத்த நினைத்தாள். ஓடும் ரயிலில் விழுந்து, அன்னா மடிந்தாள்.

அன்னா இல்லாத வாழ்க்கை விரான்ஸ்கிக்குச் சூன்யமாகப் பட்டது. சாந்தி, அமைதி இவைகளைப் பெற யுத்த களம் சென்றான் விரான்ஸ்கி.

இந்தக் கதை, ஒத்திகையிலே எல்லோரையும் கலங்க வைத்தது. இதில் குற்றவாளிகள் யார் என்பதையே கண்டு பிடிப்பது கஷ்டமாக இருந்தது.

"என்ன இருந்தாலும் கணவனையும் மகனையும் பிரிந்து இன்னொருவனோடு செல்கிறவள் ஒரு பெண்ணா..., ..., ?" என்று கேட்டாள் அந்தரங்கத்திலே இருவரை ஆசை நாயகராகக் கொண்ட ஒரு ஸ்டார்.

"ஏன்...பத்து மாதம் சுமந்து வருந்திப் பெற்று வளர்த்த தாய் தந்தையரைக் கூடக் காதல் மதிப்பதில்லையே? இடையிலே வந்த கணவனும், குழந்தையும் பெரிதா......? ராணி! உன் கருத்தென்ன......?" என்று கேட்டான் மதன்ராஜ்.

"எந்தப் பெண்ணுக்கும் அன்னா நிலை ஏற்பட்டால் விரான்ஸ்கியோடுதான் செல்ல வேண்டியதாயிருக்கும்..." என்று ராணி சொன்னதும்............

"சரியாகச் சொன்னாய், ராணி! இந்த நாட்டிலே கணக்கற்ற 'அன்னா'க்கள் இருக்கின்றனர். ஆனால் ....." என்று அவன் நீட்டினான்.

"அவைகளை எடுத்துக் காட்ட ஒரு டால்ஸ்டாய் கூட இந்த நாட்டில் இல்லை" என்று ராணி முடித்தாள்.

மதனராஜுக்கு ஒரே குஷி! இன்றைய நிலையில் ராணி ஒரு அன்னா! சிறையில் இருக்கும் சுகுமார் கரீன்! ராணி கூடவே இருக்கும் தான் விரான்ஸ்கி! இப்படி என்ன வெல்லாமோ கற்பனை செய்து கொண்டான் மதனராஜ்.

அப்போது ராணிக்கு ஒரு தந்தி வந்தது. அவசர அவசரமாக மதனராஜ் பிரித்துப் பார்த்தான். திடுக்கிட்டான்.

"ராணி! அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம்! உடனே புறப்படணுமாம்!"

—இந்தச் செய்தி ராணிக்கு மற்றொரு இடியாக இருந்தது. அன்று நாடகம் பார்ப்பதை நிறுத்திவிட்டு மதனராஜும் ராணியும் காரிலேயே ஊருக்குப் புறப்பட்டனர்.

இரவு மூன்று மணிக்குக் கார் ஊர் வந்து சேர்ந்தது. பல தெருக்களைக் கடந்து கார் விரைந்து வந்தது. கார் தூர வரும்போதே ராணியின் வீட்டிலிருந்து 'அழுகுரல்' கேட்டது.

காரில் இருந்து இறங்கி ராணி கதறிக் கொண்டே வீட்டினுள் ஓடினாள். தன் தாயின் பிணத்தைச் சுற்றி எல்லோரும் அழுது கொண்டிருப்பதைக் கண்டாள்.

"அம்மா! அம்மா!" என்று ராணியும் அழுதாள்.

## 3 இருட்டறையில் சுகுமார்!

ராணி இப்படியா அழுவது? கல்யாண தினத்தன்று நான் கைது செய்யப்பட்டால் என்ன, மண அறையைச் சுற்றி வரும்போது மாரடைப்பால் மண மகன் மாண்டு விட, விதவை என்ற பட்டத்தோடு வாழ்நாள் பூராவும் வீட்டிலே அடைபட்டுக் கிடக்கும் 'அமங்கலிகள்' இந்த நாட்டிலே இல்லையா?

நான் சிறைக்குச் சென்றதும் எங்கள் காதலும் சிறைப் பட்டு விடுமா? சந்திரனும் சூரியனும் எங்கே இருந்தால் என்ன? ஒளி தாவுவதில்லையா? அந்தப் போலத்தானே காதலும்? இது ராணிக்குத் தெரியாத பாடமா?

சிறையில் ராணி அழுது கழித்த நேரத்திலே ஆனந்த மாக ஏதேனும் பேசி இருக்கலாம்! அல்லது ஒருவருக் கொருவர் ஆறுதல் சொல்லி இருக்கலாம்.

தன் காதலன் மொட்டையடிக்கப்பட்டு அவலட்சண மாக இருக்கிறானே, என்று கவலைப் பட்டு அழுது விட்டாளா ராணி! திருப்பதி, பழனி போன்ற இடங் களுக்குச் சென்று பக்தர்கள் மொட்டையடிப்பதில்லையா! சர்க்கார் என்ற சர்வேசுவரனுக்குக் காணிக்கையாக மொட்டையடிக்கப் பட்டிருக்கிறது என்று கருதிவிட்டுப் போகவேண்டியதுதானே?

சிறையிலே மொட்டை மட்டுமா அடிக்கிறார்கள்? நான் சிறைக்கு வந்த மறுதினம் மாலை 6 மணி இருக்கும். புதிதாக மூன்று கைதிகள் அழகான கிராப்புடன் வந்தார் கள்.

அவர்களைப் பார்த்து தலைமை வார்டன், "நீங்கள் யார்? என்ன வழக்கு? எவ்வளவு தண்டனை?" என்று அதிகாரமாகக் கேட்டான்.

"ஆட்சேபகரமான புத்தகம் எழுதியதாக வழக்கு! ஆறுமாதத் தண்டனை பெயர் ஆசைத்தம்பி. கலியபெருமாள், தங்கவேல்!"......என்று சொன்னார்கள்,

அந்த வார்டன் என்ன நினைத்தானோ தெரியாது. மூவரின் ஆடைகளையும் அகற்றிவிட்டு, நிர்வாணமாக நிறுத்திவைத்துச் சோதனை போட்டான். சோதனை முடிந்ததும், ஆடைகளை கொடுக்காமல், கைதி உடைகளும் தராமல், வெறும் 'கோவணம்' கொடுத்து, ஒவ்வொருவரையும் தனித்தனி அறையில் போட்டு அடைத்தான்.

மறு நாள் அந்த மூவரை நான் பார்க்கும் போது, அவர்களுடைய அழகான 'கிராப்' அதிகார தேவதைகளுக்கு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு, என்னைப் போலவே காட்சி அளித்தனர்.

அழகு நிலையானதல்ல என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு!

வாலிபன் வயோதிகனாவதும், முத்துப் பல்லழகி பொக்கை வாய்க் கிழவியாவதும் இயற்கை!

இது ராணிக்குத் தெரியாத நியதி அல்ல. தாயைப் பிரிந்த சேய்தான் விபரம் தெரியாமல் அழும்! ராணி என்ன பச்சைக் குழந்தையா? அல்லது அழுகையின் மூலந்தான் அன்பைக் காட்டவேண்டுமா?

அழுவது கோழைத்தனம் என்பது என் அசைக்க முடியாத எண்ணம்! என் வாழ்க்கையிலே நான் அறிந்த வரை அழுததாகவே நினைவில்லை. குழந்தைப் பருவத்திலே நான் அழுதிருக்கலாம்! அது கோழைத்தனத்தைக் காட்டும் அழுகையல்ல! குழந்தைகள் காரியம் சாதித்துக் கொள்ள அழுகையை ஆயுதமாக உபயோகிக்கின்றன!

நான்கூடக் குழந்தைப் பருவத்தில், என் தந்தை உதைக்கும் போது அழுதிருக்கலாம். வலி தாங்கமாட்டாமல் அல்ல. அடுத்த அடி மேலே விழாமல் இருக்க அழுகையைக் கேடயமாகப் பயன் படுத்தியிருக்கலாம்! அழுகையின் மூலம் லாபம் இருப்பதாகத் தெரிந்தால் அழ வேண்டியதுதான்!

ஆனால்—ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டவர் மீண்டும் வரமாட்டார் என்பது தெரிந்தும் அழுவது அறியாமையில்லையா? என் தந்தை செத்த போது நான் அழுதேனா? இன்றல்ல, என்றாவது ஒரு நாள் எல்லோரும் சாகவேண்டியவர்கள்தான். இது எல்லோருக்கும் தெரிந்த இமயமலை உண்மை! அப்படி இருக்க, 'ஐயோ! போய்விட்டாரே!' என்று அழுவானேன்?

இந்த உண்மை ராணிக்கும் அந்த இளங் கைதிக்கும் ஏனோ தெரியவில்லை. அவனுக்கு வயது பதினெட்டுத்தான் இருக்கும். ஆத்திரத்தில் எவனையோ கொலை செய்து விட்டானாம்! அவனுக்கு ஆயுள் தண்டனை விதித்து விட்டார்கள்.

ஜெயிலுக்குள்ளே வந்த அந்தக் கைதி, 'எங்கம்மாவை பார்க்கணும்,' என்று சதா அழுதுகொண்டே இருக்கிறான். அவன் அழுகையைக் கண்டு சட்டம் இளகிவிடுமா? உலகத்திலே இருதயம் இல்லாத ஒன்று இருக்குமேயானால், அது சட்டந்தானே?

'பகவானே! சீக்கிரம் என்னை விடுதலை செய்யப்பா!'' ......என்று அந்தக் கைதி தினமும் ஆண்டவனைத் தொழுகிறான். எப்படி அரசாங்கம் மதவிஷயங்களில் தலையிடுவதில்லை என்று சொல்கிறதோ, அதேபோல்தான் இந்தக் காலக் கடவுள்கள் சர்க்கார் விஷயத்தில் மட்டுமல்ல, ஜனங்களின் வாழ்க்கையில் கூடத் தலைகாட்டாமல், தலை மறைவாய் இருந்து வருகின்றனர்! இது அந்தக் கைதிக்கு எப்படித் தெரியும் தினமும் அழுதான்; தொழுதான்!

"எந்த நினைப்பும் இல்லாமல் இருக்கிறாயே? நீ கல் நெஞ்சக் காரனப்பா!"...... என்று என்னைப்பார்த்துப் பல கைதிகள் சொல்வதுண்டு.

சர்க்கஸ்காரன் தன் பிழைப்புக்காப் புலியைப் பிடித்துக் கூட்டிலே அடைக்கிறான். இதைப்போலத்தான் சுயநலக்காரன், தன் பதவியைப் பலப்படுத்திக்கொள்ளத் தனக்கு ஆகாத அரசியல்வாதிகளைப் பிடித்து சிறையில் அடைக்கிறான்!

கூண்டில் அடைபட்டுக் கஷ்டப்படுகிறோமே என்று புலி கண்ணீர் விடுவதுண்டா? தன்னைப் பிடித்து அடைத்தவனை எப்போது கொன்று தின்னலாம் என்றுதான் புலி எண்ணிக்கொண்டிருக்கும். இதைப்போலத்தான் சிறையிலிடப்பட்டோர் பழிவாங்கும் உணர்ச்சியோடு வெளியே வருகின்றனர்.

வெறும் தண்டனையால் குற்றத்தைக் குறைத்துவிட முடியாது! தக்க கல்வி போதனையே குற்றத்தைத் திருத்தும் மாற்று மருந்து!

ஒரு தடவை சிறைக்கு வந்தவன் மறுதடவை சிறைக்கு வர அஞ்சுவதில்லை. எனக்கு இது ஒரு தடவை! இரு தடவையா? நாலாவது தடவை; இதில் மூன்று தடவை சப்ஜெயிலிலும், இரண்டு தடவை சென்ட்ரல் ஜெயிலிலும் இருந்திருக்கிறேன்.

சப்ஜெயில் என்பது சர்க்கஸ் கூண்டு! காட்சி நேரத்தைத் தவிர கூண்டுக்குள்ளேயே மிருகங்கள் அடைபட்டிருப்பதைப்போல, சாப்பாட்டு நேரத்தைத் தவிர அறைகளிலேயே கைதிகள் அடைபட்டிருப்பார்கள் சப்ஜெயிலில்.

சென்ட்ரல் ஜெயில் என்பது மிருகக் காட்சி சாலையின் கூண்டு! இரவு நேரத்தைத் தவிரக் கூண்டுக்கு வெளியே, திறந்த வெளியில் வெட்டப்பட்ட பள்ளத்திலே மிருகங்கள் உலாவுவதைப்போல பகலில் கைதிகள்

அடைபடாமல் அங்குமிங்கும் செல்வார்கள் சென்ட்ரல் ஜெயிலில்:

முதல் முதலாக நான் ஜெயிலுக்குச் சென்றபோது கூட நான் கவலைப் படவில்லை. எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. என்னையும் என் நண்பர்களையும் கோர்டில் ஆஜர்படுத்திவிட்டு, சப் ஜெயிலுக்குக் கொண்டுவரும் போது மாலை மணி ஆறு ஆகிவிட்டது.

''சொந்தச் சாப்பாடு சாப்பிட்டுக் கொள்ளுங்கள்''... ......என்று சிறை அதிகாரி கருணையோடு எங்களிடம் சொன்னார். ''சர்க்கார் விருந்தாளியாக வந்திருக்கிற நாங்கள் அப்படிச் சாப்பிட முடியாது''......என்று சொல்லி விட்டோம். அதன்பின் எங்களுக்குச் சாப்பாடு போட்டு விட்டு, எங்களைச் சிறையில் அடைக்கும்போது மணி ஏழு ஆகிவிட்டது.

அடைக்கப்பட்ட அரைமணி நேரத்திற்கெல்லாம் நான் தூங்கிவிட்டேன். என் நண்பர்களில் சிலர் ஜெயில் என்பதையும் மறந்து நான் தூங்கிவிட்டதைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். ஆனால்—ரயிலில் நின்றுகொண்டே தூங்கிப் பழக்கப்பட்ட எனக்கு, ஜெயிலில் படுத்துத் தூங்குவதா கஷ்டம்?

அதுமட்டுமல்ல, பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே நான் சிறை வாழ்க்கைதான் நடத்தினேன். இரண்டு வருடம் 'போர்டிங்' பள்ளியில் படித்தேன்.

போர்டிங்கைச் சுற்றிச் சாதாரணச் சுவர்மட்டும் இருந்தாலும், எவரும் வெளியே போகக்கூடாது என்ற சட்டம் இருந்தது. உள்ளே அடைபட்டுத்தான் கிடப்போம்.

சிறையிலே, மணி அடித்துச் சாப்பாடு போடுவதைப் போலத்தான் போர்டிங்கிலும் போட்டார்கள். சிறையிலே ஜெயிலர், சூப்ரண்ட் இருப்பதைப்போல, போர்டிங்கிலும்—போர்டிங் மாஸ்டர், சீனியர், என்று இருந்தார்கள்.

இப்படிச் சிறுவயதில் பள்ளிச் சிறையில் பழக்கப் பட்ட எனக்குப் பெரிய ஜெயில் நல்ல வசதி உள்ள இடமாகத்தான் இருந்தது. கவலையின்றிக் காலத்தைக் கழித்துவந்தேன்.

ஆனால்—அலிபுரம் ஜெயிலிலே?

என்னையறியாமல் ஏதோ ஒன்று என் உள்ளத்தை உருத்திக்கொண்டே இருந்து. எதைக் கண்டாலும் வெறுப்பாக இருந்தது.

அலிபுரம் ஜெயிலிலே அமைதி இன்றி வாழ்ந்தேன், அடைப்பட்டுக் கிடக்கிறேமே என்ற எண்ணத்தால் அல்ல; கடைசியாக விடை கொடுத்தனுப்ப, என்னைக் காண ராணி வரவில்லையே என்ற வேதனையால் விசாரப் பட்டேன்! விடுதலையை எண்ணியல்ல, ராணியின் விபரீதப் போக்கைக் கண்டு! நாள்தோறும் நலிந்து வந்தேன், சோளக்கழி சாப்பிட்டதாலல்ல, காதலியின் துரோகச் செயலைக் கண்டு!

ராணியா துரோகம் செய்துவிட்டாள்? ஆம்! வேற் றூருக்கு நான் மாற்றப்படும் முன்பு என்னைப் பார்க்க வரச்சொன்னேன்! வந்தாளா? என்னைக் கண்டு கண்ணீர் விட்டாள்! விம்மி விம்மி அழுதாள்! ஆனால் என்னைக் காண வரவில்லை! இந்த உலகத்திலே அவளுக்கு என்னை விட முக்கியமானது என்ன இருக்கிறது? நான்தானே அவள் உயிர்?

வேஷக்காரி! என்னை வஞ்சித்துவிட்டாள். 'வேண் டாம்! என்னை மணக்க வேண்டாம்!' — இப்படி எவ்வ ளவோ சொன்னேன். 'முடியாது! நீங்கள் இல்லாமல் எனக்கு வாழ்வு இல்லை! தினமும் உங்கள் 'தரிசனம்; கிடைக்காவிட்டால் எனக்குப் பிணவாழ்வுதான்!' — இப் படி அலங்காரமாகப் பேசினாள், மோசக்காரி? காதலின் பெயரைச் சொல்லி, என்னைக் கைப் பொம்மையாக்கிக் கையை ஒடித்து, ஒதுக்கிவிட்டாள் காதகி!

ராணி என் காதலியா? என் மனைவியா? இல்லை!

இரண்டும் இல்லை? இன்று அவள் யாரோ? நான் யாரோ? நான் இருப்பது சிறைச்சாலை! அவள் இருப்பது சிங்காரச் சோலை! இரண்டுக்கும் இணைப்பு ஏற்படுத்த முடியுமா?

இன்று ராணிக்கும் எனக்கும் இடையே எவ்வளவு தூரம்? காதல் என்ற பாதை—பாலம் இருந்தது முன்பு! ஆனால்—இன்று? அது உடைந்துவிட்டது! அறுந்த கயிற்றை ஒன்றாக்கிவிடலாம்; ஆனால் உடைந்த கண்ணாடியை? இனி எங்கள் காதல் உடைந்த கண்ணாடி! அது உடைந்து, ஒன்று சேரமுடியாத சங்கு!

இனி ராணிக்கும் எனக்கும் தொடர்பு ஏற்பட முடியுமா? முடியவே முடியாது! ஒரு மாதம் இரு மாதமா? நான் ராணியைப் பிரிந்து இரண்டு வருடம் ஓடிவிட்டது.

அவள் என்னை நேரில் வந்து பார்க்கவேண்டாம். ஒரு வேளை 'அசந்தர்ப்பம்' அவளைப் பார்க்கவிடாமல் செய்திருக்கலாம்?

ஆனால் இந்த இரண்டு வருடத்திலே ஒரு லெட்டராவது போட்டாளா? ஒரு முக்காலணா கார்டு போட்டால் என்ன? தபாலாபீசை மூடிவிட்டார்களா? அல்லது எழுதுகிற கை ஒடிந்துவிட்டதா?

சாகசக்காரி! முன்பு வாரத்தில் நாலு காதல் கடிதங்கள் எழுதுவாள்! அவள் கடிதங்களை எல்லாம் சேர்த்துப் பார்த்தால் ஒரு ரீம் பேப்பர் இருக்கும் என் வீட்டில்! இன்று அதெல்லாம் மறந்துவிட்டாள், மதிகெட்டவள்!

ஒரே ஒரு வரி? நலமா? சௌக்கியமா? என்று எழுதிப் போட்டிருந்தால் என் அமைதி கெட்டிருக்குமா? தினமும் வேதனையால் வெந்து, நொந்து கொண்டிருப்பேனா?

குளத்திலே நீர் வற்றிவிட்டால் பறவை கவலைப்படுமா? ராணியும் அற்ற குளத்து அருநீர்ப் பறவைக் கூட்டத்தைச் சேர்ந்தவள்தான். அதனால்தான் மறந்து வாழ்கிறாள், மகாராசி!

நன்றாக வாழட்டும்! ஆனந்தமாக வாழட்டும்! நான் காதலனாக இருந்தபோது கட்டி அணைத்து முத்தமிட்ட காட்சிகளை வெட்டி எறிந்து விட்டுக் களிப்புடன் வாழட்டும்.

இனி நான் ஒண்டிக்கட்டை! இந்த உலகத்திலே —வாழ்க்கையிலே, எரியும் இந்தக் கட்டையைப்பற்றிக் கவலைப்பட இனி யாருமில்லை.

இந்த ராணி, என்னைப் பொறுத்த வரையில் இறந்து விட்டாள். நான் இல்லாத அந்த லோகத்திலே ஆனந்த வாழ்வு நடத்துகிறாள். ராணி! எல்லா நலமும் பெற்று அவள் வாழட்டும்! சிரஞ்சீவியாக வாழட்டும்.

## 4. கருநாகப் பிடியில்—ராணி!

வாழத்தான் செய்தாள், ராணி! முன்போல் அழ வில்லை; அலங்கோலமாக இருக்கவில்லை! அழகாக ஆடை கட்டிச் சிங்காரமாகச் சீவிவிட்டு, ஆடம்பரமாக வாழத் தான் செய்தாள், ராணி!

காலேஜ் குமாரி—படித்த பாவை—கண்டதற் கெல் லாம் காலம் பூராவும் கண்ணீர் விட முடியுமா? உத்தமப் பெண்டிர் கூடச் செத்த கணவனுக்காக ஒரு மாதந்தான். வருந்துவார்கள். சுகுமார் என்ன செத்தாவிட்டான்? ராணி எதற்காக வருந்த வேண்டும்?

இன்று அல்லது நாளை, என்றாவது ஒருநாள் விடுதலை அடைந்து, வீடு தேடிச் சுகுமார் வரமாட்டானா? வருவான் என்ற நம்பிக்கை வருத்தத்தை விரட்டிவிட்டது. கணவன் என்று ஒருவன் இருக்கிறானே என்பதையும் மறந்து, மதனராஜோடு காலங் கழித்து வந்தாள் ராணி!

"புருஷன் ஜெயிலில் இருக்க, இப்படி மேனி மினுக் கிப் புத்திகெட்டு வாழ்கிறாளே?"

"புருஷன் இல்லாட்டா என்ன? புருஷனைப்போல மாமன் இருக்கான்!"

"ஆமா ஆமா! அவளுக்கும் இவனுக்கும் தொடர்பு இல்லாமலா இப்படி ஊர் சுத்துறு?"

—ஊர் வாயை மூட, இந்த விஞ்ஞான காலத்தில் கூட ஒரு 'பாத்திரம்' இன்னும் கண்டுபிடிக்கவில்லை. அது மட்டுமல்ல, ஊர் வாயை மூட எந்தச் சர்க்காரும் 144 போட முடியாது!

ஊரார் இப்படிப் பேசுவதைக் கண்ட மதனராஜ், வெகுண்டெழவில்லை; மகிழ்ச்சி கொண்டான். தனக்கும் ராணிக்கும் அந்தரங்கத் தொடர்பு உண்டு என்று நன்ருகப் பேசட்டும்! அது அப்படியே உண்மையாக, நிகழட்டும் ராணியின் மனமும் மாறட்டும்! என்று மதனராஜ் வேண்டினன்.

ஆனல்-அரசியல் கைதிகள் ஒவ்வொருவராக விடுதலை செய்யப்பட்டு வந்ததைக் கேட்டு மதனராஜ் அவசரப் பட்டான். ஏதேதோ திட்டம்போட்டு இதுவரை ஒன்றும் நடக்கவில்லை. பலாத்காரம் செய்வதென்ருல் விபரீத மாளுலும் ஆகிவிடும் என்ன செய்வதென்றே மதன ராஜுக்குப் புரியவில்லை.

அன்று காலை 10 மணிக்கு ராணியும் மதனராஜும் ஊருக்கு வெளியே உள்ள ஏரியை நோக்கிக் காரில் போய்க்கொண்டிருந்தனர். இன்று எப்படியாவது ராணி யின் சம்மதத்தைப் பெற்றுவிட வேண்டும் என்று அவன் தீர்மானித்தான்.

ராணி கரையிலேயே குளிப்பதாகச் சொல்லிக் கொண்டு நின்ருள். ராணியின்மீது தண்ணீரை வாரி யிறைத்தான் மதனராஜ் "மாமா! சும்மா இருங்கள்! குளிரு கிறது!" என்று ராணி சொல்லச் சொல்ல மதனராஜ் தண்ணீரை விடாமல் இறைத்தான். அப்புறம் ராணியும் மதனராஜ்மீது தண்ணீரை இறைத்தாள்.

அதன்பின் மதனராஜ் ராணியைப் பிடித்துத் தண்ணீரில் தள்ளிவிட்டான். "போங்க மாமா! எனக்குப்

பயமா இருக்கு!'' என்று சொல்லிக்கொண்டே ராணி எழுந்தாள்.

ராணியைத் தொட்டால் என்ன சொல்லிவிடுவாளோ என்று எண்ணிய மதனராஜுக்குப் பயம் நீங்கியது. ராணியின் கையைப் பிடித்துக் 'கரகர' என்று இழுத்துக் கொண்டு ஏரியின் நடுவே ஆழமான இடத்துக்குச் சென்றான் மதனராஜ். முதலைப் பிடியில் இருந்து யானையே தப்புவதில்லை! ராணியால் முடியுமா? ராணியும் மதனராஜும் ஆழமான இடத்தில் நீந்திக் கொண்டிருந்தார்கள்.

மதனராஜ் திடீரென்று மூழ்கினான். "மாமா மாமா!" என்று கத்திக்கொண்டே சுற்றுமுற்றும் பார்த்தாள் ராணி! மதனராஜைக் காணவே இல்லை. மூழ்கிவிட்டாரோ என்று ராணி நினைத்தாள்.

ஆனால் ராணியின் கால்களில் ஏதோ தட்டியது. "ஓ"......என்றாள் ராணி! அடுத்த விநாடி ராணியை உரசியபடி மூழ்கிய மதனராஜ் நீருக்குமேல் வந்தான். ராணியை எதுவும் நினைக்கவிடாதபடி.........பயந்து விட்டாயோ ராணி?'' என்று கேட்டு அவன் சிரித்தான்.

அப்போது கொஞ்சம் தூரத்தில் ஒரு தண்ணீர்ப் பாம்பு மிதந்து வந்தது. இதைக் கண்ட ராணி..."மாமா! பாம்பு!" என்று அலறினாள். ''பயப்படாதே'' என்று சொல்லி ராணியை அணைத்துக் கொண்டான் மதனராஜ்! தன்னை ஒரு கருநாகம் சுற்றிக்கொண்டதை ராணி உணரக் கொஞ்சம் நேரம் பிடித்தது. அதோடு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு, இருவரும் வீட்டுக்கு வந்தார்கள்.

இனி ராணியை எளிதில் வசப்படுத்திவிடலாம் என்று மதனராஜ் நினைத்தான். அந்த ஊரில் முகாம் போட்டிருந்த தன்னுடைய நாடகக் கம்பெனியில் "காதல்" என்ற புது நாடகம் ஒன்று ஆரம்பமாக இருந்தது. அந்தக் 'காதல்' நாடகத்தை ராணியைப் பார்க்க வைத்து, ராணியின் காதலைத் தான் பெறவேண்டும் என்று மதன

ராஜ் திட்டம் போட்டான். அன்று நாடகத்துக்கு வர ராணியும் ஒப்புக்கொண்டாள்.

ஆனால்—

அன்று இரவு 7–30 மணிக்கு ரயில்வே ஸ்டேஷனில் வந்து நின்ற வண்டியில் ஜனங்கள் இறங்குவதும் ஏறுவதுமாக இருந்தார்கள்.

கடைசிப் பெட்டியில் இருந்து, பரட்டைத் தலையும் அழுக்கடைந்த உடுப்புகளுடனும், ஒரு மெலிந்த உருவம் இறங்கி, அங்குமிங்கும் திரும்பிப் பார்த்தது. டிக்கட் இல்லாத பிச்சைக்காரக் கூட்டத்தைச் சேர்ந்தவனாக இருக்க வேண்டும் என்று சிலர் தீர்மானித்தனர்.

அந்த உருவத்தை டிக்கட் பரிசோதகரும் பார்த்து விட்டார். வேகமாக அந்த உருவத்திற்கு முன்னேபோய் நின்று "டிக்கட்" என்று கேட்டார், பரிசோதகர். அதற்காக அந்த உருவம் பயந்துவிடவில்லை. சட்டைப் பையில் இருந்த டைரியை எடுத்து, டிக்கட்டை காட்டியது அந்த உருவம்.

டிக்கட்டைக் கையில் வாங்கிய பரிசோதகர் திருப்பித் திருப்பிப் பார்த்தார். பழைய டிக்கட்டோ என்ற சந்தேகம் அவருக்கு ஏற்பட்டது. மீண்டும் பார்த்தார். ஜெயில் வாரண்டுக்கு மாற்றப்பட்ட டிக்கட் என்று புரிந்தது. அதற்குமேல் டிக்கட் பரிசோதகர் ஒன்றும் பேசவில்லை. அந்த உருவத்திடம் டிக்கட்டைக் கொடுத்துவிட்டார்; அந்த உருவமும் நகன்றது.

ஆனால்—டிக்கட் பரிசோதகர் சும்மா இருக்கவில்லை. ரயில்வே போலீசிடம் விரைந்து சென்றார். "ஒரு கைதி! அதோ போகிறான்!"—என்று போலீசிடம் முறையிட்டார் பரிசோதகர்.

சத்திரத்திலே சாப்பாடு என்று கேள்விப் பட்டதும் சந்நியாசி சந்தோஷத்துடன் செல்வதைப்போல, போலீஸ் காரர் அந்த உருவத்தை விரட்டிச் சென்றார். 61-வது செக்ஷன்படி சந்தேகக்கேஸ்'' போடலாம் என்று திட்டம் போட்டுச் சென்றார். அந்தப் போலீஸ்காரர்.

அந்த உருவத்தை, அதிகாரமாகப் பேசி நிறுத்தி, "யார் நீ? எங்கே போகிறாய்? எங்கிருந்து வருகிறாய்?", என்று அதட்டலாகக் கேட்டார்.

"யாராய் இருந்தால் உனக்கென்ன?'' என்று ஆங்கி லத்திலே மறு கேள்வியைக் கேட்டது அந்த உருவம்!'' படித்தவனாக இருப்பான்போல் தெரிகிறது......என்று நினைத்த போலீஸ்காரர், கொஞ்சம் நிதானமாகவே அப் புறம் பேசினார். அந்த உருவம் 'முக்காட்டை' நீக்கிவிட்டு பேச ஆரம்பித்தது. போலீஸ்காரர் ஏதோ ஒரு உண் மையைக் கண்டவர்போல் ஆச்சரியப்பட்டார்.

"அடடே! நீங்கதானே சுகுமார்? ஜெயில்ல இருந்து எப்ப விடுதலையாச்சு? உங்களை வரவேற்கக் கட்சிக் காரர்கள் வரலியா?''

"நான் திடீரென்று விடுதலை செய்யப் பட்டேன். யாருக்கும் தெரியாது. நாளைப் பத்திரிகையில்தான் செய்தி வரும்!''

"நீங்கள் வந்திருப்பது ஊருக்குத் தெரிந்தால்......... வரவேற்பும் ஊர்வலமும் இருக்குமே?''

—இப்படிச் சொல்லிவிட்டு அந்தப் போலீஸ்காரர் போய்விட்டார். பிறந்த ஊருக்கு வரவே அவனுக்கு விருப்பம் இல்லாதிருக்கும்போது வரவேற்பிலும் ஊர் வலத்திலும் ஆசையிருக்குமா?

நாடும் மக்களும் அறியும்படி தான் விடுதலை செய்யப் பட்டிருந்தால்......சுகுமார் பிறந்த ஊருக்கு வந்திருக்கவே மாட்டான் தான்பிறந்த ஊரில்தான், தன்னை மறந்து வாழும் ராணி இருக்கிறாள்! அப்படிப்பட்ட நரகத்திற்

குத் தான் போகக்கூடாது என்றுதான் சுகுமார் முடிவு கட்டியிருந்தான்.

ஆனால்—திடீரென்று விடுதலை செய்யப்பட்டதால் காதலின் பெயரைச் சொல்லிக் கழுத்தை அறுத்த அந்த அரக்கி ராணி எப்படி வாழ்கிறாள் என்பதைக் காணச் சுகுமார் ஆசைப்பட்டான். அதன்படியே ஒருவருக்கும் தெரியாமல் ஊர் வந்து சேர்ந்தான், எவரும் தன்னை அடையாளம் கண்டுகொள்ளக் கூடாது என்பதற்குத் தான் தன்னைத் துணியால் மூடிக் கொண்டான். ஆனால்—போலீஸ்காரன் அவனைத் தெரிந்து கொண்டான்.

இதைபோல் ராணியும் கண்டுகொள்வாளோ? கண்டால் என்ன? என்னைப் பார்த்ததும் எப்படிப் பசப்புகிறாள் என்பதைப் பார்க்கலாம்! இந்த முடிவோடு சுகுமார் இருட்டிலேயே நடந்து சென்றான்.

தன்னுடைய தெருவிற்குள் கால் எடுத்து வைத்தான். அவன் கால்கள் நடுங்கின. இருண்டு கிடந்த தன் வீட்டைப் பார்த்தான். தன் வீட்டு வாசலிலே சொறி பிடித்த நாய் ஒன்று படுத்துக்கிடந்தது.

அடுத்த வீட்டை நோக்கினான். அது அவனுடைய ராணி வீடு. ஆரம்பத்தில் இருந்து கடைசிவரை, அந்த வீட்டிலே மின்சார விளக்குகள் பிரகாசித்தன. வெளியே ஒரு கார் நின்றது. காரின் பக்கத்திலே நின்றபடி சுகுமாரின் கண்கள் வீட்டுக்குள்ளே பாய்ந்தன.

ஒவ்வொரு விளக்காக அணைந்துகொண்டே வந்தது. சுகுமாரின் இதயத்திலே வாழ்க்கையைப் பற்றி இருந்த ஒவ்வொரு நம்பிக்கையும் அப்படித்தான் அணைந்து கொண்டு வந்தது.

விளக்குகளை அணைத்துக்கொண்டே ராணியும் மதனராஜனும் வந்துக்கொண்டிருந்தார்கள். கணவனைப் பிரிந்த ராணியை அவன் காணவில்லை. மதனராஜனோடு 'கன குஷி' யாக வந்த ராணியைக் கண்டான் சுகுமார். அவன் கண்கள் சிவந்தன.

ராணியும் மதனராஜும் வீட்டுக்கு வெளியே வந்தனர். மதனராஜ் கதவைப் பூட்டிக்கொண்டிருந்தான். ராணி கையில் இருந்த 'பர்சை' சுழற்றியபடி நின்றாள். பெனாரஸ் பட்டுப் புடவை கட்டி நவநாகரீகமாகக் காட்சி தந்த ராணியைக் கண்ணிமை கொட்டாமல் சுகுமார் பார்த்தான்; ராணியும் பார்த்தாள். கதவைப் பூட்டிவிட்டு வந்தான் மதனராஜ்.

"ராணி! காதல் உலகத்திலே உன்னைக்கொண்டு சேர்க்க கார்காத்திருக்கிறது புறப்படலாமா?"...... என்று கேலிமொழி பேசினான் மதனராஜ்!

"கேலி இருக்கட்டும் மாமா! அவனைப் பாருங்கள் கார் பக்கத்தில் நின்றுகொண்டு முறைத்துப் பார்க்கிறான்!"......என்று சுகுமாரைக் காட்டிச் சொன்னாள், ராணி!

"பிச்சைக்காரனாய் இருக்கும்!...... "அடே! ஏண்டா நிக்கிறாய்?" போடா அந்தப் பக்கம்"...... என்று சுகுமாரைப் பார்த்துக் கடுமையாகப் பேசினான் மதனராஜ்!

சுகுமார் அசையவில்லை; பேசவில்லை; மௌனமாகவே எழுந்து நிற்கும் பிணம்போல் நின்றான். மதனராஜுக்குக் கோபம் வந்துவிட்டது.

"என்னடா நான் சொல்லச் சொல்ல நிற்கிறாய்? திருட்டுப் பயலே!"......என்று சொல்லிச் சுகுமார் கன்னத்திலே அறைந்தான், மதனராஜ்.

கீழே விழுந்தான் சுகுமார். வாழ்க்கையிலே எதற்கும் கண்ணீர் சிந்தாத சுகுமாரின் கண்கள் கண்ணீரைக் கக்கின. மெதுவாக எழுந்தான்.

மதனராஜும் ராணியும் காரில் ஏறினர். எதையும் பொருட்படுத்தாமல் கார் புறப்பட்டது. கார் சென்ற திக்கையே சுகுமாரின் கண்கள் பார்த்தன. ஆனால் கார் மறைந்துவிட்டது. தன் வாழ்க்கையும் இப்படித்தான் மறைந்து போகுமோ? சுகுமாரின் சிந்தனை சுழன்றது.

மறைந்த கார் நாடக கொட்டகைக்குள் நுழைந்தது. ஒரு ஆள் வேகமாக ஓடிவந்து காரின் கதவைத் திறந்து விட்டான். மதனராஜ் நாடகக் கம்பெனி முதலாளி யல்லவா? குனிந்து கொண்டிருந்த சிப்பந்திகளெல்லாம் நிமிர்ந்து நின்றனர்.

மதனராஜூம் ராணியும் மேடைக்குள் சென்றனர். அங்கே காதல் நாடகத்திற்கு ஒவ்வொரு நடிகரும் தன்னைத் தயார் படுத்திக்கொண்டிருந்தனர். இருவரும் உள்ளே ஒரு அறைக்குள் நுழைந்தனர். அங்கு குமாரி பத்மா தன்னைச் சிங்காரித்துக் கொண்டிருந்தாள்.

ராணியும்—பத்மாவும் ஒருவரை ஒருவர் நலம் விசாரித்துக்கொண்டனர். நாடகம் ஆரம்பிக்க முதல் மணி அடித்தது. மதனராஜூம் ராணியும் முதல் வரிசையில் அமர்ந்தனர்.

மூன்றும் மணிக்குப் பின், கோரஸ் பாட்டு முடிந்த பின், திரை விலகிய முதல் காட்சியில் போலீஸ் அதிகாரிகள் பலர் கூடி மந்திராலோசனை நடத்திக்கொண்டிருந்தனர்.

"மாணிக்கம் மறைந்திருந்து நம் மானத்தை வாங்குகிறான்!"

"ஆயிரம் ரூபாய் பரிசு என்று விளம்பரப் படுத்தியும் ஆள் அகப்படவில்லை!"

"அவமானம்! சட்டத்திற்கும் சர்க்காருக்கும் அவமானம்!"

"அவனுக்கு வேண்டிய ஆட்கள் யார் யார் என்பதை அறியுங்கள்! அவர்களை நிழல் போல் தொடருங்கள்!"

அதிகாரிகள் ஆர்ப்பரித்தனர். புரட்சிக்காரன் மாணிக்கத்தைப் பிடிக்கக் கூடிப்பேசித் திட்டம் வகுத்தனர். பயங்கரவாதி மாணிக்கத்தைச் சட்டம் தேடிக் கொண்டிருந்தது. அந்த முதல் காட்சியில்!

ஆனால்—அடுத்த காட்சியில்?

*அதிகாரிகளல்ல—ஓர் அணங்கு! பெயர் சாந்தா. கையிலே இருந்த போட்டோவை ஏக்கத்தோடுபார்த்தாள். பெருமூச்சு விட்டாள்.*

*"மாணிக்கம்! நீங்கள் என் காதல் தெய்வம். என்னைத் துடி துடிக்க விட்டுவிட்டுத் திடீரென்று மறைந்து விட்டீர் களே? இந்த ஜென்மத்தில் உங்களைக் காணமாட் டேனோ?......மாணிக்கம்! நீங்கள் எங்கிருந்தாலும் சரி, உங்களைத் தேடுவதே இனி என் வேலை!"*

*உத்தமி உறுதிமொழி கூறினாள். மாணிக்கத்தைத் தேடத் தேன்மொழியாளே புறப்படத் தயாரானாள். அரசியல்வாதி மாணிக்கத்தைக் காதல் தேடிக்கொண்டிருந் தது, இந்தக் காட்சியில்!*

*ஆனால்—மாணிக்கம்?*

பொய்த் தாடி மீசையுடன் மாடி வீட்டிலே, மாற்றுப் பெயருடன் வாழ்ந்து, தன் கொள்கைக்காகப் பல இடங் களுக்குச் சென்று தொடர்ந்து பணியாற்றி வந்தான், பல காட்சிகளில்!

ஒருநாள் மாணிக்கம் மாடி அறையிலே உட்கார்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்தான். திடீரென்று கதவு தட் டும் சப்தம் கேட்டது. எழுந்து போய்க் கதவைத் திறந் தான். தலைப்பாகை அணிந்த ஒருவர் நின்றுகொண் டிருந் தார். உள்ளே அழைத்து உட்காரவைத்தான். மாணிக் கம். வந்திருந்தவர் மாணிக்கத்தையே நாலைந்து தடவை கூர்ந்து, உச்சியில் இருந்து உள்ளங்கால் வரை பார்த்தார். அந்தத் தலைப்பாகைக்காரரே பேச்சை ஆரம்பித்தார்.

*"உங்கள் பெயர்......?"*

*"ரத்தினம்!"*

"ஓகோ! நவரத்தினங்களில் நீங்கள் ஒருவர் இல்லையா?"

*தலைப்பாகைக்காரர் கேள்வி மாணிக்கத்திற்கு என் னவோ போல் இருந்தது. இருந்தாலும் அதை வெளிக்குத்*

காட்டவில்லை. மாணிக்கமும் குறும்பாகப் பேசினன். 'தாங்கள் ஒரு தமிழ்ப் பண்டிதரா?'

"ஆமாம்! நவரத்தினக் கூட்டத்திலே, ரத்தினத்திற்கும் மாணிக்கத்திற்கும் உள்ள மாற்றத்தை ஆராய்ந்து கொண்டிருக்கிறேன்."

இதைக் கேட்டு மாணிக்கம திடுக்கிட்டான். தலைப்பாகைக்காரன், தன்னைப் பிடிக்க வந்த சி. ஐ. டியோ என்று சந்தேகப்பட்டான். கலங்காமல் பேச்சை ஆரம்பித்தான்.

"தாங்கள் யார்? எதற்காக என்னிடம் வந்திருக்கிறீர்கள்?"

"அது ஒரு வெட்கங் கெட்ட கதை! என் மகள் ஒருத்தி உன்னைக் கண்டாளாம்! காதலித்தாளாம்! என்னை அன்னப்பட்சி என்று நினைத்தாளோ என்னவோ, தூதனுப்பிவிட்டாள். துடுக்குக் காரி! மகளுக்குப் 'புரோக்கராக' வந்திருக்கிறேன். என்னை 'மாமா'வாக ஏற்றுக்கொள்!"

மாணிக்கத்திற்கு ஒரே குழப்பம். தலைப்பாகைக் காரர் பைத்தியமோ என்று நினைத்தான். எப்படியாவது ஆளை வெளியே அனுப்ப எண்ணினன்.

"ஐயா! ஏற்கெனவே எனக்கு ஒரு காதலி இருக்கிருள்!"

"நிஜமாகவா? இனி என் மகள் கதி? இதைச் சொன்னால் நம்பமாட்டாளே! ரத்தினம்! உன் காதலி யார்? பெயர் என்ன? அதையாவது சொல்லு. என் மகளைச் சமாதானப் படுத்திப் பார்க்கிறேன்."

"ம்......என் காதலி பெயர் சாந்தா!"

இதைக் கேட்ட அந்தத் தலைப்பாகைக்காரர் துள்ளி எழுந்தார். தலைப்பாகையை அப்புறப்படுத்தினர். மாணிக்

கத்தை தாவிக் கட்டிப் பிடிக்க வந்தார். மாணிக்கத்திற்கு ஒரே ஆச்சரியம்!

"ஆ, நீயா? சாந்தா! இது என்ன வேஷம்?"

"வேஷமல்ல மாணிக்கம் பாசம்!"

"சாந்தா! நீ நரியை விடத் தந்திரக்காரி! ஆனல் — நான் எட்டாத பழம்!"

'சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும் என்று சொல்லிப் போய்விட மாட்டேன். காத்திருந்து கனியைப் பெறுவேன்!"

"நீ காத்திருக்கலாம்! ஆனல் காலம் காத்திருக்காது. நாள் ஆக ஆக, அந்தப் பழத்தைக் காலம் அழுக வைத்து விடும். அழுகிப்போன பழத்திற்கு எங்குமே விலை கிடைக்காது!"

"என் நிலை அப்படி அல்ல மாணிக்கம்! என் காதல் பழத்திற்கு அந்தக் கதி வராது!"

இப்படி இருவரும் பேசிக்கொண்டிருக்கும் போது நாலைந்து ஆட்கள் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. சாந்தாவுக்குப் பயமாகவே இருந்தது. வெளியே எட்டிப் பார்த்தாள். வீட்டைச் சுற்றிலும் போலீஸ்காரர்கள் துப்பாக்கியோடு நின்றனர். மாணிக்கம் சிந்தித்தான். தப்பிப்போக வழியே இருக்கவில்லை. துணிவாகக் கதவை திறந்தான். போலீஸ் புலிகள் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து மாணிக்கத்தைப் பிடித்து விலங்கு போட்டனர். சாந்தா கதறினள்.

இந்தச் சமயத்தில் நாடகம் பார்த்துக் கொண்டிருந்த ராணிக்குப் பழைய சம்பவங்கள் நினைவுக்கு வந்தன. கல்யாண தினத்தன்று சுகுமார் கைது செய்யப்பட்ட காட்சி அவள் கண்முன் தோன்றியது. நாடகச் சாந்தா மாதிரி அழவேண்டும் போல் இருந்தது ராணிக்கு.

அடுத்து, கோர்ட்டில் நிறுத்தப்பட்டான் மாணிக்கம். கோர்ட்டில் ஏகக் கூட்டம். பலத்த போலீஸ் பாரா. கைதிக் கூண்டில் கம்பீரமாக நின்முன் மாணிக்கம். பக்கத்தில் சாந்தா கண்ணீர் விட்டு நின்முள். நீதிபதி வந்தார். எல்லோரும் எழுந்தமர்ந்து மரியாதை செலுத்தினர். நீதிபதி தீர்ப்பை வாசித்தார். மாணிக்கத்திற்கு ஆயுள் தண்டனே.

மாணிக்கத்தைப் பார்த்து அழுதாள் சாந்தா, மாணிக்கம் என்ன ஆறுதல் சொல்ல முடியும்?

''சாந்தா! இனி நீ காத்திருந்து கனியைப் பெற முடியாது. என்னே மறந்துவிடு? இன்னொருவனேத் திருமணம் செய்து வாழ்க்கை நடத்து! நான் விடுதலே பெற பதினுன்கு வருடமாகும்!''

''இருபது வருடமானுலும் சரி. உங்களுக்காகவே காத்திருப்பேன்!

கொட்டகை அதிரும்படி மக்கள் கை தட்டினர். ராணியின் தலே சுழன்றது.

கைதிகளின் கூட்டத்தில் மாணிக்கம் கஷ்டமான வேலே செய்து கொண்டிருந்தான். அதே சமயத்தில் மாணிக்கம் படத்திற்கு கடவுள் பூஜை செய்து கொண்டிருந்தாள், சாந்தா. இப்படியே வருடம் ஏழு கடந்தது.

சுயராஜ்யதினம் வந்தது. கைதிகளிலே பலர் விடுதலே செய்யப்பட்டனர். அதில் மாணிக்கமும் ஒருவன். சாந்தாவைக் காண ஓடி வந்தான், பழைய மாணிக்கமல்ல, பைத்தியம் போலக் காட்சி அளித்த காட்டுமிராண்டி மாணிக்கம்.

சாந்தா வீட்டு வெளிப்புறத்திலே மாணிக்கம் வந்தான். ஜன்னல் வழியாக உள்ளே பார்த்தான். மேஜைமீது இருந்த தன் போட்டோவின் பக்கத்திலே முகத்தை வைத்து, அந்த இரவிலேயும் அழுது கொண்

டிருந்தாள்; பழைய பருவ மங்கை சாந்தா அல்ல, எழில் நீங்கி எலும்பும் தோலுமாக இருந்த சாந்தா!

மாணிக்கம் கதவைத் தட்டினான். சாந்தா கதவைத் திறந்தாள். தன் முன் கோரமான உருவம் நிற்பதைக் கண்டு...... யார் நீ? என்ன வேண்டும்?''...... என்று கேட்டாள். மாணிக்கம் பதில் பேசவில்லை. அவன் கண்களில் இருந்து வெள்ளம்போல் நீர் வழிந்தது!

"பதில் சொல்கிறாயா? பக்கத்து வீட்டு ஆட்களைக் கூப்பிடட்டுமா?

"என்னைத் தெரியவில்லையா சாந்தா?'' ...... என்று அழுதுகொண்டே கேட்டான் மாணிக்கம்.

குரலின் மூலம் அடையாளம் கண்டு கொண்ட சாந்தா ......'' ஆ, நீங்கள் தானா? வந்துவிட்டீர்களா?''...... என்று சொல்லி, மாணிக்கத்தைக் கட்டிப் பிடிக்கச் சென்றாள்.

ஆனால்—மாணிக்கம் எட்டிச் சென்றான். சாந்தா திகைத்தாள். ''ஏன்? நான் உங்களைத் தொடக்கூடாதா? ஏழு வருடமாக உங்களையே தொழுது கொண்டிருந்த எனக்குத் தொடும் உரிமைகூட இல்லையா?''

''தொடவேண்டாம் சாந்தா! காலத்தால் அழுகி விட்ட இந்த உடல் இனி உனக்கும் பயன்படாது! எனக்கும் பயன்படாது! எப்போதும் மணக்கமுடியாத என்னை நீ ஏன் தீண்டவேண்டும்?''

"ஏன் மணக்க முடியாது? மாணிக்கம்! ஏழு வருடங்களுக்குப் பின் விடுதலை கிடைத்துவிட்டது. இனியாவது மணம் புரிந்து மகிழ்ச்சியாய் வாழ்வோம்!''

''விடுதலையா?......சாந்தா! சாகும்போதுதான் நமக்கு விடுதலை! இந்த விடுதலை சாவுக்கு முன் உன்னைச் சந்திக்கச் சட்டம் தந்த ஒத்திகை!''

"மாணிக்கம்! நீங்கள் சொல்வது புரியவில்லையே?"

"சாந்தா! உனக்கும் எனக்கும் இடையே இருப்பது இந்த ஒரே இரவுதான்! நாளைக்காலை என்னைக் கைது செய்ய இன்னொரு 'வாரண்ட்' காத்திருக்கிறது'

"ஐயோ! மீண்டும் சிறைவாசமா?

"என்றும் சிறைவாசந்தான் சாந்தா! நீயும் நானும் சேர்ந்து வாழ முடியாது! கல்யாணம் செய்ய முடியாது! இன்பமடைய முடியாது!"

மாணிக்கம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஆதவன் உதயமானான். ஒரு போலீஸ் கூட்டம் வந்து மாணிக்கத்தை மீண்டும் கைது செய்தது.

"மாணிக்கம்! மகிழ்ச்சியோடு செல்லுங்கள்! கல்யாணமோ—இன்பமோ எனக்கு வேண்டாம்! உங்கள் காதல்தான் எனக்குத் தேவை! அந்தக் காதலுக்காக நீங்கள் செல்லும் இலட்சியப் பாதையிலே துணைக்கு நான் வருகிறேன்."

சாந்தாவின் சபதம் நாட்டுக்கு ஓர் சவாலைப் போல் அமைந்திருந்தது. இந்தக் கடைசிக் கட்டத்தைக் கண்டு மக்கள் அழுதது மட்டுமல்ல, ஆவேசமுங் கொண்டனர். "தியாகி மாணிக்கம் வாழ்க" என்று வாழ்த்தினர்.

ஆனால்—ராணி?

நாடகத்தில் நடந்த கதைக்கும் தன் வாழ்க்கைக்கும் சம்பந்தம் இருப்பதைக் கண்டாள்; கடைசி வரைக்கும் வாழ்ந்த சாந்தாவையும் தன்னையும் ஒப்பிட்டுப் பார்த்தாள். வெட்கப் பட்டாள்? வேதனைப் பட்டாள்! தன் ஆடம்பரத்தைக் கண்டு அவமானப் பட்டாள்! அவள் உள்ளம் குமுறியது! "சுகுமார்! சுகுமார்!" என்று அலறிக்கொண்டே, மயங்கிக் கீழே சாய்ந்தாள்.

கடைசிக் காட்சியைக் கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்த ஜனங்களிடையே பரபரப்பு ஏற்பட்டது. ராணியை மெதுவாகத் தூக்கித் தாங்கியபடியே நடத்திச் சென்று காரில் படுக்கவைத்தான் மதனராஜ். நாடகக் கொட்டகையை விட்டு கார் வேகமாக, வெளியே புறப்பட்டது.

## 5. காமபோதையில் மதனராஜ்

நாடகமாம் நாடகம்! இப்படிப்பட்ட கதையையா நடத்துவது? ராணியின் மனதைப் புண்படுத்தி விட்டதே அந்த நாடகம்! காதல் நாடகம், காம உணர்ச்சியை ஊட்டும் என்று நினைத்தேன், ஆனால், சுகுமாரை நினைவு படுத்திவிட்டது அந்த நாடகம்!

ராணியைக் காரில் தூக்கிப்போட்டு வீட்டுக்கு வந்தேன். ராணியைப் பஞ்சணையில் கிடத்தினேன்! முகத்திலே தண்ணீரைத் தெளித்தேன், மெதுவாக ராணி புரண்டாள். வெறும் மயக்கம் என்று அறிந்தேன். அதனால் டாக்டரைக் கூட அழைக்கவில்லை.

ராணியின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தேன். ஓரே சூடாக இருந்தது. அவள் உடம்பைத் தொட்டுப் பார்த்தேன். உடம்பில் அவ்வளவு சூடு இல்லை. அவளை என் மடியிலே சாய்ந்து படுக்கும்படி செய்தேன்.

''சுகுமார் ! சுகுமார் !''........என்று ராணி முணுமுணுத்தாள். ''ராணி ! ராணி'' என்று அவளை அணைத்துக்கொண்டே மெதுவாகக் கூப்பிட்டேன். கொஞ்சம் கண்ணைத் திறந்தாள். என் மடியில் இருந்து புரண்டு கட்டிலிலே படுத்தாள்.

ராணியைக் காலையில் ஏரியில் தொட்டேன் ; பாம்பை கண்டதும் பதறி என்மீது தாவினாள் ; இப்போது என் உடல்மீதே சாய்ந்திருந்தாள்; அவளுக்கு என்மீது ஆசையில்லாமலா இத்தனையும் நடந்தது? இதே வேகத்தில் அவள் மோகத்தைத் தூண்டிவிட நினைத்தேன்.

அவள் பக்கத்திலே மீண்டும் போய் அமர்ந்தேன். அவள் தலையைத் தடவி விட்டேன். என் கையை வெடுக் கென்று தட்டிவிட்டாள். திகைப்பு ஏற்பட்டது எனக்கு.

"என்ன ராணி?"

"கட்டிலை விட்டு எழுங்கள்! என் பக்கத்திலே உட்காராதீர்கள்! எட்டிச் செல்லுங்கள்!"......என்று ராணி சொன்னதும் நான் எழுந்து விடவில்லை.

"கோபப் படாதே ராணி! உனக்கு இன்பம் தரத் தான் நான் இருக்கிறேன்"..........என்று சொல்லிக் கொண்டே அவள் கரத்தைப் பிடித்தேன். உதறி விட்டுக் கட்டிலை விட்டு எழுந்தாள். பத்திரகாளியைப் போலக் காட்சி அளித்தாள்.

"உன் வேஷம் இப்போதுதான் தெரிந்தது. உன்னை நம்பி மோசம் போனேன்! என் கணவரை மறந்து வாழ்ந் தேன்! அவரைப் பார்க்கக்கூடச் செல்லவில்லை. ஒரு கடிதம் எழுதவில்லை. உன் பசப்பு வார்த்தைகளை நம்பி அவருக்குத் துரோகம் செய்துவிட்டேன். இனி உனக்கு இந்த வீட்டில் இடமில்லை. போ!"

ராணியின் ஆவேசப் பிரசங்கத்தால் என் மோகம் தணிந்து விடுமா! மூன்று வருடங்களுக்கு மேலாக ராணியை அடைய முயற்சித்து வரும் நான், பயந்து விடுவதா?

"ராணி! சுகுமாரின் மனைவியாகவே இரு. ஆனால்— நீயும் நானும் அந்தரங்கத்தில்......என்று சொல்லிக் கொண்டே அவளைப் பிடித்தேன். "விடுடா பாவி"...என்று சொல்லிக்கொண்டே திமிறினாள். நான் விடவில்லை.

ஆனால்—

அப்போது குமாரி பத்மா வந்துவிட்டாள். கோபத் தோடு என்னைப் பார்த்தாள்.

"நன்றாய் இருக்கிறது உங்கள் காதல் நாடகம்! என்னை மணப்பதாகக் கூறிய வாய் ராணியை ஆசை நாயகி என்கிறது! என்னைத் தொட்ட கை, ராணியை அணைக்கிறது!

"பத்மா! இது வேறு விஷயம்! குறுக்கே வராதே, போய்விடு!"

"முடியாது! இனி நீ ராணியைத் தொடமுடியாது!"

"பத்மா! என் கோபத்திற்கு ஆளாகாதே!"

"மிரட்டாதே! உன் மோகத்தின் வேகம் கோபத்தை கொட்டுகிறது; நன்றாகக் கொட்டட்டும். ஆனால் ராணியை மட்டும் நீ தீண்டமுடியாது."

ஒரு பெண்—அதிலும் நான் கசக்கி எறிந்த கழிசடை—என் எண்ணத்திற்குத் தடையாக நிற்பதா? பத்மாவை எட்டி மிதித்துப் பந்தாடினேன். தூரப்போய் விழுந்தாள் பத்மா. அப்புறம் ராணியைப் பிடித்தேன். துள்ளிக் குதித்தாள். முட்டவரும் 'ஜல்லிகட்டு மாட்டை'யே பிடிக்கும் ஆண் சிங்கத்திடம், ஆடு போன்ற பெண் விடுபட முடியுமா? அசைய முடியாதபடி ராணியை அணைத்தேன்.

ஆனால்—

பின்புறத்திலே வந்து என் கழுத்தைப் பிடித்தாள் பத்மா. என்ன தைரியம் அவளுக்கு? என்னால் முன்னுக்கு வந்த ஒரு புழு என் கழுத்தைப் பிடிப்பதா?

ராணியை விட்டுவிட்டு பத்மாவைப் பிடித்தேன். என்னைப் பூனை என்று அறியாத சுண்டெலி அவள்! என்னிடமிருந்து தப்பமுடியுமா? அவள் கழுத்தை நான் பிடித்தேன், சுருண்டு கீழே சாய்ந்தாள். இதைக் கண்டு ராணி பதறினாள். "கொலைகாரப் பாவி".. என்றாள்.

"ராணி! இனி நீ தப்பமுடியாது!" என்று சொல்லிக் கொண்டே அவளைப், பிடிக்கச் சென்றேன். ராணி ஓடினாள். நான் விரட்ட விரட்ட வீட்டுக்குள்ளே ஓடினாள். ஆனால் கால் தடுக்கிக் கீழே விழுந்தாள். கண்ணைத் திறக்காமல் கிடந்தாள். பெண்ணின் சாகசமோ என்று சந்தேகப்பட்டேன். ஆனால் உண்மையில் மயங்கிக் கிடந்தாள். கீழே குனிந்து அவளைத் தூக்கப்போனேன். ஏதோ ஒரு உருவம் எட்டிப் பிடித்தது.

கீழே குனிந்த நான், நிமிர்ந்து பார்த்தேன். எதிரே சுகுமார் நின்றான். எனக்கு உலகமே சுழன்றது.

இனி எனக்கு ராணி கிடைக்கமாட்டாளா? பொருளுக்கு உரியவன் வந்துவிட்டான்! இனி இருளடைந்த வாழ்வுதானா எனக்கு?

பத்மா பிணமாகக் கிடந்தாள்! பத்மாவை நான் கொலை செய்துவிட்டேன்! இனி எனக்கு மரண தண்டனை! என்னைக் கொன்றுவிடுவார்கள்! ஐயையோ எனக்கு இந்தக் கதியா?

நான் இறக்கப்போவது நிச்சயம்! சாகும்போது சந்தோஷமாகச் சாகிறேன்! ஆனால்—அமைதியாக நான் சாகவேண்டுமானால், ராணியை அணைத்து முத்தமிட வேண்டும். அப்போதுதான் என் ஆத்மா சாந்தி அடையும்.

ஆனால்—எனக்கும் ராணிக்கும் இடையே சுகுமார் நிற்கிறான். என்னை உதைத்துவிட்டான். அவன் உயிரையும் வாங்கிவிட்டு, ராணியை வாரி எடுத்து முத்தமிட்டு விட்டுச் சாகிறேன். ஆம்! அதைத் தவிர வேறு வழியில்லை என்று உணர்ந்தேன். எழுந்து சுகுமாரோடு சண்டைபோட்டேன். அங்கிருக்கிற சாமான்களெல்லாம் உடைந்தன. இருவர் உடம்பிலிருந்தும் இரத்தம் ஓடி வந்தது. கட்டிப் புரண்டோம். வீட்டுக்கு வெளியே வந்து ஒருவரை ஒருவர் விடாமல் சண்டையிட்டுக் கொண்டிருந்தோம்.

போலீஸ்காரர்கள் ஓடிவந்தனர். சண்டையை விலக்கினர். இருவரையும் பிடித்தனர்.

## 6. உதயத்திற்கப்பால்......?

மறுநாள் பத்திரிகையில், பாதுகாப்புக் கைதியாக இருந்த சுகுமார் நேற்று மாலை ஆறுமணிக்கு மேல் விடுதலை செய்யப் பட்டார் என்றும் அவர் விடுதலை யாருக்கும் அறிவிக்கப்படாமல், திடீரென்று செய்யப் பட்டிருந்தது என்றும் செய்திகள் கொட்டை எழுத்துக்களில் பிரசுரமாகியிருந்தன.

ஆனால்—

அடுத்தநாள் பத்திரிகையில்—விடுதலை செய்யப் பட்ட சுகுமார், பத்மா என்ற நாடகப் பெண்ணைக் கொலை செய்ததாகச் சந்தேகப் பட்டு கைது செய்யப் பட்டார் என்றும், மேற்கொண்டு போலீஸார் புலன் விசாரித்து வருவதாயும் செய்திகள் வந்தன.

"கொலை செய்யப்பட்ட பத்மா என் காதலி! அவளும் நானும் கல்யாணம் செய்துகொள்வதாக இருந்தோம். என் காதலி பத்மா நடித்த 'காதல்' நாடகத்திற்கு நானும் ராணியும் வந்தோம்.

ராணி என் அக்காள் மகள்! எதிரி சுகுமாரை மணந்த அன்றே பிரிந்தவள்! அந்தச் சம்பவத்தில் இருந்து எதிரி சுகுமார் மீது ராணிக்கு வெறுப்பு ஏற்பட்டது! சிறையிலே சுகுமாரைப் போய்ப் பார்க்கவோ, கடிதம் எழுதவோ பிரியப் படாமல் விரக்தியோடு வாழ்ந்தாள். அன்று நானும் ராணியும் நாடகம் பார்க்க வந்தோம், கொட்டகையில் ராணி மயக்கமுற்று விட்டாள்! அவளை வீட்டுக்குக் காரில் கொண்டுவந்தேன். காரில் இருந்து அவளைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்குள் நடந்தேன்.

பின்புறம் வந்து என்னை யாரோ கழுத்தைப் பிடித்தார்கள். ராணியைக் கீழே போட்டுவிட்டுத் திரும்பிப் பார்த்தேன். சுகுமார் என் கழுத்தைப் பிடித்து அழுக்கிக் கொண்டிருந்தான். "விடு விடு" என்று சொன்னேன். "என் மனைவியோடு வாழ்கின்ற உன்னைக் கொல்லத்தான் போகிறேன்" என்று சொல்லி மேலும் என் கழுத்தை அழுக்கினான்.

ஆனால்—அதிர்ஷ்டவசமாக குமாரி பத்மா, ராணியைப் பார்த்துவிட்டுச் செல்ல அந்த நேரத்தில் வந்தாள். நான் ஆபத்தில் இருப்பதை அறிந்து என்னைக் காப்பாற்றச் சுகுமாரைத் தாக்கினாள் பத்மா. சுகுமார் என்னை எட்டி உதைத்து விட, நான் கீழேபோய் விழுந்தேன். அப்போது பத்மாவின் கழுத்தை நெறித்தான் சுகுமார். எழுந்து வந்து நான் சண்டையிட்டேன், ஆனால்—பத்மா இறந்து கிடந்தாள். ராணி மயங்கியபடியே கிடந்தாள்."

பத்மாவின் கொலைவழக்கில் மதனராஜ் முதன் முதலில் இப்படி அறிவித்தான்.

நாடகக் கொட்டகையில் போலீஸார் விசாரணை நடத்தினர்.

"மயங்கி விழுந்த ராணியைத் தூக்கி மதனராஜ் தாங்கிக் கொண்டே சென்றதும் கூட்டத்திலே இருந்த ஒருவன், "மதனராஜ் ராணியைக் கட்டியணைத்தபடியா போகிறான்!" என்று தன்னிடம் கேட்டுக்கொண்டே ஒருவன் ஓடினான்"......என்று நாடகக் கம்பெனி சிப்பந்தி ஒருவன் கூறினான். அந்தச் சிப்பந்தியிடம் போலீசார் சுகுமாரைக் காட்டினர்,

"இந்த மனிதன்தான் அப்படி கேட்டுக்கொண்டே ஓடியது"...... என்று அடையாளம் கண்டு சொன்னான் அந்தச் சிப்பந்தி.

டாக்டரின் சிகிச்சைக்குப் பின் ராணி விசாரிக்கப் பட்டாள். தன்னைப் பலாத்காரம் செய்ய மதனராஜ்

முயன்றதாகவும், தடுக்க வந்த பத்மாவை மதனராஜ் கொன்றதாகவும் கூறினள் ராணி!

''பத்மாவைச் சுகுமார் கொல்லவில்லையா?'' என்ற கேள்விக்கு......"சுகுமாரா?" எங்கே இருக்கிருர்? விடுதலை அடைந்து விட்டாரா?''........என்று ஆச்சரியத்துடன் பதில் கேள்விகள் போட்டாள் ராணி.

ராணி கூறியதைவைத்து மதனராஜையும் போலீசார் கைதுசெய்தனர். வழக்கு ஆரம்பமாகியது. மதனராஜுக்கு வாதாட வடநாட்டில் இருந்து வக்கீல் வந்தார்.

குற்றவாளிக் கூண்டில் நின்ற சுகுமாரை நோக்கி வக்கீல் வந்தார்;

" உங்கள் பெயர்?"

" சுகுமார்!"

" இரண்டு வருடங்களுக்கு மேலாகச் சிறையில் இருந்தீரா?"

" ஆம்!"

"சிறையில் இருந்து விடுதலை பெற்று ஊருக்கு வந்தீரே, எத்தனை மணிக்கு வந்தீர்?"

" இரவு 7–30 மணிக்கு!"

நேரே வீட்டிற்குச் சென்றீரா?"

" இல்லை!"

" அன்றிரவு நாடகம் பார்க்கச் சென்றீரா?"

''சென்றேன்!"

"நாடகக் கொட்டகையில் உமது மனைவி ராணியும் மதனராஜும் அடுத்தடுத்து உட்கார்ந்திருப்பதைப் பார்த்தீரா?"

"பார்த்தேன்!"

"இரண்டு வருடத்திற்குப் பின், உமது மனைவியைப் பார்த்திருக்கிறீர்! அப்படி இருக்கும்போது அவளோடு பேசவேண்டும் என்ற ஆசை உமக்கு ஏற்படவில்லையா?"

"ஏற்பட்டது! ஆனால் பேசவில்லை."

"மயங்கி விழுந்த உமது மனைவியை மதனராஜ் கூட்டிச் சென்றதைப் பார்த்தீரா?"

"தூரத்தில் இருந்து பார்த்தேன்."

"மைலார்டு! இனி நான் ராணியை விசாரிக்க வேண்டும்!"

"உன் பெயரென்னம்மா?"

"ராணி!"

"சுகுமார் கைது செய்யப்பட்ட பின் இரண்டு வருடத்திற்கு மேலாக நீ தனியாகத்தானே வாழ்க்கை நடத்தினாய்?"

"ஆம்!"

"அந்த இரண்டு வருடத்தில் நீயும் மதனராஜும் ஒன்றாகச் சேர்ந்து பல ஊர்களுக்குப் போயிருக்கிறீர்களல்லவா?"

"ஆம்!"

"உன் தாய் இறந்த பிறகு பெரும்பாலும் மதனராஜ் உன் வீட்டிலேதானே இருப்பார்?"

"ஆம்!"

"சரி நீ போகலாம்! மைலார்டு! இந்த வழக்கு விசித்திரமானது! பத்மாவைக் கொலை செய்தது மதனராஜ் என்கிறாள் ராணி!—மதனராஜோ, சுகுமார் என்கிறார். ஆனால் போலீஸ்காரர்கள் இருவரையும் இங்கு நிறுத்தியிருக்கின்றனர்.

மதனராஜ் தன்னைப் பலாத்காரம் செய்ய வந்ததாக ராணி குறிப்பிட்டிருக்கிறாள். இந்த இடத்திலேதான் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியதிருக்கிறது. இரண்டு வருடமாக ராணி மதனராஜ் கூடவே இருந்திருக்கிறாள். பல இடங்களுக்குப் போயிருக்கிறாள். அப்போதெல்லாம் பலாத்காரம் செய்யாத மதனராஜ், பத்மா கொலை செய்யப்பட்ட தினத்தன்று பலாத்காரம் செய்ய முனைந்தார் என்றால், அது சிருஷ்டியாகத்தான் இருக்க முடியுமே தவிர, சிறிதாவது உண்மையாக இருக்க முடியாது!

சுகுமார்–ராணி ஆகியோரின் சாட்சியங்களில் இருந்து மதனராஜ் நிரபராதி என்பது தெளிவாக நிருபணமாகிறது. இரண்டு வருடங்களுக்குப் பின் விடுதலை அடைந்து ஊருக்கு வந்த சுகுமார், நேராக வீட்டுக்குச் சென்று தன் ஆசை மனைவியைப் பார்க்கப் பிரியப்படவில்லை. இதிலிருந்து சுகுமாருக்கு ராணியின் மீது தப்பெண்ணம் இருந்திருக்க வேண்டும்.

மனைவி மீது என்னதான் மனஸ்தாபம் என்றாலும், மதனராஜ், மயங்கிய ராணியை அழைத்துச் செல்வதைக் கண்டு, ஆத்திரம் வருவது இயற்கைதான்.

அந்த ஆத்திரத்திலேதான் சுகுமார் மதனராஜை பின் தொடர்ந்து வந்து தாக்கி இருக்க வேண்டும்; அங்கு வந்த பத்மா தடுத்திருக்க வேண்டும். இதனால் பத்மா கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும். எனவே மதனராஜை இந்த வழக்கில் இருந்து நீக்கிவிட நியாயம் வேண்டுகிறேன்"

வக்கீலின் வாதத்தைக் கேட்ட நீதிபதி, சாட்சியங்களின் ஆதாரத்தை அலசிப்பார்த்து.... "இந்த வழக்கில் இருந்து மதனராஜை விடுதலை செய்கிறேன்" என்று தீர்ப்பளித்து, வழக்கு விசாரணையை மேற்கொண்டு ஒத்தி வைத்தார்.

பத்மா கொலை வழக்கு வேறு உருவம் பெற்றது. மீண்டும் விசாரணை ஆரம்பமாகியது. சுகுமாரின் வக்கீல் பேச்சை ஆரம்பித்தார்.

"மைலார்டு! சுகுமார்தான் பத்மாவைக் கொலை செய்தான் என்பதற்கு மதனராஜ் சாட்சியத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. ஆனால்—மதனராஜ் ஒரு எதிரியாகக் கருதப்பட்டு வந்தவர். அப்படிப்பட்டவருடைய சாட்சியத்தை நம்பி, சுகுமாரைத் தண்டிப்பது அபாயகரமான துரதிர்ஷ்டம் மட்டுமல்ல, சட்டத்தின் பலஹீனமுமாகும். ஒரு எதிரியைச் சாட்சியாகக் கொள்வது சட்டத்திற்கு ஏற்றதாய் இருக்கலாம்; ஆனால் சரியான நீதி வழங்க, அது ஆதாரமாக இருக்க முடியாது."

இப்படிச் சுகுமார் வக்கீல் பேசி முடித்த பின் கடைசியாகப் பப்ளிக் பிராசிகூடர் பேச ஆரம்பித்தார்.

"சுகுமார் குற்றவாளி அல்ல என்பதற்கு ராணியின் சாட்சியத்தைத் தவிர வேறு இல்லை. ராணி எதிரியின் மனைவி! தன் கணவனுக்காக எதையும் செய்யக் கூடியவள் தான் மனைவி! எனவே, ராணி கூறுவதெல்லாம், வேலிக்கு ஓணான் சாட்சி போன்றதேயாகும்.

அப்புறம் தீர்ப்பு ஒத்திவைக்கப் பட்டது. நீதிபதி எழுந்து சென்றார். கோர்ட் கலைந்தது.

சுகுமாரின் நிலையை நினைத்து அழுது கொண்டிருந்தாள் ராணி! துன்பத்தின் மேல் துன்பம்! இடிமேல் இடி! ஓர் இளம் பெண் என்ன செய்ய முடியும்? சுகுமார் தண்டிக்கப் பட்டால்......? அவள் மண்டை வெடித்து விடும் போல தோன்றியது.

அன்றுதான் பத்மா கொலை வழக்கின் தீர்ப்பு நாள். ராணியின் உடலெல்லாம் நடுங்கியது. கோர்டுக்குப் போய் ... "சுகுமாருக்கு மரண தண்டனை" ..........என்று நீதிபதி சொல்வதை என் காதால் கேட்கவா? வேண்டாம்! கோர்ட்டுக்குப் போகவே வேண்டாம்! இந்த முடிவோடு வீட்டிலே கிடந்து அழுதுகொண்டிருந்தாள் ராணி! அப்போது அங்கே மதனராஜ் வந்தான்.

"கொலைகாரா! இங்கே எதற்காக வந்தாய்? பத்மாவைக் கொலைசெய்து என் பதியைக் கொலைகாரனாக்கி, என்னை வாழாவெட்டியாக்கிய நீ எதற்காக வந்தாய்?"

"ராணி! நீ சொல்வது எல்லாம் உண்மைதான். ஆனால்—உன்னை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். என்னை மன்னித்து விடு. இத்தனையும் நானா செய்தேன்? உன் மீதுகொண்ட காதல் என்னைக் குருடனாக்கியது! உன் காதலைப் பெறத்தான் முயற்சித்தேன். ஆனால்—எல்லாம் விபரீதமாகிவிட்டது. அதற்கு நான் என்ன செய்வது? ராணி! இன்னும் என் காதல் சாகவில்லை! நீ சரி என்று சொன்னால் என் காதலும் கைகூடும்! நீயும் வாழா வெட்டியல்ல! இந்த ஊரை விட்டுவிட்டு எங்காவது சென்று இன்பமாக வாழலாம். ராணி! நடந்ததை மறந்து விடு! காதல் பிச்சை கொடு!"

"காதல் பிச்சை! கட்டிய கணவனை நினைத்து நான் வேதனைப் பட்டுக்கொண்டிருக்கும்போது நீ காதல் பிச்சை கேட்கிறாய்! காதலனின் கழுத்துக்கு நேரே மரணக் கயிறு தொங்குவதை, என் மனக் கண்ணால் பார்த்துப் பார்த்து, என் உயிர் போய்க் கொண்டிருக்கும் நேரத்திலே காதல் பிச்சை கேட்கிறாய்! ஐயோ! என் புருஷனுக்கு உயிர் பிச்சை கிடைக்காதா என்று என் உள்ளம் துடி துடித்துக் கொண்டிருக்கும்போது நீ காதல் பிச்சை கேட்கிறாய்!"

காதல்! கண்மூடித்தனமான காதல்! உனக்குப் பிச்சை வேண்டும்! என் காதல் பிச்சை வேண்டும்! தருகிறேன்! உனக்கு என்னையே தருகிறேன்! இப்போதே தருகிறேன்!

முதலில் என்னைக் கொலை செய்துவிடு! பத்மாவைப் போல இந்த ராணியையும் கொலை செய்துவிடு! என் கழுத்தைப் பிடித்து நெறித்து உன் இருகைகளாலும் என் காதலை எடுத்துக்கொள்! என் உயிரைப் போக்கிவிட்டு என் உடலையே உடைமையாக்கிக் கொள்! பயப்படாதே! கொஞ்சங் கூடப் பயப்படாதே! என்னைக் கொன்று, நீ விரும்புகிற என் அங்கங்களைத் துண்டு துண்டாக்கி, நன்றாகத் தின்று விடு! ஆசை தீரத் தின்றுவிடு! உன் காதல் பசி தீரட்டும்!

—இப்படியே ராணி அடுக்கிக் கொண்டே போனாள்: மதனராஜ் எதிரே கற்சிலையைப்போல நின்றான். மதனராஜின் உள்ளங்காலை ராணியின் கண்ணீர் வெள்ளம் நனைத்தது.

ஆனால்—அதே நேரத்தில்?

கோர்ட்டில் ஒரே கும்பல். பத்மா கொலை வழக்கின் தீர்ப்பை ஒவ்வொருவரும் எதிர் பார்த்து நின்று கொண்டிருந்தனர். ஆனால் வேறு வழக்குகளில் நீதிபதியும் வக்கீல்களும் கவனம் செலுத்திக் கொண்டிருந்தனர். அப்புறம் கோர்ட்டிலே அமைதி நிலவியது.

"சுகுமார்!" என்று மூன்று முறை சப்தம் கேட்டது. ரிசர்வ் போலீசார் புடைசூழ, கைவிலங்கோடு சுகுமார் அழைத்து வரப்பட்டான். கோர்ட்டினுள் நுழையும்போது விலங்கை எடுத்துவிட்டார்கள். கூண்டுக்குள்ளே வந்தான் சுகுமார்.

எல்லோரும் சுகுமார் முகத்தையும் நீதிபதி முகத்தையும் மாறி மாறிப் பார்த்தனர். சுகுமார் முகத்திலே கவலையோ, கண்ணீரோ எதுவும் இல்லை. தலையை நிமிர்த்தியபடி சுகுமார் நின்றான்.

நீதிபதி தீர்ப்பைப் படிக்க ஆரம்பித்தார்:

"ஜூரர்களின் அபிப்பிராயத்திற் கிணங்க சுகுமா ரைக் குற்றவாளி எனத்தீர்மானித்து மரண தண்டனை..." என்று நீதிபதி சொல்வதற்குள்......"நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!"......என்ற சப்தம் கேட்டது. எல்லோரும் திரும்பிப் பார்த்தனர். மேலும் கீழும் இரைக்க மதன ராஜ் நின்று கொண்டிருந்தான்.

"யுவர் ஹானர்! இந்தக் கொலை வழக்கில் உண்மைக் கொலையாளி நான் தான்! சுகுமார் நிரபராதி! ராணி யைப் பலாத்காரம் செய்யச் சென்றேன்; பத்மா குறுக் கிட்டாள்! ஆத்திரத்தில் கொலை செய்து விட்டேன் காம வெறியால் குற்றத்தைச் சுகுமார்மீது சுமத்தினேன்: இன்றுகூட, கொஞ்ச நேரத்திற்கு முன்பு ராணியை அடைய முயற்சித்தேன். ஆனால்—தோல்வியடைந்தேன்; பறிகொடுத்த பகுத்தறிவைப் பெற்றேன்! என்மனம் என்னைக் குத்தியது! ஓடோடி வந்தேன்! சுகுமாரை மன்னித்து விடுங்கள்! ராணியோடு அவனைச் சேர்த்து வையுங்கள்! என்னைத் தண்டித்து நீதியைக் காப்பாற் றுங்கள்!"

கோர்ட்டிலே ஒரே நிசப்தம்! நீதிபதி பெருமூச்சு விட்டார். "சட்டத்தின் பெயரால் தவறு செய்யப் போன என்னை மீட்க, தக்க சமயத்தில் வந்தாய்!"......என்று நீதிபதி சொன்னதும் போலீஸ்காரர்கள் மதனராஜ் கையிலே விலங்கை மாட்டினர், கோர்ட் கலைந்தது.

சுகுமார் தாவி ஓடிவந்து மதனராஜைக் கட்டித் தழுவினான். மதனராஜ் தொண்டையை அழுகை வந்து அடைத்தது. பேச முடியாமல் திணறினான்.

"சுகுமார்! என்னை மன்னித்து விடு! இனியாவது ராணியோடு இன்பமாக வாழ்க்கை நடத்து!"......என்று சுகுமாரை ஆசிர்வதித்துவிட்டு, மதனராஜ் போலீஸ் வண்டியில் ஏறினான். சிறையை நோக்கி வண்டி புறப் பட்டது.

வீட்டை நோக்கிச் சுகுமார் வந்துகொண்டிருந்தான். ஆயிரமாயிரம் எண்ணங்கள் அவன் மனதிலே அலைபோல் வந்து வந்து சென்றன.

'ராணியை வீணுகச் சந்தேகித்து விட்டேன்! விடுதலை அடைந்ததும் நேரே வீட்டுக்குப் போயிருந்தால்......இந்த விபரீதமெல்லாம் வந்திருக்காது. இனியாவது ராணியுடன் இன்பமாக வாழவேண்டும். ராணி எனக்காகக் காத்திருப்பாளா? என்னைக் கண்டதும் என்ன செய்வாள்? நான் போனதும் ராணியைக் கட்டித் தழுவி முதுகில் தட்டிக் கொடுப்பேன்! அவள் கூந்தலைக் 'கோதி' விடுவேன், அவள் கண்களிலே வழிந்தோடும் கண்ணீரைத்துடைத்து விட்டுக் கன்னத்திலே ஒரு 'இச்' வைப்பேன்!''

இப்படிப் பலவாறுக நினைத்துக்கொண்டு வாசலை வந்தடைந்தான் சுகுமார். கதவு திறந்தே இருந்தது உள்ளே சென்ருன். சுற்று முற்றும் பார்த்தான். வீடு வெறிச்சென்று இருந்தது.

''ராணி! ராணி!''......என்று சுகுமார் கூப்பிட்டான் உள்ளே சென்று எல்லா இடத்தையும் பார்த்தான். ஒருவரும் இல்லை.

மாடிப் படியில் ஏறக் கால் எடுத்துவைத்தான்! அதிர்ச்சி அடைந்தவனைப் போலச் சுகுமார் நின்ருன். கடந்த காலக் காட்சி அவன் கண்முன் தோன்றியது. இரண்டு வருடத்திற்கு முன்பு மாடியில் இருந்த பள்ளியறையை நோக்கி முதல் இரவுக்காக இப்படித்தான், புறப்பட்டான் சுகுமார். ஆனுல்—அன்று அவனைப் போகவிடாமல் சட்டம் என்ற சர்ப்பம் தடுத்தது.

இன்றும் ஏதேனும் தடை ஏற்பட்டுவிடுமோ? நிச்சயமாக ஏற்படாது! இன்றுதான் எனக்கு முதல் இரவு! பள்ளியறையில்தான் ராணி இருக்கவேண்டும்!

ஆனந்தமாகச் சுகுமார் மாடிப்படியிலே ஏறிச் சென்ருன் மேலே சென்றதும் சுகுமாருக்கு ஒரே குதூ

கலம்! அவன் நினைத்தபடி ராணி மேலேதான் இருந்தாள். ஆனால்—கட்டிலின் மேலே குப்புறப்படுத்துக் கொண்டிருந்தாள் மெதுவாக அவள் பக்கத்திலே சென்றான் சுகுமார்.

"பாவம்! அயர்ந்து தூங்குகிறாள்! இரவெல்லாம் அழுதிருப்பாள்! நான் வருவேன் என்று எதிர்பார்த்திருக்கவேமாட்டாள்!......" என்று மனதுக்குள்ளே சொல்லிவிட்டு, "ராணி"...என்று கூப்பிட்டான் சுகுமார்!

ஆனால்—ராணி கண் விழிக்கவில்லை, மீண்டும் மீண்டும் கூப்பிட்டான் சுகுமார் ராணி எழவே இல்லை. கடுமையான தூக்கமென்று கருதி, ராணி! ராணி! என்று பலமாகக் கூப்பிட்டுக்கொண்டே, தட்டி எழுப்பினான் சுகுமார்

ராணியின் உடல் 'ஜில்' என்று இருந்தது. பதறிப் போய்க் குப்புற படுத்திருந்த ராணியைப் புரட்டினான் சுகுமார். ராணியின் வாயிலே இரத்தக் கறை இருந்தது கீழே ஒரு விஷத் துண்டு கிடந்தது.

"ராணி ராணி!"......என்று அலறிக் கொண்டே அழுதான், எவர் செத்ததுக்கும் அழாத சுகுமார்! அந்த அழுகை கட்டிடம் பூராவும் எதிரொலித்தது.

அப்போது வீட்டுக்கு வெளியே பேரொலி கேட்டது. "சுகுமார் வாழ்க" என்று சொல்லிக் கொண்டே, ஒரு பெருங் கூட்டம் ராணியின் வீட்டை நோக்கி வந்தது. அரசியல்வாதி சுகுமாரை ஊர்வலமாக அழைத்துச் செல்ல அந்தக் கூட்டத்தின் பிரதிநிதிகள், ராணியின் வீட்டுக்குள்ளே நுழைந்தார்கள்.

"சுகுமார், ராணியைக் கையிலே தூக்கிக் கொண்டு கீழே இறங்கினான். ராணியை இருகைகளில் ஏந்தியபடியே வீட்டுக்கு வெளியே ரோட்டுக்கு வந்தான். சுகுமார்! கூடியிருந்த கூட்டமெல்லாம் அழுதது.

ராணியை மடியில் வைத்தபடியே காரில் அமர்ந்திருந்தான் சுகுமார். மலர் மாலைகளைக் கொண்டு சுகுமார்—ராணியின் உடலை மறைத்தனர் மக்கள்.

"ராணி! துறவிதான் அரசியல் வாதியாக இருக்க முடியும்! நாட்டுக்குழைப்பவன் வீட்டுக்காக அழ முடியாது!"

இந்த வார்த்தைகள் சுகுமாரின் காதுகளில் எதிரொலித்துக்கொண்டே இருந்தன.

ஊர்வலம் போய்க்கொண்டே இருந்தது. முடிவில் மனித சமுதாயமே சங்கமம் ஆகவேண்டிய புண்ணிய ஸ்தலத்தை நோக்கி ஊர்வலம் போய்க்கொண்டே இருந்தது.

உலகத்தின் பரந்த வெளியிலே, ஆனால் மனித வர்க்கத்தின் அந்தமான இடத்திலே ஊர்வலம் வந்து நின்றது.

சுகுமாரின் கண்களுக்குக் காதல் மாளிகையான தாஜ்மஹால் தோன்றியது.

ஆம்—ஏழை மக்கள் எழுப்பிய எண்ணற்ற தாஜ்மஹால்கள் அங்கே இருந்தன.

அற்புதமான காதல் மாளிகை தாஜ்மஹால்! அந்தத் தாஜ்மஹால்—மும்தாஜ் தவிர, எவரும் குடியிருக்க முடியாத—வெறுங்கூடு!

அந்தத் தாஜ்மஹாலில் ராணியும் சமாதி ஆகப் போகிறாள்!

இனிசுகுமார்? வெறுங்கூடு!

★

# எமது சிறந்த வெளியீடுகள்

★

| | | | |
|---|---|---|---|
| பார்வதி பி. ஏ. | அண்ணா | 3 | 0 |
| ரங்கோன் ராதா | ,, | 2 | 8 |
| காதல் ஜோதி (அச்சில்) | ,, | 2 | 8 |
| ஓர் இரவு ,, | ,, | 1 | 4 |
| அண்ணாவின் சொற்செல்வம் | ,, | 1 | 0 |
| கசப்பும் இனிப்பும் (அச்சில்) | ஆசைத்தம்பி | 1 | 8 |
| மனித தெய்வம் | ,, | 1 | 4 |
| வெறுங்கூடு | ,, | 1 | 0 |
| பிணங்கள் | ,, | 1 | 0 |
| கிழக்கும் மேற்கும் (அச்சில்) | ,, | 1 | 0 |
| தியாகச் சுடர் | ,, | 0 | 12 |
| நினைவுச் சுழல் | ,, | 0 | 12 |
| வீணை | இராதாமணாளன் | 2 | 8 |
| இளவரசி (அச்சில்) | ,, | 2 | 0 |
| அரக்கு மாளிகை (அச்சில்) | ,, | 2 | 0 |
| பூக்குடலை | ,, | 2 | 0 |
| நீரோ | ,, | 1 | 0 |
| கானல்நீர் | ,, | 1 | 0 |
| சிந்தனைத் துளிகள் | ,, | 0 | 4 |
| டெக்காமெரான் I | பொக்காஸியோ | 3 | 8 |
| டெக்காமெரான் II | ,, | 3 | 8 |

**பாரி நிலையம்**
59, பிராட்வே, சென்னை 1


Jacket Printed at Neo Art Press, Madras-2